THE SUDAROLI

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி

30.00

பக்கங்கள் -28

வார சஞ்சிகை

ஒக்ரோபர் 17- ஒக்ரோபர் 23, 2012

October 17- October 23, 2012

மனஉளைச்சலில் சரத்பொன்சேகா!



முரண்பாடுகளை பூட்டிய அறைக்குள் பேசுங்கள்!

மத மேலாதிக்கத்தின் மஞ்சள் அங்கி வன்முறைகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



World's No. 1 Home Appliance Company

PROTON
TIME TO CHANGE

மாக்கறிகளை களஞ்சியப்படுத்த பிரத்தியோக அறையுடன் கூடிய

புதிய மூன்று கதவுகள் குளிரூட்டி

Whirlpool வழங்கும் Proton வகையான, மரக்கறிகளை பிரத்தியோகமாக களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற மூன்று கதவுகள் கொண்ட இக் குளிரூட்டியானது. நீரை விரைவாக குளிர்ப்பிப்பதோடு. வேகமாய் ஐஸ் கட்டிகளையும் உருவாக்குகின்றது.

• குளிரூட்டியின் கதவை 8 மணித்தியாளங்கள் மூடி வைத்திருப்பின் தன்னிச்சையாக எகோ மூட் முறையில் இயங்க ஆரம்பிக்கின்றது. இதன் மூலம் மின்னையும் சேமிப்பதோடு. உட்புறத்தை குளிர்ச்சியாக வைத்திருக்கின்றது.

• பாஸ்ட் ஐஸ் மூட் முறை மூலம் 30% வரை வேகமாய் குளிந்த தன்மையை தருகின்றது.

• ஒடோ மூட் முறை மூலம் தன்னிச்சையாக குளிரூட்டியின் சகல பாகங்களிற்கும் குளிர்ச்சியை பெற்று கொடுக்கின்றது.

• நவீன தொழில்நுட்பத்தில் குளிர் வாயுவை வழங்குகின்றது.

• பவர் டியோடைசர் மூலம் உணவின் போசனைத்தன்மை பாதுகாக்கப்படுகின்றது.

• LED ஒளியுடன் கூடிய உட்கட்டமைப்பு

• நிபந்தனைகளுக்குட்பட்டது
• உண்மையான பொருட்கள் இங்கு காட்டப்பட்டுள்ள உருவங்களிலிருந்து வேறுபடலாம்

உலகின் முதல்தர வீட்டு மின் பாவனைப்பொருட்கள்

குளிரூட்டி

ஒற்றைக்கதவு குளிரூட்டி
WRD190
ரூ.39,900

ஒற்றைக்கதவு குளிரூட்டி
மாஸ்டர் பீஸ்19
ரூ.39,900

இரட்டைக்கதவு குளிரூட்டி
WAM250
ரூ.62,900

குளிரூட்டி
MMMP24E
ரூ.59,900

குளிரூட்டி
WAM290
ரூ.68,900

WAM330
ரூ.76,900

F263DLX
ரூ.79,900



F283DLX
ரூ.83,400

FP313DDLX
ரூ. 89,900

சலவை இயந்திரங்கள்

SPIN601
ரூ.24,900

SPIN801
ரூ.33,400

SPLASH
ரூ.49,900

20% கழிவு

360H-GRAPHITE
ரூ.84,900
விசேட விலை
ரூ.67,900

நாடெங்கிழுமுள்ள A-Z Electronics (Pvt) Ltd. JVC / Haier காட்சியறைகளில் கிடைக்கும்

பிரான்ஸ் லூர்த்து மாதா தேவாலயத்தில் 68ஆவது அதிசயம்



பிரான்சிலுள்ள புகழ்பெற்ற லூர்த்து மாதா தேவாலயத்தில் 68 வது அதிசம் நிகழ்ந்ததாக அந்தத் தேவாலய குருமார் அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

1965ம் ஆண்டில் இருந்து முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டு இடுப்புக்கு கீழே இயங்காத நிலையில் இருந்த இத்தாலியைச் சேர்ந்த லுவிகினா திறாவர்கோ என்ற கன்னியாஸ்த்திரி லூர்த்து மாதா தேவாலயத்திற்கு வந்து தொடர்ச்சியான பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்ததாகவும் இதனால் அவர் தனது கால்களை அசைத்து தானே எழுந்து நின்றதாகவும் இது லூர்த்து மாதா தேவாலயத்தில் நடந்த 68 வது அதிசயம் என்றும் தேவாலய குருமார்கள் நேற்று அறிவித்தனர். முடக்குவாத நோய் தாக்கியதிலிருந்து பல்வேறு சிகிச்சைகளும் குறிப்பாக அறுவைச் சிகிச்சைகளும் கூட செய்யப்பட்ட போதும் அவர் எழுந்து நடக்க முடியாமல் சக்கர சாற்காலியிலேயே காலந்தள்ளியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் குணமாகியுள்ளதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதுடன் மருத்துவத்துறையில் இது ஒரு அதிசயம் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

1858 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி பெர்னடெட் என்ற மாடு மேய்க்கும் சிறுமிக்கு கன்னி மரியாள் காட்சியளித்த இடமே லூர்த்துமாதா தேவாலயமாக வழிபடப்பட்டு வருகிறது.

இந்த ஆலயத்தில் அருகிலுள்ள மலைக்குகையிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் புனித நீரை பருகுவதன் மூலமும் அதில் நீராடுவதன் மூலமும் தங்களது தீராத நோய்கள் குணமடைவதாக நம்பும் மில்லியன் கணக்கான மக்கள் ஆண்டு தோறும் பிரான்சின் கீழ் பகுதியில் உள்ள இந்த ஆலயத்துக்கு சென்று வருகின்றனர்.

இதுவரை லூர்த்து மாதாவின் அருளால் தங்களது நோய்கள் குணமடைந்ததாகவும் துன்பங்கள் நீங்கியதாகவும் ஏழாயிரம் பேர் சான்றுகளை சமர்ப்பித்த போதிலும் அவற்றில் 68 சம்பவங்களே அதிசயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

LG
Life's Good

உயர் தொழில்நுட்பதிலான
கவர்ச்சிகரமான கைப்பேசி

ஸ்மார்ட் குக்கி

LG T-375 ரூ. 14,990/-

டுவல் சிம்
WiFi CERTIFIED
2MP
3.2
E-mail

கொரியாவின் தொழில்நுட்பம்

TRC APPROVED

1 YEAR WARRANTY

அழைப்புகள்: 0779942727
அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தர்கள் வீரங்களுக்கு: 0777 273990 | 0777 314704
முகவர்கள் வீரங்களுக்கு: 077 7765444 | வீட்டு விநியோகங்களுக்கு: 077 7314700

நாடெங்கிழுமுள்ள Abans / Abans Plus / JVC / Haier / A-Z Electronics (Pvt) Ltd. காட்சியறைகளில் கிடைக்கும்

3-60 மாதங்கள் வரை வட்டியின்றிய மாதாந்த மீள் கொடுப்பனவு முறைகள்

HSBC BOC LNB

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத மேலாதிக்கத்தின் மஞ்சள் அங்கி வன்முறைகள்

• சந்திரசேகர ஆசாத்

பட்டப் பகலில் பகிரங்க இடத்தில் பலநூறு பேர் மேற் கொண்ட வன்முறைகளின் போது, ஒரே ஒரு சிவப்புச் சட்டைக்காரர் மட்டும் தான் ஸ்தலத்திலே கைது செய்யப் பட்டார் என்பதும், எந்த ஒரு புத்தபிக்குவும் கூட கைது செய்யப்படவில்லை என்ப தும் இந்த விசாரணை எப்படி அமையும் என்பதை ஏற் கனவே தெளிவுபடுத்தி விட்டன. எனவே அதுபற்றி இங்கு எதுவும் குறிப்பிடு வதில் எவ்வித பயனும் இல்லை.

சர்வதேச அளவில் அபாயத்தின் நிறமாகச் சிவப்பே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இலங்கைவாழ் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பொறுத்தவரையில் மஞ்சள் நிற அங்கிகளே மிகவும் பயங்கரமானவையாகத் தோற்றமளிக்கின்றன. 1958 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரங்களில் நேரடியாகவே பங்கு கொண்டு தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓட வைத்தது முதல், முஸ்லீம் இந்து வழிபாட்டுத் தலங்களுக்கு எதிராக வன்முறைகளை மேற் கொள்வது வரை மஞ்சள் ஆடையணிந்த புத்த பிக்குகளின் பங்கை எவரும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. இப்படியான வன்முறை நடவடிக்கைகள் தற்சமயம் வெளிநாட்டுத் தூதரகங்களையும் நோக்கி விரிவடைய ஆரம்பித்துவிட்டது.

நோர்வே தூதரகம், ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் எனத் தொடர்ந்த வன்முறைகள் இப்போது பங்களாதேஷ் தூதரகத்தைச் சேதப்படுத்தியுள்ளது. பங்களாதேஷில் பௌத்த விகாரைகள் சேதமாக்கப் பட்டமையையும் சில பௌத்த மதத்தினர் தாக்கப் பட்டமையையும் ஊர்வலமாகச் சென்ற சில பிக்குகள் தலைமையிலான ஒரு குழு தூதராலயத்தின் முன் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டது. பங்களாதேஷ் தூதுவரிடம் ஒரு மகஜரைக் கையளிக்கும் முகமாகச் சில பிக்குகள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். வெளியே நின்ற பிக்குகள் உட்பட சிலர் தம்மையும் உள்ளே விடும் படி கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு குறிப்பிட்ட தொகையினரே உள்ளே அனுமதிக்கப்பட முடியும் என அவர்கள் தடுக்கப் பட்டபோது தூதரகம் தாக்கப் பட்டது. அதன் யன்னல்கள் உடைக்கப்பட்டதுடன் பெயர்பலகையும் அடித்து நொருக்கப்பட்டது.

பின்பு சிறிது நேரத்தில் பொலிசார் அவ்விடத் திற்கு வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் ஒரு சிவப்புச் சட்டை அணிந்த நபரை அங்கிருந்து பிடித்துச் சென்றதாகவும் சில தகவல் கள் வெளிவந்துள்ளன. தற்சமயம் இச்சம்பவம் தொடர் பாகப் பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டி ருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டப் பகலில் பகிரங்க இடத்தில் பலநூறு பேர் மேற்கொண்ட வன்முறைகளின் போது, ஒரே ஒரு சிவப்புச் சட்டைக்காரர் மட்டும் தான் ஸ்தலத்திலே கைது செய்யப்பட்டார் என்பதும், எந்த ஒரு புத்த பிக்குவும் கூட கைது செய்யப்படவில்லை என்பதும் இந்த விசாரணை எப்படி அமையும் என்பதை ஏற்க னவே தெளிவுபடுத்திவிட்டன. எனவே அதுபற்றி இங்கு எதுவும் குறிப்பிடுவதில் எவ்விதப் பயனும் இல்லை.

வெளிநாட்டுத் தூதரகங்கள் தாக்கப்படும் அநாகரிக அரசியல் இலங்கைக்குப் புதியதல்ல என்றாலும் இச் சம்பவம் தொடர்பாகவும் இதன் பின்னணி தொடர் பாகவும் ஆராயாமல் இருக்க முடியாது.

பங்களாதேஷில் வசிக்கும் ஒரு பௌத்தர் தனது பேஸ்புக் இணையத்தளத்தில் புனித திருக்குர்ஆன் எரிந்த பிரதி ஒன்றைப் பதிவு செய்திருந்தார். குர் ஆன் முஸ்லிம்களின் புனித நூலாகக் கொள்ளப் படு கிறது. அதற்கு ஏற்படுத்தப்படும் ஒரு சிறிய அவ மதிப்பும் பாரதூரமானதாகவே முஸ்லிம் மக்களால் கருதப்படுகிறது. எனவே அச்சம்பவம் அங்குள்ள முஸ்லிம் மக்களை கொதிப்படையச் செய்தது. இந்நிலையில் முஸ்லீம்கள் அந்த ஊரில் அமைந்திருந்த புத்த விகாரைகளைச் சேதப்படுத்தியதுடன் சில பௌத்த மதகுருக்களையும் தாக்கினர். எனினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இஸ்லாமியரின் புனிதநூல் அவமதிக்கப்பட்ட மைக்குப் பதில் நடைமுறை பௌத்த விகாரைகளைச் சேதப்படுத்துவது தான் என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியாதோ அப்படியே புத்த கோவில்கள் சேதப்படுத்தப்பட்டமைக்குப் பதில் நடவடிக்கையாக தூதரகம் தாக்கப்பட்டமையையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு தனி நபரோ அல்லது ஒரு சிலரோ மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் உலகில் பரந்த வன்முறைகளைத் தூண்டும் வகையில் நகர்த்தப்படக்கூடாது. இது பற்றி பங்களாதேஷில் உள்ள ஒரு சில வன்முறையாளர்கள் எவ்வாறு கலைப் படவில்லையோ அவ்வாறே இலங்கையிலும் அன் பையும் அகிம்சையையும் போதிக்கும் புத்த பகவானின் சீடர்களும் பொருட்படுத்தவில்லை.

அண்மையில் டுவிட்டர் இணையத் தளத்தில் முஸ்லிம்களின் அப்பாவித்தனம் என வெளியிடப் பட்ட ஒரு ஒரு காணொளி உலகம் முழுவதுமே வன் முறைகளைத் தூண்டியது. ஈராக்கில் அமெரிக்கத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இதன் தூதர் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். அவ் வெளியீட்டுக்கு எதிராக இலங்கையிலும் பல ஆர்ப் பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இப்பிரச்சினையின் தாக்கம் முற்றாகவே மறை யும் முன்பே ஒரு பௌத்தரால் குர்ஆனின் எரிந்த பிரதி இணையத்தில் காண்பிக்கப்பட்டது தற்செய லாக இடம்பெற்ற ஒரு சம்பவம் என்று சொல்லிவிட முடி யாது. வேண்டுமென்றே முஸ்லிம்களை வன்முறை யில் இறக்கி விடுவதற்காகத் திட்டமிட்டு ஒரு பெரும் பின்புலத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என்று கேள்வி எழும்புகிறது.

ஆனால், இப்படியான ஒரு எதிர்பார்ப்பு நிறை வேற முடியாத வகையில் பங்களாதேஷ் இறுக் கமான நடவடிக்கைகளை எடுத்த காரணத்தால் இக்கலவரங்கள் அங்கு கொக்ஸ்பசார் பகுதிக்கு வெளியே பரவி விடாதபடி தடுக்கப்பட்டு விட்டது. அவ் வாறே பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் சீனா, ஜப்பான், மியன்மார், தாய்லாந்து, வியட்நாம், திபேத் போன்ற நாடுகளிலும் எவ்வித எதிர்விளைவு களையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அதே வேளையில் இலங்கையில் இப்பிரச்சினை தொடர்பாக பங்களாதேஷ் தூதரகம் தாக்கப்பட்டுள்ளது. இது ஒரு வன்முறை வடிவமாகவே தோன்றுகிறது.

பங்களாதேஷில் பௌத்த விகாரைகள் தாக்கப் பட்டதைக் காண்பித்தே சிங்கள பௌத்த கடுங்கோட் பாட்டாளர்களால் தூதரகம் மீது தாக்குதல் நடத்தப் பட்டது.

இப்படியான ஒரு தாக்குதலை நடந்த மட்டுமல்ல ஒரு கண்டனத்தைக்கூட வெளியிடுமளவுக்கு ஒரு தார்மீக உரிமை உண்டா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

500 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஒரு முஸ்லிம் தர்கா புத்த பிக்குகள் தலைமையிலான ஒரு குழு வால் அனுராதபுரத்திலே இடிக்கப்பட்டது. இதற்காக எந்த ஒரு பௌத்தமதத்தவரோ அல்லது சிங்கள அரசியல்வாதியோ புத்தபிக்குவோ வருத்தம் தெரிவிக்க வில்லை.

தம்புல்லவில் 60 ஆண்டுகள் பழமைவாய்ந்த பள்ளிவாசல் தம்புல்ல ரன்கிரி விகாரை பீடாதிபதி யின் தலைமையில் வந்து ஒரு குழுவினரால் இடிக் கப்பட்டது. சில மாதங்களின் பின்பு ரன்கிரி விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அப்பகுதியை பௌத்த புனித பிரதேசமாக பிரகடனம் செய்ய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக வாக்குறுதியளித்துள்ளார்.

இதை விட, தெஹிவளை, குருநாகல் உட்பட பல இடங்களில் தொழுகைக்குச் செல்லவிடாது தடுத்தல், புனித குர்ஆனை வீதியில் தூக்கி வீசல், மசூதிக்குள் புகுந்து பிரித்தோதல் என முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இவ்வாறு முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்துவதும் அவமதிப்பதுமான கீழ்த்தரமான வன்முறைகளில் இறங்கும் பௌத்த சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்களுக்கு புத்த விகாரைகள் சேதப்படுத்தும்போது எதிர்ப் புக்குரல் கொடுக்க என்ன உரிமை இருக்கிறது?

அப்படியானால் பௌத்த மத மேலாதிக்கத்திற்கு உட்பட்டே ஏனைய மதத்தவர்கள் தங்கள் வழிபாட்டு முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது இவர்களின் கொள்கையா? ஏனைய முஸ்லிம் கிறிஸ்தவ இந்துமத மக்கள் தங்கள் மதவழிபாடுகளை பௌத்த மேலாதிக்க சக்திகளின் விருப்புக்கமையவே மேற்கொள்ள வேண்டுமா? இங்கு பங்களாதேஷ் தூதரகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட போது எல்லோரின் கவனமும் அதில் குவிந்திருக்க இன்னொரு புறம் இடம் பெற்ற சில விஷயங்களை நாம் அலட்சியப்படுத்தி விடமுடியாது.

படையினரால் தம்புல்லவில் ஒரு பகுதியில் காணிகள் திருத்தப்பட்டு அதில் இம்மாத இறுதிக்குள் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசலும் சுற்றியுள்ள குடியிருப்புகளும் நிறுவப்படவேண்டும் எனக் கட்டளையிடப் பட்டது, தற்சமயம் பள்ளிவாசல் உள்ள இடமும் குடியிருப்புகளும் புனிதப் பிரதேசங்களையும் அதே வேளையில் விஜயன் இங்கு வந்து இறங்கிய காலத் திலேயே பஞ்சஈஸ்வரங்களில் ஒன்றாக இருந்த சிலாபம் சிவன் கோவில் முன்பு ஒரு விகாரையாக இருந்ததெனவும் அது சம்பந்தமான 6 ஆம் பராக்கிரபாகுவின் ஓலைச்சுவடி எங்கோ மறைக்கப்பட்டு விட்டதாகவும் எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவித் துள்ளார். அதாவது தம்புல்லவில் பள்ளிவாசல் அகற் றப்படுகிறது. சிலாபத்தில் சிவன் கோவில் ஆக்கிரமிக் கப்பட அடித்தளம் இடப்படுகிறது.

இங்கு நாம் இந்த பௌத்த மேலாதிக்க வாதி களிடம் சில கேள்விகளை எழுப்ப விரும்புகிறோம்.

சொந்தநாட்டில் வாழும் ஏனைய மதத்தவர்களுக் கும் மதத்தைப் பின்பற்றும் மக்களுக்கும் எதிரான வகையில் அடக்குமுறையை ஏவியும் அவர்களின் வழிபாட்டு உரிமைகளை மறுத்தும் அவர்களின் மத உணர்வுகளை அவமதித்தும் மேலாதிக்க வெறியாட் டம் போட்டும் சகல நியாயங்களையும் காலில் போட்டு மிதிக்கும் உங்களுக்கு இன்னொரு நாட்டில் உங்கள் மதம் அவமதிக்கப்படும்போது அதை எதிர்த்துக் குரல் கொடுக்க என்ன உரிமை இருக்கிறது?

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக இந்தியத் தமிழக மக்களோ அல்லது போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றபோர்க் குற்றங்கள் பற்றி அமெரிக் காவோ குரல் கொடுத்தால் அதை உள்நாட்டு விவ காரங்களில் தலையீடு எனக் குறிபிடுகிறீர்கள் அப் படியானால் பங்களாதேஷ் நாட்டில் இடம்பெற்ற உள் நாட்டு விவகாரங்களில் நீங்கள் ஏன் தலையிடு கிறீர்கள்?

அதாவது புத்த பெருமானின் புனிதமான மஞ்சள் அங்கி இன்று நியாயங்களையும் மனிதத்தையும் மதிக்காத ஒரு சில வன்முறையாளர்களால் கவச மாகப் பயன்படுத்தப்படுகிறது. இது இலங்கையின் பௌத்த சிங்கள மேலாதிக்க இராட்சியத்தின் மூன் றாந்தர செயற்பாடுகளின் வெளிப்பாடு என்பதில் எவ் வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏட்டுச்சுரைக்காய்!

தொலையா நினைவுகள்...

தெரணியகலையிலிருந்து அங்கெட்டிகம வரை செல்லும் பாதை ஆற்றோரமாக ஆற்றின் போக்கிற்கு ஏற்ப வளைந்து நெளிந்து செல்கிறது. அப்பாதையில் உள்ள நக்காவிற்றை என்ற இடத்திலிருந்து ஆற்றுக்கு மேலாக ஒரு தொங்கு பாலம் கட்டப்பட்டுள்ளது. அதனைக் கடந்து சென்றால் அக்கரையில் தொடங்கும் மண் பாதை டபார், மாலிபொட ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு உதவுகிறது.

அந்தப் பாதையில் வாகனங்கள் செல்வது மிகவும் குறைவு. அந்த நீண்ட பாதையைத் தோட்டத் தொழிலாளர்களும் அவ்விடத்தில் வாழ்ந்த கிராமவாசிகளும் பயன்படுத்துவர். தெரணியகலை நகரத்திலிருந்து பஸ்ஸில் புறப்பட்டு நக்காவிற்றையில் இறங்கி அந்தத் தொங்கு பாலத்தைக் கடந்து நான் பணி புரிந்த டபார் தோட்டத்திற்குச் செல்ல வேண்டும். மிக ஒடுங்கியதும் கால் பதித்து நடக்க ஆங்காங்கே பலகைகள் பொருத்தப்பட்டதுமான பாலத்தில் நடப்பது அச்சத்தை ஏற்படுத்துவதாகவே இருந்தது. பாலத்தில் நடக்கும்போது தொங்கும் பாலத்தின் அசைவு பயத்தை ஏற்படுத்தும். பாலம் ஆடாமல் அசையாமல் நடக்க வேண்டுமென்பதற்காக என்னை நான் சமநிலைப்படுத்தப் பழகிக் கொண்டேன். ஒருநாள் என்னுடன் பாலத்தில் பயணம் செய்த ஒரு கிராமவாசியிடம் இந்த இடத்தில் ஒரு சீமெந்தினாலான பாலம் அமைப்பதில் என்ன பிரச்சினை? என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன கதை என்னைப் பலவாறு சிந்திக்கத் தூண்டியது.

அந்த ஆற்றினைக் கடக்க நிரந்தரமான சீமெந்துப் பாலம் அமைக்கும் திட்டத்துடன் ஒருநாள் சில பொறியியலாளர்கள் அந்தப் பிரதேசத்துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் இந்தத் தொங்கு பாலத்தைப் பார்த்தார்கள். அதன் ஊடாகப் பயணம் செய்யப் பயந்தார்கள்.

இதை எந்த முட்டாள் கட்டினவன் இதனூடாகப் பயணம் செய்வது ஆபத்து எனச் சொல்லிக் கொண்டார்கள். இந்தத் தொங்கு பாலத்தினூடாக ஆற்றினைக் கடக்காமல் அதன் இருகரைகளினதும் நில அமைப்பையும் பாலம் கட்டுவதற்கான ஏனைய ஆதாரங்களையும் எவ்வாறு பெறலாம் என இக்கரையிலிருந்து சிந்திக்கவும் வாதிடவும் தொடங்கினர். அவர்கள் கற்றதன்படி பாலத்தினூடாக அக்கரைக்குச் செல்வதற்குத் திடமான முடிவுகள் எதனையும் அவர்களால் உடனடியாக எடுக்க முடியவில்லை. அப்பொழுது பொறியியலாளர்களுக்கு உதவியாக வந்திருந்த தொழிலாளி ஒருவன் பாலத்தினூடாக அக்கரைக்குச் சென்று பாலத்தினூடாகவே மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தான். அதனைப் பார்த்த பொறியியலாளர்கள் ஆச்சரியப்பட்டனர். அவன் இக்கரையை அடைந்ததும் "ஆஹா என்ன அருமையான பாலம் இதனூடாக நடந்து செல்வதில்ற்தான் எத்தனை மகிழ்ச்சி" என ஆரவாரம் செய்தான். அவர்களோ அசடுவழிய ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அன்று அவன் செய்ததும், சொன்னதும், பொறியியலாளர்களை ஏனோ ஏளனம் செய்தது.

இது நிகழ்ந்து பல வருடங்களாகி விட்டன. நான் பயணம் செய்த அன்றைய நாள்வரை பாலத்தின் வலிமை அவ்வாறே பேணப்பட்டு வந்தது. அந்த ஆற்றின் மேல் சீமெந்துப் பாலம் கட்டும் திட்டமும் இன்னமும் இருந்து கொண்டே இருக்கின்றது என்று அவன் சொன்னபோது,

அன்று அந்தத் தொழிலாளி அந்தத் தொங்கு பாலத்தால் மிக வேகமாக நடந்து வந்த செயல் பொறியியலாளர்களின் படிப்பைக் கேலி செய்வதாக இருந்திருக்கும் என உணர்ந்தேன். செயற்படாமல் தர்க்க ரீதியாகச் சிந்திப்பதிலேயே காலத்தை வீணாக்கும் செயலே எம்மைப் போல் படித்தவர் மத்தியில் நிலைத்துவிட்டது. படித்தல் என்பது பல விடயங்களையும் அறிந்து வைத்திருந்து பரீட்சை எழுதுவதும் சான்றுகள் பெறுவதும்தான் என்றாகிவிட்டது. பட்டங்களைப் பெற்றுப பாராட்டுப் பெறுபவதடன் எல்லாமே கருகிப் போய் விடுகின்றன. பட்டங்கள் நம்மை நவமான மாற்றங்களுக்குள் ஈடுபடவிடாது தடுத்து நிற்கிறது. செயற்படத்துணியாது திட்டங்களால் கற்பனைகளை வளர்த்துக் கொண்டே காலத்தைக் கடத்துவதை விடுத்துச் செயற்படத் துணிவோம்.

'படித்த மேதாவிகளால் கயிற்றுப் பாலத்தைக் கடக்க இயலாது' என்றதோர் அரிய அந்நிய பழமொழி உண்டு. அந்தப் பழமொழிக்கு உயிரூட்டும் செய்கையாகவே இந்தப் பொறியியலாளர்கள் நடந்து கொண்டார்கள் என்றே நம்பினேன்.

"ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பதையும் இச் செயல் குறிக்கிறது.

நெடுந்தீவு மகேஷ்

எப்படித்தான் பொறுப்பாரோ?

கவிஞர்- அபீர்ராஜன்

வாழத் துடிக்கும் எமது மக்களின் வாழ்வைக் குலைத்து அவர் தம் சுதந்திரத்தைத் தடுத்து உரிமைகளைப் பறித்து சட்டம் நீதி நியாயங்களை விலக்கி சுயநல நோக்கத்தோடு எம்மை வருத்தும் கொடுமைக்குள்ளே துடிக்கும் ஒரு கவிஞரை இங்கே பாருங்கள். அவர்தம் வேதனை பொறுக்க இயலாததாகி இவற்றை யார்தான் பொறுப்பாரோ எனப் புலம்ப வைக்கிறது.

காலமெல்லாம் தவமிருந்து
கடவுளிடம் வரம் வேண்டி
ஆசைக்கு ஆண்பிள்ளை
அருமையாகப் பெற்றெடுத்து
அறிவு வளர்ச்சி பெற அமுதான
கலையூட்டி பாசக்
கோட்டையிலே பக்குவமாய்
வளர்த்து வந்த நேசப்
பெற்றோர்முன் நேசனைப்
பறிகொடுக்க யார்தான்
பொறுப்பாரோ எப்படித்தான்
பொறுப்பாரோ?

பெற்றெடுத்த பிள்ளையைப் பறிகொடுத்துப் புலம்பும் பெற்றோர் எவ்வாறு பொறுத்துக் கொள்வாரோ என ஏங்குகிறார்.

பகலிரவு பாராது
பட்டினியால் மிகநொந்து
கஸ்ரப்பட்டுழைத்து காணிபூமி
தனை விற்று மேலான
வாழ்வையெண்ணி
மிச்சம்பிடித்து வைத்து
வெளிநாடு பறந்தோடி
வேலைதேடச் சென்றோரின்
காசையும் பறித்தெடுத்துக்
கைதிகளாய் வைத்திருந்தால்
யார்தான் பொறுப்பாரோ
எப்படித்தான் பொறுப்பாரோ?

பகலிரவாகப் பட்டினி கிடந்து உழைத்துச் சேர்த்த பணத்தையும் வீடு வாசல் நகை நட்டு எனப் பலதையும் விற்றும் அடகுவைத்தும் சேர்த்த பொருளையும் கொடுத்து தமது வேதனையைப் போக்க வெளிநாடு போக எண்ணியவர்கள் வெளிநாடு போகாமல் ஏமாற்றத்துக்கு உள்ளாகிக் கடைசியிலே காசும் தொலைந்து மேலும் துயரமடைந்து சிறையிலே வாடும் துயரத்தை யார்தான் பொறுப்பாரோ என்கிறார் இவர்.

அன்பான குடும்பம்
அலைக்கழிந்து போகாமல்
பண்பாட்டுடனே பலகாலம்
வாழவெண்ணி
என்போடு தசை நோக
அரும்பாடு பட்டுழைத்துத்
தெம்பான வீட்டினையும் தேடிய
பொருள்களையும்
வம்பான செய்கையினோர்
வஞ்சனையாலே
கவர்ந்தால்
யார்தான்
பொறுப்பாரோ
எப்படித்தான் பொறுப்பாரோ?

அன்போடும் பண்போடும் வாழ்ந்த குடும்பத்தினர் உடல் நோக அரும்பாடு பட்டுழைத்த செல்வமெல்லாவற்றையும் வம்பர்தம் வஞ்சனையாலே இழந்தால் எவ்வாறு பொறுத்திருக்க இயலும் என ஏங்குகிறார்.

வேலைக்குச்
சென்றவர்
தான்
வீடுவரவில்லையென
மாலைவரை
காத்திருந்து
மங்கையவள் கதறியழ
வீதியெலாம் குத்தகைக்கோ
விலைக்கோ வாங்கிவிட்ட
வர்போல்
மூலைகளாய்ப் பார்த்து
நின்று மூர்க்கத்தனம்
செய்கின்றார்.
நாதியில்லார் என்றோ
நாயைப்போல் கொல்வதனை
யார்தான் பொறுப்பாரோ
எப்படித்தான் பொறுப்பாரோ?

வேலைக்குப்போன கணவன் திரும்பவில்லையே எனப் பார்த்திருக்க வீதியெலாம் கொலைகாரர்கள் மூர்க்கத்தனமாக நாயைப்போல் கொன்று தொலைப்பதனை யார்தான் பொறுப்பாரோ என்கிறார் கவிஞர்.

வேளைக் குணவில்லை
வேலை செய்ய இடமுமில்லை
மாலையிலே ஒளியேற்ற
மண்ணெண்ணை
விளக்கில்லை
சாலையிலே செல்லவென்றால்
ஆமிவலம் பெரிய தொல்லை
ஆலையெல்லாம் மூடியதால்
அடுப்பினிலே புகையுமில்லை
யாரிடம் சொல்லுவதோ
எப்படித்தான் சொல்லுவதோ
ஆண்டவன்தான்
பொறுப்பாரோ எப்படித்தான்
பொறுப்பாரோ?

ஆலைகள் இல்லை வேலை செய்ய இடமுமில்லை அடுப்பிலே நெருப்பில்லை வேளைக்கு உணவு மில்லை வீட்டிலே விளக் கெரிக்க மண்ணெய்யும் இல்லை ஆனால் வீதியெங் கும் ஆமித் தொல்லை இத்தனை தொல்லை களையும் ஆண்டவனும் பொறுத்துக்கொண்டோ இருக்கிறான் என அங்க லாய்க்கிறார் அபீர்ராஜன் எனும் கவிஞர். இவர் அன்ரனி பீற்றர் எனும் இயற்பெயரை உடையவர், மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கலைமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியராகப் பணிதொடர்ந்தவர் தற்பொழுது யாழ்பாணம் கல்வி வலயத்தில் ஓர் ஆசிரிய ஆலோசகராகப் பணிபுரிகின்றார் இவர் எழுதித் தொகுத்த மன ஓசைகள் எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட கவிதை இது 1999இல் வெளிவந்தது. இன்றும் பொருந்தும் வகையில் விரிந்த உண்மைகள் ஆச்சரியம் தருகின்றன. தொடர்ந்தும் அவரது இலக்கியப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

மைதிலி தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உளைச்சலில் சரத்பொன்சேகா!



பதவிகளை வகிக்கும் பொழுது அதனால் கிடைக்கப்பெறும் அதிகாரங்களின் மமதையில் மனச்சாட்சியின் குரலுக்குச் சற்றேனும் மதிப்பளிக்காது மனிதநேயத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடுபவர்கள் பிற்காலத்தில் பட்டம் பதவிகளை இழந்து நிற்கும் போதுதான் அவற்றின் பின் விளைவுகள் அவர்களின் மனச்சாட்சியை உறுத்துகின்றன.

முன்னாள் இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா வெலிக்கடைச் சிறைச்சாலையில் தப்பமுடியாத ஒரிடத்தில் இரண்டரை வருட காலமாகச் சிறைப்படுத்தி வைக்கப்பட்டமையானது இவ்வருடம் வைகாசி மாதத்தில் ஜனாதிபதியின் மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதுடன் ஓர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆயினும் அவர் விடுதலையாகி ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட அவர் என்ன நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டாரென்பது குறித்து அவரே இன்னமும் புரிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதிருப்பதாகக் கூறுவது அவருடைய உணர்வுகளின் வெளிப்பாடுகளையே புலப்படுத்துகின்றது.

தற்பொழுது சரத்பொன்சேகாவினால் புதிதாக உருவாக்கப்படும் ஓர் பொதுவான அரசியல் எதிரணியின் அறிமுக நிகழ்விற்கு முதல் நாள் இடம்பெற்ற ஓர் நேர்காணலின்போது சண்டே ரைம்ஸ், பத்திரிகையாளர்களுக்கு அவரது மன ஆதங்கங்களையும் அச்சம் கலந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ளார்.

"நான் சிறைக்கு வெளியே வந்த காலந்தொட்டும்; அதற்கு முன்னரும் கூட ஊழல் நிறைந்த இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஒன்று திரளும்படி எதிர்த்தரப்பு சக்திகளுக்கு ஆதரவாகவே பேசிவந்துள்ளேன். இந்த அரசாங்கத்தின் கீழ் எதுவுமே சரியான பாதையில் செல்லவில்லை. ஜனநாயகம் பேராபத்தில் உள்ளது, மக்களுக்கான நீதி கிடைப்பதில்லை; நீதித்துறையில் தலையீடுகள், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய சேவைகளில் குளறுபடிகள் எனச் சீர்குலைந்த நிலையில் உள்ளன" எனக் கூறுகிறார் சரத்பொன்சேகா.

இப்பொழுது பொன்சேகாவினால் உருவாக்கப்படும் அரசியல் அணிக்குத் தலைவர் என்று ஒருவரும் இருக்கமாட்டார் எனத் தெரியவருகின்றது.

தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவினர் தனித்தே செல்ல விரும்பினார்கள். ஆனால், கால ஓட்டத்தில் நிலைமைகள் மோசமடைவதை அவர்கள் அனுபவங்களினூடே தெளிவாகப் புரிந்துகொண்டனர். இருந்தும் ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் கூட நிலைமைகள் ஓரளவு சிறப்பானதாக இருக்கின்றதென்பதை காட்ட முயல்கின்றனர்.

அது முற்றிலும் தவறானது. அது கூட ஒருவித்தில் மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும் எனக் கூறிய பொன்சேகா அவரது விடுதலைக்கு ஓர் பலமான ஆதரவாகச் செயற்பட்ட ஜே.வி.பி கட்சியினரையும் தமது அணியில் ஓர் அங்கமாகச் சேர்த்துக்கொள்ளவில்லையென்பதையும் தெளிவாகக் கூறினார்.

ஜே.வி.பி யினரின் அரசியற்

> *முன்னாள் தளபதி இப்போது கொழும்பு கோட்டையில் உள்ள அவ்வளவு பெரிதாக இல்லாத ஒரு மட்டிலான அலுவலகத்தில் இருந்துகொண்டு ஆட்சியினருக்கு எதிராக ஓர் புதிய அரசியல் அணியை உருவாக்கும் நோக்கத்துடன் பலதரப்புகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றார். உருவாகும் எதிர்ப்பு அரசியல் அணியானது இறுதியில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் போதுமான அளவிற்கு வலுவுள்ளதாக வளர்ந்துவிடும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டுள்ளார்.*

தமிழில் ஜஸ்ரின்

"அணிக்கான தலைமை என்பதை நாங்கள் இப்பொழுது மறந்து விடுவோம். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதித் தேர்தல் வரும்போது ஒரு தலைமை குறித்துச் சிந்திப்போம். உதாரணத்திற்கு தலைமைப் பதவிக்காக நாங்கள் சண்டை செய்தால் எதுவுமே சரியான திசையில் நகரமாட்டா. தற்போதுள்ள நாட்டின் தலைவருடன் போட்டியிட்டு அவரை வீழ்த்துவதற்கு நம்மிடையேயிருந்து ஒருவர் வெளிவர வேண்டும். அதற்கு முன்னராக முதல் நடவடிக்கையாகப் பலமான ஓர் அணியினை உருவாக்குதல் வேண்டும். அதன் பின்னரே மக்கள் இவ்வணியின் தலைமைப் பதவிக்குத் தகுதியானவர் யாரென்பதை தீர்மானிப்பார்கள்" எனத்தெரிவித்துள்ளார் சரத்பொன்சேகா.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இத்தகைய ஓர் பலமான எதிரணியைப் பொதுவில் உருவாக்குவதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும், அதனைத் தொடர்ந்து எஞ்சியவர்களான ஏனைய சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், தொழில் வல்லுனர்கள் மற்றும் புத்தி ஜீவிகள் ஆகியோர் அணியில் இணைந்து கொள்வர் எனவும் பொன்சேகா கூறியுள்ளார். அத்துடன் ஐ.தே.கவின் தலைமையுடன் இதுவிடயம் தொடர்பில் அணுகியதாகவும் அது நடைபெறும் சாத்தியமுள்ளதாக நம்புவதாகவும் முன்னாள் தளபதி

இணைத்துக்கொள்ள விரும்பவில்லையெனவும் கூறியுள்ளார். ஊழலே இன்று நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய தொல்லையாக உள்ளது. இந்த அரசிற்கு வாக்களித்த மக்கள் எவரும் அபிவிருத்தியின் நன்மைகளை அனுபவிக்கவில்லை. மாறாக அரசின் அடிவருடிகளும் அவர்களது ஆதரவாளர்களுமே சலுகைகளையும் நன்மைகளையும் அனுபவிக்கின்றனர்.

இருந்தும் கடந்த சில வருடங்களாகத் தேர்தல்களில் ஆளுந்தரப்பு வெற்றி பெற்று வருகின்றது. ஆயினும் நாட்டின் 9 மில்லியன் அளவிலான வாக்காளர்களின் வாக்குகளில் ஆளுந்தரப்பினரால் 4.5 மில்லியன் வாக்குகளை மட்டுமே திரட்ட முடிந்தது. மீதி 4.5 மில்லியன் வாக்குகளும் ஒன்றில் எதிர்தரப்பினருக்கோ அல்லது வாக்களிக்காமல் கைவிடப்பட்டோ இருக்கலாம். அரசாங்கம் தனக்கு 3/2 பகுதி மக்களின் ஆதரவு இருப்பதாகக் கூறினாலும் உண்மையில் 3/1 பகுதி மக்களின் ஆதரவே அரசாங்கத்திற்கு உள்ளது எனக் கூறும் பொன்சேகா மேலும் "நான் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதிலும் கூட நானும்; எனது குடும்பத்தவர்களும் தொடர்ந்தும் புலனாய்வு அதிகாரிகளால் பின்தொடரப்படுகின்றோம். எனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பும் அவ்வளவு திருப்திகரமாகவில்லை. இத்துடன் இது முடிந்துவிட்டதாக நான் கருதவில்லை. அவர்கள் என்னை மீண்டும் சிறையிலடைந்தாலோ அல்லது எவராது என்னைக் கொலை செய்தாலுமோ நான் ஆச்சியப்படமாட்டேன். என்னை எவராவது கொலை செய்ய நேரிடின் ஜனாதிபதியே அதற்கான தனிப்பட்ட ரீதியான பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் அவரது அச்ச உள்ளுணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

"நான் இன்னமும் எனது விடுதலைக்காகிய சட்ட பூர்வமான ஆவணம் எதனையும் பார்க்கவில்லை. நான் விடுதலையாகிய அன்றைய தினமே அந்த ஆவணத்தை எனக்கு வழங்கி இருத்தல் வேண்டும். அப்படி வழங்கப்பட்டிருக்குமாயின் நான் ஏன் வெளியே அனுப்பப்பட்டேன் என்பதை அறிந்திருப்பேன். அணுகுண்டு போல அந்த ஆவணத்தை இரகசியமாக மூடிமறைத்து வைத்துள்ளனர். எனது சமூக உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டில் எனது நிலைமை என்ன என்ற உண்மையை உறுதி செய்வதற்காக எனது சட்டத் தரணிகள் மூலமாக நீதிமன்றில் அந்த ஆவணத்தைக் கோரி மனுவைத் தாக்கல் செய்துள்ளேன்" எனத் தனது மன ஆதங்கங்களை நேர்காணலில்போது வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னாள் தளபதி இப்போது கொழும்பு கோட்டையில் உள்ள அவ்வளவு பெரிதாக இல்லாத ஒரு மட்டிலான அலுவலகத்தில் இருந்துகொண்டு ஆட்சியினருக்கு எதிராக ஓர் புதிய அரசியல் அணியை உருவாக்கும் நோக்கத்துடன் பலதரப்புகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றார். உருவாகும் எதிர்ப்பு அரசியல் அணியானது இறுதியில் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் போதுமான அளவிற்கு வலுவுள்ளதாக வளர்ந்துவிடும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டுள்ளார்.

பயணம் வித்தியாசமானதெனவும், ஆனால் தேர்தல்கள் வரும் நேரங்களில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஆதரவளிப்பதற்காக ஏனைய கட்சிகளுடன் வந்திணைவார்கள் எனக் குறிப்பிட்டார். அதேநேரத்தில் ஜே.வி.பியினரை அவரது அணியில் இணைத்துக் கொள்ளமாட்டாரா என்ற கேள்வியை எழுப்பியபோது "எமது கதவுகள் எப்பொழுதும் திறந்தே கிடக்கின்றன" எனச் சூசகமாகப் பதிலளித்தார்.

இவரது விடுதலைக்கான பேச்சுவார்த்தைகளின் போது அதிக ஈடுபாடு காட்டிய நாடாளுமன்ற உறுப்பினரான ரிறான் அலெஸ் பற்றி வினவியபோது அதற்கு "அவருக்கும் எனக்குமிடையிலான நெருக்கமான உறவு முறையின் நிமித்தமே ஒழிய வேறெதுவும் இல்லை. இன்று மாலை கூட நான் தந்தையாரின் பிறந்த நாட் கொண்டாட்டத்திற்குச் செல்லவுள்ளேன்." அது எங்களது தனிப்பட்ட உறவு முறையிலான நட்பாகும். அரசியலில் எம்மிருவரினதும் வழிகளும் வித்தியாசமானவை. ஆனால் அதற்காக நாங்கள் எதிரிகளாக மாறிவிடவில்லை" எனத் தெரிவித்தர் சரத்பொன்சேகா.

ஐ.தே.கவுடன் தமது அணியை இணைத்துக்கொள்வதைச் சற்றுத் தள்ளியே வைத்துள்ளதாகவும் சிலர் ஐ.தே.கவை இணைத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகின்றனர் எனவும், ஆனால் ஐ.தே கவிற்கும் சில உட்பிரச்சினைகள் நிலவுகின்ற நிலையில் அவர்களை

சன்டேரைம்ஸ் பத்திரிகையில் சந்தனி கிறிந்தே எழுதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

17, ஒக்ரோபர் - 23 ஒக்ரோபர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5

E-mail: editorial@sudaroli.com

இந்தியாவின் மாற்றம்..?

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் டெல்லி சென்று இந்தியப் பிரதமர் உட்பட பல உயர் மட்டத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் இந்தியா இப்போது இலங்கை அரசு தொடர்பிலும், இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரம் தொடர்பிலும் ஒரு தீவிரத்தன்மையுடன் சிந்திப்பதான கருத்தோட்டத்தை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

நெருக்கடியானதோர் காலகட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பை இந்திய அரசாங்கம் அழைத்துப் பேசியுள்ளது. கூட்டமைப்பின் ஏழுபேர் கொண்ட குழுவினர் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

போர் முடிவடைந்ததன் பின்னர் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் விபரம், எவ்வித விளைவுகளுமற்றுப் போன நிலை, இப்போது தெரிவுக்குழுவை முன்னிலைப்படுத்தியுள்ளதன் நோக்கம் என்பன பற்றியும், தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றமை, தமிழ் பிரதேசங்களில் தளர்த்தப்படாமலுள்ள இராணுவப் பிரசன்னம் போன்ற விடயங்களும் மீண்டும் இந்திய அரசதரப்பினருக்கு வலியுறுத்தப் பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் சீனாவின் ஆதரவுடன் இராணுவக் குடியிருப்புக்கள் நிறுவப் படவுள்ளமை, இராணுவ முகாம்கள் நவீனப் படுத்தப்படவுள்ளமை குறித்தும், அவ்வாறு வடக்கில் சீன உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கை இந்தியப் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தியா இந்நிலைமைகளை விளங்கிக்கொள்ளாமலிருக்க முடியாது. தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு அக்கறைக் காட்டுவதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தாலும், இந்தியா அதன் பாதுகாப்பு விடயத்தில் மிக அவதானமாகவே இருக்கின்றது. சீனா இலங்கையுடன் கொண்டிருக்கின்ற நெருக்கம், அதன் படிப்படியான வளர்ச்சி என்பன இந்தியாவிற்கு மிகுந்த விசனத்தையே ஏற்படுத்தி வருகின்றது. அதனால் இந்தியா ஒரு கட்டத்தில் இலங்கையுடன் முன்னரைவிட சில அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நிலை ஏற்படலாம். அதன் வெளிப்பாடுகள்தான் கூட்டமைப்பினருடனான பேச்சுக்களின் போது வெளிப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் தீர்வு தொடர்பாக இந்தியாவிடம் கூறிய உறுதிமொழிகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என இந்தியத் தரப்பினர் கூட்டமைப்பினரிடம் வெளிப்படையாக இம்முறை தெரிவித்துள்ளனர். இலங்கை மீதான இந்தியாவின் அதிருப்தி நிலை அதிகரித்துள்ளதாகவும், புதிய மாற்றுச்சிந்தனையொன்று இந்தியாவிடம் தோன்றியுள்ளதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியா இலங்கையுடனும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுடனும் நீண்டகாலமாகவே தொடர்புபட்டு வந்தாலும் இலங்கையுடன் ஒரு மென்போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கின்றமையினை அவதானிக்க முடிகின்றது. இந்த மென்போக்கில் மாற்றம் ஏற்படுமானால் அது இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான விவகாரத்திலேயே ஏற்படும்.

ஆகவே, தமிழ் தேசியக்கூட்டமைப்புடன் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள கலந்துரையாடல்கள், அவற்றில் வெளிப்பட்டுள்ள மாற்றுச் சிந்தனை என்பதெல்லாம் தனியே தமிழர்களின் பிரச்சினைத் தீர்வுக்கானதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது கடந்த காலத்துப் பட்டறிவு.

எனினும், இந்தியா புதிய சூழ்நிலைமாற்றங்களுக்கேற்ப தமிழ் மக்களின் பிரச்சினையைக் கையாள முனையும் இராஜதந்திர நடவடிக்கைகளின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரியான முறையில் அதனைப் பயன்படுத்திக் கொள்வது அவசியமானதாகும்.

பறிபோகும் வனவளம்!

தனியார் வீடு ஒன்றின் முன்பாக பல இலட்சம் மதிப்பான பாரிய வாகனம் ஒன்று வந்து நின்றது. அதில் இறங்கிய ஒருவர் அவ்வீட்டினுள் நுழைந்தார். அது ஓர் அந்நிய புதுமுகம். பார்த்த மாத்திரத்திலேயே அவர் ஓர் வேற்று இனத்தவர் என்பதை உடனேயே ஊகிக்கமுடிந்தது. அவ்வீட்டினுள் ஒரு தமிழ் ஊழியரைத் தவிர மற்ற அனைவரும் சிங்கள அரச அலுவலர்களாக இருந்தனர். புதிதாக வந்தவர்களுக்கும் அரச ஊழியருக்குமிடையே தமது தாய்மொழியிலேயே உரையாடல் நடந்தது. "இப்ப எங்கே வெட்டலாம்?" புதிதாக வந்தவர் கேட்டார். "முள்ளியவளை மேற்கில் வெட்டலாம். ஆனால் அதைவிட மன்னாகண்டல் நல்ல இடம். அங்க போனால் நல்ல வரும்படி கிடைக்கும்" இது சிங்கள அரச அலுவலர் வாய்ச் சொற்கள். இவையாவும் முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளைப் பகுதியில் தற்காலிகமாக இயங்கிவரும் வனத் திணைக்களத்தில் இடம்பெற்றவையாகும்.

கீச்சுக்குளம், பேராறு உள்ளடங்களாக கரைதுரைப்பற்றில் உள்ள மிகப்பெரிய கிராமசேவகர் பிரிவுதான் முள்ளியவளைமேற்கு ஆகும். இது பொன்னகர் குடியிருப்பு, ஐயனார் குடியிருப்பு, கோயில் குடியிருப்பு ஆகிய 3 கிராமங்களை உள்ளடக்கிய மிகப்பெரிய கிராமசேவையாளர் பகுதியாகும். இப்பகுதியின் தற்போதைய நிலையை பார்த்தோமானால் இங்கு சுகாதார நிலையம், நூலகம் என்பவை இல்லை. மருத்துவ வசதியை பெறுவதாயின் இவர்கள் 4கி.மீ. தூரம் பயணம் செய்து மாஞ்சோலை ஆஸ்பத்திரியை சென்றடைய வேண்டும். ஆரம்பத்தில் பெரிய கட்டடம் ஒன்று நூல் நிலையமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் காலத்தில் அக்கட்டடம் அவர்கள் வசம் இருந்தது. பின்பு இராணுவத்தால் அக்கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டது. இதன் உள்ளக வீதிகள் மணல் வீதிகளாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன.

இப்பகுதி மக்களைப் பொறுத்தவரையில் காணி உறுதிப் பத்திரம் ஓர் தலையிடியாகவே இருக்கின்றது. கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு முன்பு கொக்குளாய், கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு இப்பகுதி மக்கள் அடைக்களம் கொடுத்தனர். காலப்போக்கில் அம்மக்கள் இப்பகுதியில் காணிகளை வாங்கி தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ குடியேறினர். காலங்கள் கொடுத்த போர்ச்சுவடுகளில் எல்லோரும் தமது உறுதிகள் உட்பட உடமைகள் உயிர்களைத் தொலைத்தனர். எனவே இப்பகுதி மக்களுக்கு உறுதியின்மை பாரிய பிரச்சினையாக உள்ளது.

மற்றும் இப்பகுதியைப் பொறுத்த வரையில் காடுகள், மணல், ஆறுகள் ஆகியவை உள்ளடங்கலாக இயற்கைவளம் நிறைந்த பிரதேசமாக காணப்படுகின்றது. பேராறை அண்மித்ததாக 3 கி.மீ. மணல்பாங்கான இடம் உள்ளது. இப் பிரதேசத்தை சார்ந்தவர்களோடு வேறு பலரும் மணல் அனுமதி பெற்று மணல் எடுத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் காடுகளைப் பொறுத்தவரையில் அவையாவும் வேறு மாவட்டத்தை சேர்ந்த வேற்று இனத்தவரே பயனாளிகளாக உள்ளனர். அண்ணளவாக 500 ஹெக்ரயர் காட்டு நிலப்பகுதியை இப்பிரதேசம் கொண்டுள்ளது. ஆனால் இப் பகுதியை சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களோ அல்லது வேறு அமைப்புக்களோ தனிநபர்களோ நன்மை அடையவில்லை. அரசியல் பின்புலம் உள்ள வேறு மாவட்டத்தவரே நன்மை பெறுகின்றனர்.

காடுகள் என்பது புதுப்பிக்கக்கூடிய ஓர் இயற்கைவளமாக கருதப்பட்டாலும் ஓர் எல்லைக்கு அப்பால் அவற்றைப் புதுப்பிப்பது சிரமமான விடயமாகும். அத்துடன் மரங்களைப் பொறுத்தவரை முல்லைத்தீவு இறுதியுத்தம் வரையும் அதற்கு அப்பாலும் அவைகளின் பங்களிப்பு மகத்தான ஒன்றாகும். தமது தலைகளை பறிகொடுத்து மனித உயிர்களை முடிந்தவரை காப்பாற்றிய போராளிகளாக பல பனைகளை அங்காங்கே காணலாம். அவற்றை காணும்போது கவலையும், கூடவே ஓர் பெருமையும் தொற்றிக் கொள்ளும். அது மட்டுமன்றி வனத்திணைக்களத்தால் ஆரம்பத்தில் வைத்த தேக்குமரங்கள் விடுதலைப் புலிகளால் யுத்த செயற்பாடுகளுக்கு வெட்டப்பட்டு அவற்றுக்கு பிரதியீடாக வேறு புது மரங்களையும் நாட்டியிருந்தனர். எனவே போராட்டத்திற்கு தன்னையும் ஓர் போராளியாக மாற்றியிருந்த வனங்களையும் மரங்களையும் எவரோ சிலர் தமது அரசியல் அதிகாரங்களால் அபகரித்துச் செல்வது கவலைக்கிடமான விடயமாகும். முள்ளியவளை மேற்கைப் பொறுத்தவரை முதிரை, பாலை ஆகியன அவ்வனங்களில் உள்ள பாரிய சொத்துக்களாகும். வீடுகளை முற்றாக இழந்தவர்கள், பகுதியாக இழந்தவர்கள் அதனை மீளப் புதுப்பிக்கும் போது ஆயுட்காலம் குறைந்த சப்பு மரங்களை தமது நிலைகள், கதவுகள், யன்னல்கள் ஆகிய வற்றுக்கு பயன்படுத்தும் போது வேறு இனத்தவர்கள் இங்கு வந்துமரங்களை அபகரிப்பது மற்றும் அதற்கு ஆதரவளிப்பது என்பது இழிவான செயலாகும்.

இப்பத்தியில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உரையாடலானது இதனை உண்மையென உணர்த்துகிறது. மேலும் புதிதாக வருபவர்களுக்கு தாம் எங்கு மரம் வெட்டப்போகிறோம் என்பது தெரியாத விடயமாகும். அதற்கு இங்கு இருப்பவர்களே இடம் பார்த்துக்கொடுக்கும் தரகர்களாக செயற்படுகின்றனர். மரம் வெட்டுபவர்கள் இம் மண்ணிலேயே அதற்கான பலகை விநியோகத்தை செய்தாலும் இம்மண்ணில் உள்ளவர்கள் சிறிதாவது சொந்தமண்ணின் பலனை அனுபவிப்பார்கள்.

- இந்திராணி

சொந்த வளவினுள் உள்ள ஓர் மரத்தை வெட்டுவதற்கே வீட்டின் உரிமையாளர்கள் அனுமதி பெறவேண்டிய நிலையில் தேசம் விட்டு தேசம் வந்து மரம் வெட்டிச் செல்வது என்பது மிகவும் சிக்கலான சவால் நிறைந்த விடயம்.

இதற்கு அரச உயர் பதவிகளில் உள்ளோரும் அனுமதி அளிப்பது வருந்தத்தக்க விடயமாகும். வெட்டப்படும் மரங்கள் பாரிய வாகனங்களில் அதிகாலைக்கு முன்பதாகவே ஏற்றப்பட்டு வற்றாப்பளை வீதியூடாக செல்வதாக அப்பகுதி பொதுமக்கள் கூறுகின்றனர். இவ்விடயமானது அப்பிரதேசத்தைச் சார்ந்த மக்களுக்கு அதிருப்தி அளிப்பதோடு, அப்பகுதி சமூக மட்ட அமைப்புகள் எவ்வளவோ முயன்றும் அவர்களுக்கு வெட்ட அனுமதி அளிக்கப்படவில்லை. முல்லைத்தீவைப் பொறுத்தவரை தமது அபிவிருத்திப் பணிகள் கட்டுமானப் பணிகளுக்கு மரங்களின் தேவை அதிகமாக இருப்பதோடு அதை பெறுவதிலும் அதிக பணம் செலவளிக்க வேண்டியுள்ளது.

தற்போதைய காலத்தில் இவ்வனவளம் அதிகமாக சுரண்டப்படுவதோடு அதனால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் மண்ணரிப்பு, மழையின்மை ஆகிய பாதிப்புக்கள் மட்டும் அப்பிரதேச மக்களுக்கு மட்டும்தான் என்பதும் உறுதி. பயனாளிகள் பட்டியலில் இல்லாமல், பாதிக்கப்படுவோர் பட்டியலில் மட்டும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவது ஏன் என்பது அவர்களுக்கு இன்னமும் விளங்காத கேள்வியாக உள்ளது. அரசியல் பிரமுகர்கள், அரச உயர் பதவியால் உள்ளோர் ஆடும் சதுரங்க ஆட்டத்தில் முள்ளியவளை மேற்கு மட்டுமல்ல, மன்னாகண்டல் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டது. முல்லைத்தீவு மக்கள் பகடைக் காய்களாக உருட்டப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளை பூட்டிய அறைக்குள் பேசுங்கள் !

அரசியல் தலைமைகள் மேடைகளில் முழங்குகின் றார்கள் தமிழ் இனத்தின் விடுதலைக்காக தலையைக் கொடுப்போம் உயிரைக் கொடுப்போம் என்றெல் லாம். இத்தகைய பசப்பு வார்த்தைகளை எதிர்காலத் திலும் தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் எழுந்துள்ள முக்கிய பிரச் சினை பதவியே ஆகும்.

பட்டம் பதவிகளுக்காக வசைபாடுவதை கைவிட்டு இனத்தின் தன்மானம், விடுதலையைக் கருத்தில் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படவேண்டிய அவசியமும் தேவையும் இன்றைய காலகட்டத்தில் காணப்படுகின்றது.

வெண்ணை திரண்டு வரும் வேளையில் பானை உடைந்தது போன்று கடந்த 30 வருட கால ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் அரசியல் ரீதியாக தமிழ்தேசியக் கூட்டமைப்பையே தமிழ் மக்களின் பலம் மிக்க அமைப்பாக உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

மறுபுறத்தே இதனை உடைக்க வேண்டும், தமிழ் மக்கள் தலைமையற்ற இனமாக அரசியல் தலைமைகளிடம் மண்டியிட வேண்டும் என்பதில் தென்னிலங்கையினரும் அரசியல் தலைமைகளும் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

தமிழ் இனம் சூடு கண்ட பூனைகள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் இரண்டாக அன்றைய தமிழ் தலைமைகள் கச்சை கட்டி நின்று 50க்கும் 50 ம் இல்லை. எதுவும் இல்லை என, இறுதியில் சிங்களத் தலைமைகள் வெற்றிபெற எம் இனம் அவர்கள் பின் செல்லும்.

ஆனாலும் கூட சுமார் இருபத்தி நான்கு வருட இடைவெளியில் தமிழ் தலைமைகள் தாம் பிரிந்து நின்று எதனையும் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்து இலங்கை தமிழரசுப் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் பெரு வெற்றி பெற்று எதிர்கட்சியாகவும் செல்லக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டது. இதனை உணர்ந்த சிங்களத் தலைமைகள் மீண்டும் ஒரு தமிழ்கட்சி பலமாக அமையக்கூடாது என்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளது.

1972 ஆம் ஆண்டு இணைந்த தலைமைகள் ஆயுதப் போராட்டம் இளைஞர்களினால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஒதுங்கி இருந்தன.

ஆயுதப் போராட்டம் நடைபெற்ற போது திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வேளையிலும் சரி அதன்பின்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளிலும் சரி ஆயுதக் குழுக்களிடையே விட்டுக் கொடுப்புகள் இன்மை காரணமாகவும், இந்திய அரசின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சில ஆயுதக் குழுக்கள் உள்வாங்கப்பட்டன. நிலையிலும் அவையும் வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் இந்திய அமைதிகாக்கும் படை இந்நாட்டுக்குள் நுழைந்த வேளையில் தமிழ் பகுதிகளில் இளைய தலைமுறையினர் வகை தொகை இன்றி கொன்று குவிக்கப்பட்டனர்.

பல குடும்பங்கள்

அழிக்கப்பட்டன. நிர்க்கதி நிலைக்கு தமிழ் மக்கள் இட்டுச் செல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகள் விடுத்த வியூகத்தின் மூலம் இந்திய அமைதிகாக்கும் படை இந்நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது கொள்கைகள் செயல் திட்டங்களில் மாற்றங்களை கொண்டு வந்து அரசியல் பாதையை நோக்கியும் செல்ல முற்பட்டார்கள்.

இம் மண்ணில் இருந்து வெளியேறியவர்கள் கூட அரசியல் தலைவர்களாக மீண்டும் நாட்டில் வலம் வரவும், அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் வழி ஏற்பட்டது. இதன் மூலம் மீண்டும் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வடக்கு கிழக்கில் இந்த அரசியல் தலைமைகளை ஏற்று வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பி தமது ஒற்றுமையை வெளிப்படுத்தினார்கள்.

இந்த வகையில் அன்று வாய்மூடி மௌனிகளாக இருந்தவர்கள் இன்று மீண்டும் ஒற்றுமைக்கு ஆப்பு வைக்கும் செயல்பாடுகளில் ஈடுபட முனைவது வேதனையானதும் வெறுக்கத்தக்கதும் ஆகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிரச்சினை என்றால் அதனை அதில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் பூட்டிய அறைக்குள் பேசித் தீர்க்க வேண்டும். இன்று தென்னிலங்கை எப்போது தமிழ் கூட்டமைப்பில் பிளவு வரும், குழப்பம் வரும் அதனை வைத்து தமிழர்களின் உரிமைகளை பிரச்சினைகளை அடக்கியெடுக்கலாம் என சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

தென்னிலங்கையில் உள்ள முக்கிய கட்சிகள் என்று கூறக்கூடிய ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி எனப் பல கட்சிகளும் அரசின் ஆசீர்வாதத்துடன் உடைக்கப்பட்டு பலவீனமாக்கப்பட்டுள்ளன.

இன்று மாற்று நடவடிக்கை எதனையும் அரசுக்கு எதிராக மேற்கொள்ள முடியாமல் தவித்து நிற்கின்றன.

இந் நிலையில் அரசின் எதிர்பார்ப்பு. எண்ணத்திற்கு ஏற்ப தமிழ் தேசியக்கூட்டமைப்பை சிதைக்க முனைவது என்பது தமிழ் மக்களுக்கு மீண்டும் அரசியல் தலைமைகள் துரோகம் செய்யும் செயலாகும்.

சரி இருக்கலாம், பிழை இருக்கலாம். ஒரு குடையின் கீழ் இருக்கின்றோம், ஒற்றுமையாக இருக்கின்றோம் என்று நுனி நாக்கில் கூறிக்கொண்டே தமிழ் ஒற்றுமையை சீர்குலைக்க முயற்சிக்கக்கூடாது.

அரசியல் தலைமைகள் மேடைகளில் முழங்குகின்றார்கள் தமிழ் இனத்தின் விடுதலைக்காக தலையைக் கொடுப்போம் உயிரைக்கொடுப்போம் என்றெல்லாம். இத்தகைய பசப்பு வார்த்தைகளை எதிர்காலத்திலும் தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினை பதவியே ஆகும்.

இனத்திற்காக உயிரை விடத் துணியும் தலைமைகள் கேவலம் பதவியை விட முடியாது எனத்துடிக்கின்றார்கள். பதவிக்காக எதனையும் செய்ய முயற்சிக்கும் தலைமைகளா தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிரை விடப் போகின்றன? இதனையிட்டு மக்கள் கடந்த காலத்தில் உரிய பாடங்களை பலருக்கு புகட்டியும் உள்ளார்கள்.

இன்று தமிழர்கள் என்னதான் தமக்குள் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை தூக்கி வைத்துவிட்டு மக்களினுடைய உரிமைகளை உலக நாடுகளின் ஆதரவுடன் பெற்றெடுக்க வேண்டியதே முக்கியமாகும்.

இதனை விடுத்து பதவிக்காக போட்டி போட்டு தமிழ் இனத்தை நடு வீதியில் விடுவதற்கு செயல்படக்கூடாது. இதனை மக்கள் சரியாக உணருவார்களாக இருந்தால் மீண்டும் மக்கள் இவர்களை புறம் தள்ளி புதிய இளைய தலைமுறையின் பின்னால் செல்ல தம்மை தயார்ப்படுத்திக் கொள்வார்கள் என்பதை இன்றைய தமிழ் தலைமைகள் புரிந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது இளைய தலைமுறைக்கு ஜனநாயக நீதியாக தலைமைத்துவத்தை வழங்கியுள்ளதுடன் இளைய தலைமுறையை உறுப்பினர்களாகவும் மக்கள் அனுப்பி வைத்துள்ளமை கருத்தில் கொள்ள வேண்டும்.

பதவிகள், பட்டங்களுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தங்களுகுள் போட்டியிட்டு சீர் குலைப்பை உண்டாக்குவார்களானால் மக்களிடம் உரிய பாடத்தை மீண்டும் கற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மீண்டும் குழப்பத்தை, உடைவுகளை தமிழ் தலைமைகள் உருவாக்காமல் உண்மையான தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக, விடுதலைக்காக, இணைந்து கொண்டவர்களாக இருந்தால் ஒரு கட்சிக்கு ஒரு கட்சி விட்டுக் கொடுத்து தமிழ் மக்கள் உரிமைகளை பெற வழிசெய்யுங்கள்.

வில்லவன்

இதனைவிடுத்து கூட இருந்து ஒருவருக்கு ஒருவர் பதவிகளுக்காக முரண்பாடு தமிழ் மக்களுக்கு மீண்டும் துரோகம் செய்ய வேண்டாம் என்றே தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகளிடம் வேண்டி நிற்கின்றார்கள்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

பூமிற்குள் பூகம்பம்

"சாந்தி இங்க ஒருக்கா வந்திட்டுப் போம்மா". என சின்னம்மா தவத்தின் குரல் என்றுமில்லாதவாறு இன்று மிகவும் அன்போடு சாந்தியை அழைத்தது. இப்படி அன்போடு அழைக்கக் காரணம் என்னவாக இருக்குமென எண்ணிய சாந்தி "இதோ வந்திட்டேன் சின்னம்மா" என்றபடியே அவளின் அருகில் சென்றாள்.

"சாந்தி உனக்கு ஒரு பையனை பார்த்திருக்கிறம். வெளிநாட்டிலை நின்றிட்டு இப்ப மூன்று நாளைக்கு முன்னம் தான் ஊருக்கே வந்திருக்கிறாராம். நிறையப் பணம் சம்பாதிச்சு வைச்சிருக்கிறார். ஒரு மாதத்துக்குள்ள திரும்பியும் வெளிநாட்டுக்குப் போகவேணுமாம். உன்னை கோயிலிலை பார்த்திருக்கினம் ரொம்பப் பிடிச்சிருக்காம். என்னிட்டை வந்து உன்னை கல்யாணம் செய்து தரக்கேட்டினம். நானும் சரியென சொல்லிவிட்டன். நாளும் எல்லாம் எடுத்தாச்சு. இன்னும் பத்து நாள் தான் கல்யாணத்திற்கு கிடக்குது" என தவம் கூற இப்ப கல்யாணத்திற்கு என்ன அவசரம் என சாந்தி கூறி முடிப்பதற்கு முன்னம் "இதோ பார் இந்தக் கல்யாணத்திலை தான் என்னோட சந்தோசமே அடங்கியிருக்கு. நாமளும் பணக்காரர் ஆயிடலாம். இதையெல்லாம் மனசில வைச்சுத்தான் சரியெண்டு சொல்லிட்டன். போ, போய் உன்னோட வேலையைப் பார். உன்னோட சம்மதம் எனக்குத் தேவையில்லை" என சாந்தியை உள்ளிற்குள் விரட்டிவிட்டாள்.

அன்று இரவு சாந்திக்கு தூக்கமே வரவில்லை. படுக்கையிலே கண்களை மூடியபடி தூங்குபவள் போலப்படுத்திருந்தாள். ஆயிரம் எண்ணங்கள் மனதிலே தோன்றி மறைந்தபடி இருந்தது. அப்போது வெளியில் தந்தையும் சின்னம்மாவும் பேசியது சாந்தியின் காதிலே விழுந்தது. "தவம் சாந்தி தூங்கிட்டாளா?" என தந்தை கேட்டதும் அதற்கு அவள் எப்பவோ தூங்கிட்டாள் என தவத்திடம் இருந்து பதில் வந்தது. "சரி கல்யாண விசயம் பற்றி சொல்லிட்டியா? மாப்பிளையைப் பற்றி எல்லாம் சொன்னியா" எனக் கேட்டார். உடனே அவள் "இதப் பாருங்கோ கல்யாணத்தைப்பற்றித்தான் இப்ப சொல்லியிருக்கிறன். மாப்பிளையைப் பற்றி எதுவுமே அவகிட்ட சொல்லவேயில்லை. நீங்களும் எதையாது சொல்லித் தொலையாதேங்கோ" எனக் கூறினாள்.

"ஊர் உலகத்தில நடக்காததா உங்கட பிள்ளைக்கு நடக்கப்போகுது? சாந்தியை மூன்றாந்தாரமா கட்டிக் கொடுக்கிறதிலை அப்படி என்ன குறையிருக்குது? மூத்த மனைவியும் இறந்து விட்டா. இரண்டாவது மனைவியும் விவாகரத்துக் கொடுத்திட்டா. இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளை வைச்சு எப்படிச் சமாளிப்பார்? அதுகளை வளர்க்க ஒருத்தி தேவைதானா? அதுக்காகத்தானே சாந்தியை கல்யாணம் செய்யப்போகிறார். எங்கண்டை பேரிலை இங்க இருக்கிற பெரிய வீட்டை எழுதித் தாறதா சொல்லியிருக்கிறார். சாந்திக்கு முழு நகையளும் கொண்டுவந்து வைச்சிருக்கிறாராம். சீதனம் ஒண்டுமே வேண்டாமாம். எங்களிற்கு மாதம் மாதம் சிலவிற்கு காசு அனுப்புறன் எண்டு சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு தங்கமான மாப்பிளையை ஒரிடலத்தலையேனும் பிடிக்கேலாது பாருங்கோ" என தவம் பெருமையாகப் பேசினாள். நான் உங்களை இரண்டாந்தாரமாக் கட்டிக்கேல்லையே? அது போலத்தான் இதுவும் எண்டு நினையுங்கோ. என்னோட பொம்பிளைப் பிள்ளைக்கு சாந்தி மூலமா வர இருக்கிற அதிஸ்டத்தில் மண்ணை அள்ளிப்போட்டு நாசம் பண்ணிடுவியள்போல இருக்குது. "இதப்பாருங்க அப்படி ஏதாவது செய்ய நினைச்சா என்னையும் என்னோட பிள்ளையையும் உயிரோட காணமாட்டீங்க. ஞாபகம் வைச்சுக் கொள்ளுங்கோ" என தவம் கூறினாள். "அதில்லை தவம் சாந்திக்கு இப்பத்தானே இருபது வயது. மாப்பிள்ளைக்கு நாப்பது வயது வயசு வித்தியாசம் நல்லாவா கிடக்குது சொல்லு?" என தந்தை கூறியதும் "வயசு வித்தியாசம் நல்லாத்தான் கிடக்குது. நீங்கள் நடக்கிறதை பாத்துக்கொண்டு இருந்தால் மட்டும் காணும்" என கடுமையான குரலிலே கூறினாள்.

இவற்றை எல்லாம் கேட்ட சாந்திக்கு வானமே தலையில் இடிந்து விழுந்துவிட்டதைப் போல இருந்தது. கண்களில் இருந்து வந்த கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. கதறி அழவேண்டும் போல் இருந்தது. அதற்கும் அவளால் முடியவில்லை. அம்மா கல்யாணம் என்ற பெயரால் எனக்கு எவ்வளவு பெரிய துரோகத்தினை செய்ய இருக்கிறா? எல்லாம் பணத்துக்காகத்தானே. வெளிநாட்டுக்காரங்களிற்கு ஏழைகளைக் கண்டால் இழக்காரமாகத் தெரியுது. பணத்தைக்காட்டி மன நின்மதியை பறிக்கப்பார்க்கிற துரோகிகள் என சாந்தி மனம் நொந்து அழுதாள்.

பணத்திற்காக ஒரு கிழவனிற்கு என்னைக் கட்டிக்கொடுக்கப் பாக்கினம். தன்னோட பிள்ளை நல்லா இருக்கவேணும் எண்டு நினைக்கிற சின்னம்மா என்னைக் கொண்டே படுகுழியிலை தள்ளப்பார்க்கிறாவே. கடவுளே. இப்படி ஒரு சீர்கெட்ட வாழ்க்கை தேவைதானா? இதைவிட நான் செத்துப்போகலாம். என்னோட அம்மா உயிரோட இருந்தால் எனக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தந்திருப்பார். அம்மா நீங்கள் உயிரோடை இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா அம்மா? அப்பாவும் புத்திகெட்டுப்போய் சின்னம்மா சொல்லுறதுக்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு இருக்கிறார் என பலதையும் நினைத்து அழுதவள் ஒரு முடிவிற்கு வந்தவளாக எழுந்தாள்.

இந்தப் படுகுழியில் வீழ்வதைவிட யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டே வெளியேறுவது என்பதே அவள் எடுத்த முடிவு. எங்கே போவது? அடுத்து என்ன செய்வது? என்பது பற்றியெல்லாம் சிந்திக்க அவளுக்கு அப்போது அவகாசமிருக்கவில்லை.

ப.தர்சினி
அச்சுவேலி தொற்கு அச்சுவேலி

ஹிட்லரின் காதலி

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முன்பே முகிழ்த்து விட்ட போதிலும் இன்று வரை மாறவே மாறாதது. வசீகரமானது. விசித்திரமானது. விதிகளுக்கு உட்படாதது. சமூகக் கட்டுப்பாடுகளை மதிக்காதது. வயது பாராதது. அழகு தேடாதது. அந்தஸ்து நாடாதது.

அதுதான்.. காதல்! மனித மனத்தின் மாறாத் தேவை

கொன்வென்ட் படிப்பை முடித்து பள்ளியிலிருந்து அப்போதுதான் வெளியே வந்திருந்தாள் இவர் ப்ரௌன். இளமை அவளை உலக அழகியாக ஊருக்குக் காட்டியது. அவளிடம் தங்களது காதலைச் சொல்லி ஏமாந்து போனவர்கள் எவ்வளவோ பேர்! யாரையும் அவள் ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை.

தன்னுடைய பதினேழாவது வயதில், ஹிட்லரின் அந்தரங்கப் புகைப்படக் கலைஞர் ஹாஃப்மேன் என்பவனின் உதவியாளராக அவள் பணியாற்றத் துவங்கினாள்.

அதுவரை, ஹிட்லர் என்ற பெயரைக் கேள்விப் பட்டிருந்ததாளே, ஒரு நாளும் அவனைப் பார்த்ததில்லை.

ஒருநாள்..

அவளை விட 23 வயது மூத்தவரான ஹிட்லருடன் அந்த எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது.

அந்தச் சந்திப்பில்தான் ப்ரௌனின் வாழ்க்கை தடம் புரண்டது. வாழ்க்கை என்று எனக்கு ஒன்று இனி இருந்தால், அது ஹிட்லருடன்தான் என்று அந்த முதல் சந்திப்பிலேயே அவள் முடிவு செய்தாள்.

அந்தக் காதலுக்கு நிச்சயம் உடல் கவர்ச்சி ஒரு காரணமல்ல. பின், அந்தத் தருணத்தில் அவளது உள்ளத்தில் ஹிட்லர் மேல் அப்படி ஒரு ஆவேசமான காதல் அரும்பியது எதனால்? ப்ரௌனுக்கே அந்தக் கேள்விக்கான பதில் தெரியவில்லை!

அதன் பிறகு இவ்வுலகில் இருந்த அடுத்த பதினாறு ஆண்டுகளும் அந்தப் பேதைப்பெண் வாழ்ந்தது ஹிட்லருக்காக மட்டும்தான். அவள் மடிந்ததும் அவனுக்காகத்தான். பெற்றோர்களின் எதிர்ப்பு, சமுதாயத்தின் நிராகரிப்பு- எதனாலும் அவளை மாற்ற இயலவில்லை. கலைக்க முடியவில்லை

ஜெர்மனிய அரசியலில் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த ஹிட்லர், மக்களிடம் தன் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள அவளுடனான உறவை வெளிப்படுத்தாமல், ரகசியமாகவே வைத்திருந்தான். இவர் ப்ரௌனுக்கு அது கொச்சையாகத் தெரிய வில்லை.

ஹிட்லர் பல நேரங்களில் ப்ரௌனை தன்னை விட எல்லா வகையிலும் தாழ்ந்த பிறவியாகக் கருதினான், அவள் மீது சாதாரண பரிவு காட்டு பவனாகக்கூட நடந்து கொள்ளவில்லை. இருப் பினும் ப்ரௌனின் காதலும் விசுவாசமும் என்னவும் குறையவில்லை.

கொலை முயற்சி ஒன்றில் இருந்து ஹிட்லர் தப்பித்தபோது அவள் அவனிடம் சொன்னாள்: அன்பே, நான் வாழ்வது உன் மீதுள்ள காதலினால் மட்டும்தான். என் வாழ்வும், நீ மூச்சை நிறுத்தும் வரைதான்.

உலகை உலுக்கிய இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது.

மரணம் தன் கைகளை அகல விரித்துக் காத்திருந்த அந்த நேரத்தில் ஹிட்லர், ப்ரௌனிடம் தன்னை விட்டு விலகச் சொன்னான். ப்ரௌன் சம்மதிக்கவில்லை. ஹிட்லரின் இதயம் இன்னும் இளகியது. ப்ரௌனிடம் தனது காதலைத் தெரிவித்தான். அவளை மணந்து கொள்ளச் சம்மதித்தான்.

ஹிட்லர் மாளிகையின் பாதாள நிலவறையில், இரண்டே இரண்டு பேர் சாட்சியாக இருக்க, ப்ரௌன், அடால்ஃப் ஹிட்லரைக் கைப்பிடித்தாள்.

பளபளக்கும் கறுப்பு நிற ஆடையில் வெட் கத்திலும் முகம் நிறைந்த புன்னகையிலும் ஜொலித்த அந்த புது மணப்பெண், திருமணச் சான்றி தழில் ரௌன் ஹிட்லர் என்று மிகப் பெருமிதத் துடன் கையெழுத்திட்டாள்.

தன் உயிர்க் காதலனுடன் ஒரு நாள், ஒரே ஒரு நாள் திருமண வாழ்க்கை நடத்திய நிறைவுடன், அடுத்த நாள் பகலில் ஹிட்லருடன் சேர்ந்து விஷமருந்தி உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். அப்போது அவளுக்கு வயது முப்பத்துமூன்று! யாருக்காக வாழ்ந்தாளோ.. அவனுக்காகவே, அவனுடனேயே அவள் வாழ்க்கையையும் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் பூனைல்

தெருவோர ஆலமரம்

ஆங்காங்கே
முளைத்து நிற்பேன்

பருவகாலத்தில்
பூத்திடுவேன்
காய்த்திடுவேன்

புன்னகைக்கும்
சிறுவர்
உள்ளம் கண்டு
மகிழ்வேன்

வீசிவரும் காற்றும்
என்னோடு
காதல் ஸ்பரிசம்
கொள்ளும்

களைத்து பிளைத்து
வருவோர்க்கு
நிழல் தந்து
உபசரிப்பேன்

குருவிகள்
கூடு கட்ட
இடம் கொடுப்பேன்

பறந்து வரும்
கொக்குகள்
இளைப்பாற
கிளை கொடுப்பேன்

நான்
மரணித்தாலும்
என் சந்ததிவாழ
மண்ணின்
வலிமை வாழ விழுதுகள்
விட்டே
செல்வேன்.

நல்ல பொழுதுகள்...
மலர
என்றும்
துணையாய்
நிற்பேன்.

வேல்மகள்
புளியம் பொக்கணை.

நிலுவை

மழையின் நிலுவை
வெள்ளம்.
வெய்யிலின் நிலைவை
வரட்சி.
காற்றின் நிலுவை
சூறாவளி.
நிலவின் நிலுவை
பௌர்ணமி.
தாவரங்கின் நிலுவை
மலிவு விற்பனை
காதலின் நிலுவை
கண்ணீர்.
மனிதரின் நிலுவை
மரணம்

அகநிகா.

செயற்கை துன்பம்

பச்சைப் பந்தலிட்ட
பசும் மரம்
காய்த்திருந்தது,
கல்லடிகளுக்காகக் காத்திருந்தது!

முட்கள் தாங்கிய
மோகன ரோஜா
பூத்திருந்தது,
பறிப்போரை – பரிதாபமாகப்
பார்த்திருந்தது!

குருத்தோலைகளின்
குதூகலம்,
பழுத்தோலைகளின்
பச்சதாபம்
மாறக்கூடிய ஒன்று!

புதிய வரவிற்கே
பூக்களின் உதிப்பு!
உதய மாற்றத்துக்கே
விதைகளின் வீழ்ச்சி!

இயற்கையின் மாற்றத்தை
இதயம் உணர்ந்தால்,
செயற்கை துன்பம்
சீக்கிரம் மறைந்துவிடும்!

நா.ஜெயபாலன்
மிரிஹான.

காதலித்துப் பார்!

உன்னை நீயே காதலி
உறவுகளை நிதமும் காதலி
தாய் நாட்டை மனதால்க் காதலி
ஓய்ந்திடாமல் உழைப்பைக் காதலி
விடா முயற்சியுடன் கல்வியைக் காதலி
விருப்புடன் வாழ்வைக் காதலி – அன்று
வாழ்வை காதலித்த உன்னை
வழ்க்கை நிஜமாய்க் காதல்க்கும்.

வேல்மகள்
புளியம்பொக்கணை.

நட்புக்காக...

அந்த நாள்
நானும் அவனும்
வேலியோர மரத்தில்
இளநீர் அருந்தினோம்
கோயிலடிக்கு அடி குளத்தில்
கும்மாளம் போட்டோம்
படிப்பு விளையாட்டு
ஊருக்காக வீரசெயல்கள்
முயற்சி வீண் போகவில்லை
ஊருக்காக ஊற்றெடுத்த
எம் விளையாட்டு என்ற ஆறு
மாவட்டம் மாகாணம்
நாடு என்று பெருக்கெடுத்து
பாய்ந்தது அப்போது
இயந்திர கழுகுகளின்
எச்சங்களும் இரும்பு
முகங்களின் எச்சரிக்கைகளும்
எமக்குத் தடை போட்டன
தடை உடைக்க புறப்பட்ட நீ
சிறைப்பட்ட பறவையாக
வாடுகிறாய்
அன்றைய நாளின் நினைவுடன்
உன்னை நான் பாடுகிறேன்.

- அஜிந்தன்.

பௌர்ணமி

அமாவாசை அப்பாவாம்
பௌர்ணமி அம்மாவாம்
இருவருக்கும் கிடைத்த
இணையில்லா புத்திரி
வட்ட வடிவமான
வண்ண நிலாவுக்கு
வானுலகில் திருமணம்மாம்
மாப்பிள்ளை யார் தெரியுமா?
மாண்புமிகு சூரிய பகவானாம்
மேகமெனும் பந்தலிட்டு
இமயமலை அரசனாம்
சிவ பெருமானின் ஆசனத்திலே
கதிரவனும் நிலாவும் அமர
தேவலோக அந்தணர்களின்
மந்திரம் ஒலிக்க
இடி மின்னலின் மேள இசையுடன்
பெரிய வெள்ளியினை உருக்கி
செய்த
தாலியினை பகலவன் நிலாவுக்கு
கட்ட
வானவில்லை மாலையாக்கி
மணமக்கள் மாலை மாற்ற
உறவினர்களாம் விண்மீன்கள்
நட்சத்திரப் பூக்களால் வாழ்த்துச்
சொல்ல
முழுமுதற் கடவுளாம்
சிவன் உமையுடன் வந்து
மணமக்களை ஆசீர்வாதம் செய்ய
வானலகில் திருமணம்
வானவர் போற்ற
இனிதே நிறைவேறியது...

கலைச்சிந்து
கலவெட்டித்திடல்.

மீள் குடியேற்றம்

பூர்வீகம்
பறிபோனது
புகுந்த வீடும்
புறம் போனது
புதிய புனர்வாழ்வும்
புரையோடிப்போனது.

அண்டிக்கொண்ட
முகங்களும்
முந்திக்கொண்டே
முகாங்களானது

அன்றாடவாழ்வும்
அங்கலாய்த்துப் போனது.
அவலங்கள் யாவும்
குரலெழுப்பியே
குடைசாய்ந்து போனது.

முகங்களும் முகவரிகளும்
தொலைந்து...
முகத்திரைகளும்
கிழிந்து போனது.

நிரந்தரங்களும்
தொலைந்து – நீண்ட
சுகங்களும் குலைந்து
மாண்டு போனது.

நிம்மதிகள் மட்டுமே
நிர்க்கதிகளை
தொலைத்து
சொந்த மணணில் – மீள
குடியேறத்துடிக்கின்றது...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி-பலன்

17.10.2012 - 23.10.2012

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

மேஷம்

மூட நம்பிக்கைகளை உடைத்தெறியும் நீங்கள், எதிலும் புதுமையை விரும்புவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். கணவன்-மனைவிக்குள் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரும். அவ்வப்போது மனஇறுக்கம், அசதி, சோர்வு வந்துப் போகும். விட்டுக் கொடுத்துப் போவதால் வெற்றி பெறும் வாரமிது.

கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

ரிஷபம்

எதையும் இலவசமாக பெற்றுக் கொள்ள விரும்பாத நீங்கள், உழைப்பை நம்பி வாழ்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரங்கள் உங்கள் தேவையறிந்து உதவிகரமாக இருப்பார்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். பிள்ளைகள் கோபப்படுவார்கள். பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்ட வேண்டிய வாரமிது.

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்

மிதுனம்

மனித நேயத்தின் மறுஉருவமாய் விளங்கும் நீங்கள், மனசாட்சிக்கு கட்டுப்பட்டவர்கள்.மகனுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். சகோதரங்கள் உங்கள் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பார்கள். யாரை நம்புவது, நம்பாமல் இருப்பது போன்ற குழப்பங்கள் வரும். புதிய திட்டங்கள் நிறைவேறும் வாரமிது.

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

கடகம்

கால நேரம் பார்க்காமல் எடுத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும், கருத்துமாக இருப்பவர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உறவினர்களால் ஆதாயம் கிடைப்பதுடன் கௌரவமும் ஒருபடி உயரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பிள்ளைகளின் நட்பு வட்டத்தை கண்காணிப்பது நல்லது. சாதித்துக் காட்டும் வாரமிது.

மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

சிம்மம்

மனதிற்கு தோன்றுவதை மறைக்காமல் பேசும் நீங்கள், உண்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிவீர்கள். சகோதரங்களின் அரவணைப்பு அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெற்றிப் பாதையில் பயணிக்கும் வாரமிது.

உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்

கன்னி

ஆரவாரம் இல்லாமல் அமைதியாக சாதிக்கும் நீங்கள், நகைச்சுவை உணர்வு அதிகம் உள்ளவர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். முன்கோபம், காரியத் தாமதம், அலைச்சல் வந்து போகும். ஆரோக்கியத்தில் அக்கறைக் காட்ட வேண்டிய வாரமிது.

சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

துலாம்

கறாராகப் பேசும் நீங்கள், ஆடம்பரத்தையும், விளம்பரத்தையும் விரும்ப மாட்டீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். தள்ளிப் போன திருமணம் கூடி வரும். நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். தூக்கம் குறையும். ரகசியங்களை காக்க வேண்டிய வாரமிது.

விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

விருச்சிகம்

நழுவுவதைப் போல சில விஷயங்களில் நீங்கள் பேசினால் அதற்கொரு காரணம் இருக்கும். எதிலும் வெற்றி, லாபம் கிட்டும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். ஆதரவால் வெற்றி பெறும் வாரமிது.

மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

தனுசு

சொல் ஒன்று செயல் வேறு என்றில்லாமல் சொன்னதை முடித்துக் காட்டும் சத்தியசீலர்கள் நீங்கள்தான். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். மகளின் அலட்சியப் போக்கு மாறும். உறவினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறும் வாரமிது.

உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

மகரம்

மல்லிகைப்பூ மனசும், மண்வாசனை மாறாத பேச்சும் கொண்ட நீங்கள் எதார்த்தவாதிகள். புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் தேடி வரும். இரத்த சொந்தங்கள் வலிய வந்து உதவுவார்கள். மகளுக்கு திருமணம் ஏற்படாகும். தந்தைக்கு வேலைச்சுமை, கை, கால் வலி வந்து போகும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் வாரமிது.

அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்

கும்பம்

தெளிந்த நீரோடையைப் போல வெள்ளை மனசுள்ள நீங்கள், தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் வல்லவர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். வேற்று மதத்தவர்களால் உதவிகள் உண்டு. மாறுபட்ட பாதையில் சென்று முன்னேறும் வாரமிது.

பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மீனம்

பொறுமையாக இருக்கும் நீங்கள் சில சமயங்களில் கோபத்தால் பொங்கி எழுவீர்கள். மனக் கசப்பால் ஒதுங்கியிருந்த உறவினர்கள் இனிப் பேசுவார்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு அதிரடியான முடிவுகளை எடுத்துவிடாமல், நிதானித்து செயல்படப் பாருங்கள். வளைந்து கொடுக்க வேண்டிய வாரமிது.

தலை காத்த சமயோசிதம்



பாண்டியநாட்டுப் புலவர் வடநாட்டுக்குப் போனார். அங்குள்ள ராஜாவைப் பற்றி தமிழில் அழகாக கவிபாடினார். அதை அங்கிருந்த பல்மொழி அறிஞர், மன்னருக்கு மொழி பெயர்த்துச் சொன்னார். மன்னருக்கு ரொம்பவே சந்தோஷம். நூறு ரூபாய் சன்மானம் கொடுத்தார்.

"அடடா! டில்லிக்கு ராஜாவாய் இருந்தாலும், இந்த ஆசாமி வெறும் நூறைத் தானே கொடுத்தான்...சரி..சரி...எங்கு போனாலும் நம்மை வறுமைவிடாமல் துரத்தும் போலும்!" என நினைத்தவர், பல்மொழி அறிஞர் நிற்பதைக் கவனிக்காமல், "உப்பும் காயும் வாங்கத்தான் போதும்" என வாய் விட்டு சொன்னார். இதைக் கவனித்த பல்மொழி அறிஞர் ராஜாவிடம் போட்டுக் கொடுத்து விட்டார்.

"ராஜா..ராஜா! நீங்கள் கொடுத்த சன்மானத்தை இவன் துச்சமாக பேசிவிட்டான்," என்றார்.

ராஜாவுக்கு கடும் கோபம். புலவர் ஆபத்தில் சிக்கிக்கொண்டதை உணர்ந்து சமயோசிதமாக சமாளித்தார்.

ராஜா அவர்களே! நான் சொன்னதை இந்த அறிஞர் தவறாகப் புரிந்து கொண்டார் என நினைக்கிறேன். உங்களைப் புகழ்ந்ததால் தான் நூறு ரூபாய் கிடைத்தது. மற்றவர்கள் கொடுத்திருந்தால் அஞ்சோ, பத்தோ உப்பும், காயும் வாங்கும் அளவுக்கு குறைவாகத் தான் கொடுத்திருப்பார்கள் என்ற அர்த்தத்தில் சொன்னேன்," என்றார்.

ராஜாவுக்கு இது மொழி பெயர்க்கப்பட்டதும், அவர் அகம் மகிழ்ந்து, "என் தர்மகுணத்தை இவ்வளவு உயர்த்தியா பேசினீர்," என்றதுடன், பத்தாயிரம் ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விட்டார்.

சிலருக்கு பேச்சாலேயே ஆபத்தான சூழல் வந்து விடுகிறது. அப்படி வந்துவிட்டாலும், சமயோசிதமாக பேசி சரி செய்து கொள்ள வேண்டும். சிலநேரங்களில் சமயோசிதமும் தலைகாக்கும்.

இளமையிலேயே ஆன்மிகம்

* நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நல்ல எண்ணங்களின் கருவிகளாக செயல்பட்டால் தூய்மை பெறுவோம்.
* நாம் இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நம்மாலேயே உருவாக்கிக் கொள்ள முடியும்.
* புது மலர்களே இறைவனின் பாதங்களில் இடுவதற்கு தகுதி பெற்றவை. அதுபோல வலிமை, வல்லமை, அறிவுக்கூர்மைகொண்ட இளமைக்காலத்திலேயே இறைவனை அறிய முயலுங்கள்.
* ஒழுக்கம், மனவலிமை, விரிந்த அறிவு, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்குவதாக கல்வி அமைய வேண்டும்.
* மேலை நாட்டு அறிவியல் நுட்பத்தோடு வேதாந்த கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் முழுமைபெற முடியும்.
* லட்சியமில்லாதவன் இருட்டான பாதையில் தடுமாறிச் சென்று கொண்டிருப்பான். எனவே, குறிக்கோளை ஏற்று வாழ்வு நடத்துங்கள்.

- விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைச் சம்பவம்

யார் அந்த கோடீஸ்வரன்?

நியூயோர்க் நகரப் பொலிசில் கடமையாற்றிய 60 வயதான லூயிஸ் மில்லர் அவரது தன்னலமற்ற சேவை, நேர்மை மற்றும் துணிச்சல் போன்ற வற்றின் காரணமாகப் பேர்பெற்ற துப்பறியும் அதிகாரியாக விளங்கினார்.

கடமை வேளையில் எந்தவொரு அவசர அழைப்புகளுக்கும் தயக்கம் காட்டாது முன்னின்று வழி நடத்துவார்.

அவரது மனைவியின் பெர் வரோணிக்கா வயது 52. அவர்களுக்கு ஒரேயொரு மகள் றோசலின் வயது 30. திருமண மாகாமல் அவர்களுடனே வசிப்பவள்.

ஒரு நாள் கடமையிலிருந்த சமயத்தில் நியூயோர்க்கிலுள்ள தொடர்மாடிக் கட்டிடத் தொகுதியிலுள்ள ஒரு வீட்டில் அத்துமீறிப் புகுந்த மூவர் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப் பதாக லூயிஸ் மில்லருக்கு அவசரத் தகவல் கிடைத்தது.

கொள்ளையர்களைத் தப்பவிடாது சம்பவ இடத்திலேயே பிடித்துவிடவேண்டும் என்ற ஆவலில் லூயிஸ் மில்லர் மற்றும் அவரது மூன்று சகபொலிஸ்காரர் களையும் அழைத்துக்கொண்டு ஒரு கணமும் தாமதியாது குறிப்பிட்ட இடத் திற்கு விரைந்தார்.

சம்பவ இடத்தை அடைந்ததும் மாடி வீட்டின் படிகளில் விரைந்து ஏறிக்கொண் டிருக்கையில் சந்தேகத்திற்கிடமான வகையில் மூவர் படிகளால் கீழிறங்கு வதைக் கவனித்துவிட்ட லூயிஸ் அவர் களை இடைமறிந்து அவர்களை அடை யாளம் காணும் பொருட்டு அவர்களின் அடையாள அட்டையைக் காட்டும்படி உத்தரவிட்டார். தாங்கள் மாட்டிக்கொண் டுவிட்டோம் என்பதை உணர்ந்து கொண்ட கொள்ளையர்கள் மூவரும் தப்பியோட முயன்றனர். லூயிசின் துப்பாக்கிச் சூட்டிற்கு ஒருவன் பலியா னான். மற்றவர் இருவரும் தப்பி ஓடு கையில் அதில் ஒருவன் தனது கைத் துப்பாக்கியால் சுட்டான் லூயிஸ் அதே சமயத்தில் தனது ரிவோல்வரை உருவித் தன்னைச் சுட்டவனைச் சுட்டு வீழ்த் தினர். ஆனால் லூயிஸ் அவ்விடத்திலேயே மரணமானார்.

லூயிஸ் மில்லரின் சடலம் சகல பொலிஸ் அணிவகுப்பு மரியாதைகளு டனும் நடைபெற்றது. மனைவி வரோணிக் காவும் மகள் றோசலினும் சோகமே வடிவாகினர். அவர்களின் எதிர்காலமே இருண்டுவிட்டது போலச் சேர்ந்து போயினர்.

லூயிஸ் மில்லரின் பிரேத அடக்கம் இடம்பெற்று இரண்டு நாட்கள் அளவில் முடிவுற்ற நிலையில் காலையில் வரோணிக்கா வீட்டிலிருந்த சமயம் நடுத்தர வயதையுடையவரான கௌரவமான தோற்றத்தையுடைய ஒருவர் வரோணிக் காவின் வீட்டுக்குள் பிரவேசித்தார். நேராக வரோணிக்காவிடம் வந்த அந் நபர் வரோணிக்காவின் கையில் ஒரு காசோலையும் கடிதமும் அடங்கிய தபாலுறையைக் கொடுத்துவிட்டு எதுவுமே கூறாது வந்தவழியே சென்றுவிட்டார். தபாலுறைக்குள் இருந்த கடிதத்தில் லூயிசின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்ததுடன் அதனுடன் இருக்கும் 20000 அமெரிக்க டொலர்களுக்கான காசோலையை எடுத்து அவர்களது தேவைக்குப் பயன்படுத்துமாறும் அத்துடன் வருடாவருடம் அதே தொகையான 20000 அமெரிக்க டொலர்கள் அவர் களுக்குத் தொடர்ந்தும் வழங்கப்படு மெனவும் எழுதப்பட்டிருந்தது. நம்பிக் கையுடன் வாழ்க்கையைத் தொடரும் படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. திகைப்பில் ஆழ்ந்துபோன வரோணிக்காவினால் எதனையுமே கிரகிக்க முடியவில்லை. இப்போருதவியைச் செய்தவர் யாரென்று கூடக்குறிப்பிடப்படவுமில்லை. அறிந்து கொள்ளவும் முடியவில்லை.

காலங்கள் உருண்டோடின. வருடா வருடம் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந் தவாறு 20000 டொலர்கள் தவறாது வரோணிக்காவுக்கு வந்து கிடைத்த வண்ணமிருந்தது. அவளும் கடவுளரு ளால் தாராள மனம் படைத்த யாரோ ஒருவர் உதவி செய்கின்றார் என மனதில் எண்ணிக் கடவுளுக்குச் சாகும் வரை யில் நன்றி செலுத்தினாள்.

இதேபோன்று நியூயோர்க்கிலுள்ள புறூக்லின் பகுதியில் மற்றுமொரு துப் பறிவு அதிகாரியான அன்ரனி வென்டிற்றி என்பவரும் கடமையின் நிமித்தம் போதைவஸ்துக் கடத்தல்காரர்களைப் பின் தொடர்ந்து செல்கையில் அவர் களால் துப்பறிவாளரென இனங்காணப் பட்டு அவ்விடத்திலேயே கடத்தல்காரர் களினால் துடிதுடிக்கச் சுட்டுக் கொல் லப்பட்டார். அவருக்கு பற்றீஷியா என்ற இளம் வயதையுடைய மனைவியும் ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரை யிலான வயதுகளைக் கொண்ட நான்கு பெண் பிள்ளைகளும் இருந்தனர்.

கணவரின் ஒய்வூதியப் பணமாகக் கிடைக்கும் ஒரு சிறுதொகைத் பணத் திலேயே அவள் நான்கு சிறுபிள்ளை களுடன் வாழ்க்கையை ஓட்ட வேண்டி யிருந்தது.

அச்சமயத்தில் வரோணிக்காவுக்குக் கிடைத்தது போலவே 20000 அமெரிக்க டொலர்களுக்கான காசோலையும் அதே விபரங்களடங்கிய கடிதமும் ஓர் அநாம தேயப் பேர்வழியால் பற்றீஷியாவுக்கும் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டது. கடிதத்தில் குறிப்பிட்டது போலவே அவளுக்கும் வருடாவருடம் அதே தொகைப் பணம் தவறாது உரியகாலத் தில் கிடைத்து வந்தது.

அதுமட்டுமன்றி அவளின் நான்கு பிள்ளைகளின் எதிர்காலப் படிப்புச் செலவுக்காக தனித்தனியாகப் பிள்ளை கள் ஒவ்வொருவரின் பெயரிலும் 100000 அமெரிக்க டொலர்கள் குறிப்பிட்ட வங்கியொன்றில் வைப்பிலிடப்பட்டு அதற்குரிய வங்கிப் புத்தகங்களும் பற்றீஷியாவிடம் ஒப்ப டைக்கப்பட்டன. அவளும் எவ்வளவோ முயன்றும் இப்பேருதவிகளைச் செய்த தரும சிந்தனையாளர் யாரென அறிந்து கொள்ள முடியாது போய்விட்டது.

அமெரிக்காவின் மெக்சிக்கோவில் ஜோர்ஜ் - யூலியா தம்பதிகளுக்கு றோஷியோ எனும் 5 வயதான அழகிய மகள் இருந் தாள். அவனுக்குப் பிறந்தது முதற் கொண்டு குருதி வெள்ளரைப் புற்று நோயால் பீடிக்கப்பட்டு அவ்வியாதி முதிர்ச்சியுற்று உயிராபத்தை விளைவிக் கும் நிலையில் இருப்பதை றோஷியோ ஐந்து வயதாயிருக்கையில் தான் மருத் துவர்கள் கண்டறிந்தனர். குழந்தை உயிர் தப்ப வேண்டுமானால் நியூயோர்க்கில் உள்ள புற்றுநோய்க்கான விசேட மருத் துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சத்திரசிகிச்சைக்குள்ளாக்கப்படல் வேண்டுமெனவும் அதற்குப் பெருந் தொகையான பணம் வேண்டுமெனவும் மருந்துவர்களால் பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டது. நிரந்தர வேலை யின்றிச் சீவியத்தை நடத்தும் நடத்திவ ரும் ஜோர்ஜ் அவ்வளவு தொகையான பணத்திற்கு எங்கே போவார்? நிலைமை யை விளக்கி, உதவிகோரிப் பத்திரிகை களில் விளம்பரம் செய்தார் ஜோர்ஜ்.

விளம்பரம் பத்திரிகைகளில் வெளியாகிய மறுநாளே அவர்களின் வீடு தேடி 100000 அமெரிக்க டொலர்கள் பணமும் கடிதமும் ஒருவரால் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டது. கடிதத்தில் தாமதிக்காது நீயூயோர்க் சென்று சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுமாறும் வைத்தியச் செலவிற்கான மீதிப்பணம் முழுவதும் வைத்தியசாலைக்கு உரிய நேரத்தில் வழங்கப்படுமெனவும் எழுதப்பட்டிருந்தது.

றோஷியாவுக்கு நியூயோர்க்கில் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டு அவளது உயிருக்கு ஆபத்தெதுவும் இன்றிப் பிழைத்துவிட்டாள். மருத்துவ மனைக்கு யாரோ ஒருவர் வந்து சிகிச்சைக்கான முழுப் பணத்தினையும் செலுத்திவிட்டதாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் ஜோர்ஜ் தம்பதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. றோஷியா இப்பொழுது திருமணமாகிக் குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறாள்.

இவ்விதமான உலகின் பலபாகங்களிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானோர் உதவிகளைப் பெற்றனர். ஆனால் ஒருவராவது உதவி எவரிடமிருந்து கிடைத்தது என்பதை அறிந்திருக்கவேயில்லை. எனினும் உதவிசெய்த அந்த இணையற்ற மனிதரை அனைவரும் மானசீகமாகத் தமது குடும்பத் தெய்வமாக மனதில் போற்றி வந்தனர். சிறு சிறு உதவிகளைச் செய்துவிட்டு அவற்றைப் பகிரங்கப்படுத்தி அதன்மூலம் சுயஇலாபம் தேடும் மனிதர்கள்



நிறைந்துவாழும் இவ்வுலகத்தில் இப்படியும் ஓர் மனிதப்பிறவியா என வியந்தனர்.

எதற்கும் ஓர் எல்லையுண்டு என்பது போல் அண்மையில் அவர் தனது 86 வது வயதில் மரணமானதன் பின்னர் அவரது அறக்கொடை நிறுவன நிர்வாகிகளால் அந்தக் கொடைவள்ளல் யாரென்பது உலகிற்குத் தெரியவந்தது. அவர் வேறு யாருமல்ல!

அமெரிக்காவின் நியூயோர்க்கில் வாழ்ந்து வந்த உலகக்கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பெற்றிருந்த பெரும்கோடீஸ்வரரான மில்ரன் பீட்டர் ஆகும்.

ரஷ்ய நாட்டவரான இவரது தந்தை இவர் பிறப்பதற்கு முன்னரே அமெரிக்காவில் வந்து குடியேறினார். இவரது தந்தையார் பொலிஸ் பிரிவில் ஓர் கீழ்நிலை அலுவலராகப் பணிபுரிந்தார். மில்ரன் அவரது இளம் பராயத்தை மிகவும் ஏழ்மையிலேயே கழித்தார். சிறுவயதில் மில்ரன் பாடசாலைக்குச் செல்லும் நாட்களில் அவரது காலணிகளின் அடிப்பாகத்தில் தேய்வின் காரணமாக ஏற்பட்ட துவாரங்களை மறைப்பதற்காகக் கடதாசி மட்டைகளை செருகி வைத்துக் கொள்வாராம். எனினும் மனதைத் தளரவிடாது எதிர்காலத்தில் நல்ல நிலையினை அடையவேண்டும் என்ற ஒரே இலக்குடன் கல்வியைக் கற்று உயர்நிலைப் படிப்புடன் குடும்ப நிலைமையின் காரணமாக கல்வியை நிறுத்திக்கொண்டார்.

இன்டியானாப் பொலிசில் உள்ள பல்பொருள் விற்பனை அங்காடியொன்றில் வேலையிலமர்ந்தார். வாரமொன்றிற்கு ஊதியமாக 10 அமெரிக்க டொலர்கள் அவருக்கு ஆரம்பத்தில் கிடைத்தது. சில வருடங்களின் பின்னர் அவருக்கு எதிர்பாராதவிதமாகச் சதுரங்கப் போட்டியொன்றில் ஒரு தொகைப் பணம் பரிசாகக் கிடைக்கப்பெற்றார். அத்தொகைப் பணத்தினை முதலீடாகக் கொண்டு, பெண்களுக்கான காலுறைகளை விற்பனை செய்யும் வணிக நிலையமொன்றினை ஆரம்பித்தார் மில்ரன் பீட்டர். சிறிது காலத்திற்குள் பெண்கள் விரும்பி அணியும் விலைகுறைவான ஆடைகளை விற்பனை செய்யும் நிலையமாக அதனை விரிவுபடுத்தினார். ஒரு சில வருடங்களுக்குள் அவரது அயராத உழைப்பும் விடா முயற்சியும் அவரை நியூயோர்க்கில் அதனைப் போன்ற 20 விற்பனை நிலையங்களுக்கு உரிமையாளனாக்கியது.

அவரது கடின உழைப்பினால் 10 வருடங்களில் தனது வணிகத் தொழிலை கட்டியெழுப்பினார்.

அடுத்த ஐந்து வருடங்களின் இறுதியில் அமெரிக்காவெங்கிலும் 18000 பேர்கள் பணிபுரியும் 1600 விற்பனை அங்காடிகளுக்கு அதிபதியானார். உலகக் கோடீஸ்வரர்களின் பட்டியல் இடம்பிடித்தார். கோடீஸ்வரரானாலும் தனது பழைய வாழ்க்கையை அவர் மறந்துவிடவில்லை. உதவி தேடும் நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதில் நாட்டம் கொண்டார். தனது சிறுபராயத்தின்போது சாதாரண பொலிஸாக இருந்த அவரது தந்தையார் அனுபவித்த கஸ்ரங்களையும் கடமை நேரங்களில் குற்றவாளிகளைக் கைதுசெய்ய முற்படும் சமயங்களில் பலதடவைகளில் அவர் மயிரிழையில் உயிர்தப்பிய சம்பவங்களையும் நினைவுகூர்ந்து அங்ஙனம் கடமையின் நிமித்தம் உயிரிழப்புக்கும் பொலிஸ்காரர்களின் குடும்பங்களுக்கு உதவவேண்டும் என்ற ஆர்வம் மில்ரன் மனதில் இயல்பாகவே வேரூன்றிவிட்டது.

அதுவே கடமை நேரத்தில் கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரியான லூயிஸ் மில்லர் மற்றும் அன்ரனி வென்டிற்றி ஆகியோரின் குடும்பங்களுக்கு உதவி செய்ய வைத்தது. இவ்வாறாக அவசர உதவிகோரிப் பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவருக்குத் தெரிவிக்கும் பொருட்டு மில்ரன் ஒரு விசேட பிரிவை இதற்கென நியமித்திருந்தார். அதன் பிரகாரம் உதவி கோரியவர்களுக்குத் தனது பெயரை வெளியிடக்கூடாது என்ற கடுமையான நிபந்தனையையும் அவர்களுக்கு விதித்திருந்தார் அவர்களும் அதனைப் பேணிவந்தனர்.

அவர் தனது உடல் நிலைமையினரைக் கருத்திற்கொண்டு தனது 85 வது வயதில் தனது சொத்துக்கள் நியூயோர்க்கில் இயங்கிவரும் சர்வதேசரீதியிலான அறக்கொடை நிறுவனமொன்றிற்கு உயில் எழுதி வைத்தார். அதனால் கிடைக்கும் வருமானத்தை உலகில் உதவிகோரும் வறிய மக்களுக்கு உதவி புரிய வேண்டுமெனவும் உயிலில் நிபந்தனை விடுத்திருந்தார்.

அவர் தனது 86 வது வயதில் மரணமானார். அதன் பின்னர் தான் அவரது பெயரும் அவர் வாரிவழங்கிய உதவிகளும் வெளிவந்தன.

அவரது உதவியால் சத்திர சிகிச்சை பெற்று உயிர்தப்பிய சிறுமியான றோஷியோ அவர் இறக்கும்போது 55 வயதான ஓர் மருத்துவ நிபுணராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அப்போதுதான் தனது உயிரைக் காப்பாற்றிய அந்த நல்ல இதயமுள்ள மனிதர் மில்ரன் பீட்டர் என்பது தெரியவந்தது றோஷியாவிற்கு.

பலகோடிகளின் அதிபதியான மில்ரன் பீட்டரின் பரந்த தயாள உள்ளம் இன்றும் பலராலும் நினைவு கூரப்படுகின்றது.

தமிழில் - ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான எதிர்கொள்ளலில் இளைப்பாறுங்கள்

தம்மைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சிகளுக்கு அதிகப்படியாய் எதிர்கொண்டு அவஸ்தைப்படுபவர்களைப் பற்றிப் பார்த்தோம்.

இப்பொழுது குறைவான எதிர் கொள்ளலைக் கவனிப்போம். இது அதிகப்படியான எதிர்கொள் எலுக்கு எதிர்மறையான ஒரு விஷயம். எதிர்மறை என்பதினால் பலன்களும் எதிராகவே அமைய வேண்டும். அதாவது நல்ல பலன்களே குறைவான எதிர்கொள்ளலில் கிட்ட வேண்டும். இதுதான் உண்மை.

அதிகமான சூடேறிய, எதிர்ப்படும் பொருட்களைத் தூக்கி எறியும், இஞ்சின் போன்றது, அதிகப்படியான எதிர்கொள்ளல், வாழ்க்கையில் குளிர்ந்த அமைதியான கட்டுப்பாட்டு வழி, குறைவாய் எதிர் கொள்ளல்.

குறைவாய் எதிர்கொள்ளல் வாழ்க்கையையோ அதன் எரிச்சலூட்டும் ஆசாமிகளையோ, வெறுப்பூட்டும் சூழ்நிலைகளையோ பொருட்டாய் மதியாமலிருத்தல்.

எதைப் பற்றியும் இறுக்கம் காட்டாமலிருப்பது.

ஆங்கில எழுத்தாளர் கிப்ளிங் சொன்ன ஆலோசனை இந்த வழிமுறைக்குப் பொருந்தும்.

'வெற்றியும் விபத்தும் ஒன்றே போல் நினை, இரண்டுமே உன்னை ஏமாற்றி அருகில் வரும்; விலகிச் செல்லும்.'

கிப்ளிங்கின் கவிதை குறைவான எதிர்கொள்ளலை நமக்கு போதிக்கும் மகா காவியம். இது சிபாரிசு செய்யப்பட்ட கவிதை மட்டுமல்ல. தொடர்ந்து படித்து உருவேற்ற வேண்டியது. அமைதியாய், புத்திசாலித்தனமாய், வெற்றிகரமாய் இந்த உலகில், சிக்கலான எதிர்பாராத சோகங்கள் நிரம்பிய - இந்த உலகில் வாழ நினைக்கும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது.

குறைவான எதிர்கொள்ளல் என்பது என்ன?

எலிகளைக் கொல்ல பண்டக சாலையையே எரிய விடாமலிருப்பது. நமது மிதமிஞ்சிய எதிர்கொள்ளலில் சிக்கி அழியப் பிறக்கவில்லை எலிகள். மற்ற எந்த மிருகமோ, பூச்சியோ, மனிதனோ நம்மால் அழிய வேண்டாம்.

குறைந்த அளவு எதிர்கொள்ளல் நீங்கள் மேற்கொள்ளும் போது, பின்னால் தேவையான போது அழுத்தம் கொடுக்கும் உரிமை உங்கள் கைவசம் உள்ளது. அதுவும் எந்த அளவு கொடுக்க வேண்டுமோ அந்த அளவு மட்டுமே.

குறைந்த அளவு எதிர்கொள்ளல் நீங்கள் மேற்கொள்ளும் போது, பின்னால் தேவையான போது அழுத்தம் கொடுக்கும் உரிமை உங்கள் கைவசம் உள்ளது. அதுவும் எந்த அளவு கொடுக்க வேண்டுமோ அந்த அளவு மட்டுமே.

குறைந்த அளவு எதிர்கொள்ளல் உங்கள் கட்டுப்பாட்டை அதிகமாக்குகிறது. கட்டுப்பாடு அதிகமாகும்போது ஆற்றலும், தலைமைச் சக்தியும் உங்கள் கைவசம்.

நீங்கள் கற்று உபயோகிக்க வேண்டிய ஒரு நிரூபிக்கப்பட்ட வெற்றி முறை இது.

அவசரப்படாதீர்கள்; தாமதித்த எதிர்கொள்ளலே தலைசிறந்தது!

எல்லா வழிமுறைகளையும் அலசி ஆராய்ந்துதான் சிறந்த முடிவுக்கு வர முடியும். எல்லாத் தகவல்களும் தெரிந்த பிறகே செயலில் இறங்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் துரிதமாகச் செயல்பட வேண்டிய நெருக்கடி நிலைகளை மிகக் குறைவாகவே சந்திப்பீர்கள்.

ஆனால் தினமும் நீங்கள் கொடுக்கிற முடிவுகளில் தாமதமான எதிர்கொள்ளல் பிரச்சினையின் பல கோணங்களையும் நீங்கள் ஆராய்ந்து அலசி முடிவு எடுக்க உதவும்.

தீர்வுகளை ஒத்திப் போடுவதற்கான ஆலோசனை இல்லை இது.

ஒரு பிரச்சினையின் எல்லா ழாற்றுக் கோணங்களையும் பரிசீலித்த பின் துரிதமாய் முடிவு எடுக்கத் தூண்டும் வழி. நம்பிக்கையுடன் துரிதமாய் செயல்பட பிரச்சினையின் பல கூறுகளும் ஆராயப்பட வேண்டும் என்பதே நம் நோக்கம். மாற்று வழிகளை யோசிக்கத் தேவையான நேரம் வினாடிகளாகவோ, நிமிடங்களாகவோ கூட இருக்கலாம். தாமதித்து எதிர்கொள்வது என்றால் மிக மெதுவாக, நேரத்தை வீணடிக்கும் வழிமுறை என்பதன்று. ஒரு செயலை சரியாய்ச் செய்வதுதான் இதன் நோக்கம் - முதல் முறை தவறாய் செய்துவிட்டு மீண்டும் சரியாய் செய்ய முடியாது என்பதனால்.

இரண்டாம் முறை செய்யச் சந்தர்ப்பம் கிடைப்பதே தூர்லாபம் ஆயிற்றே?

முக்கியமான சிக்கலான தீர்வுகள் பல கோணங்களிலிருந்து ஆராயப்பட வேண்டியவை. விரிவாய் அலசப்பட வேண்டியவை. நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கவும் நேரிடலாம். இந்த வழிமுறைகள் நேரம் எடுத்துக் கொள்ளும். இருக்கட்டும். அவசரமாய், யோசனையின்றி, தீர்மானிக்காமல் செயலாற்றத் துணியாதீர்கள்.

நீங்கள் உடனடியாக ஒப்புதலான முடிவு எடுக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டும் ஆசாமியிடம் ஜாக்கிரதையாய் இருங்கள். அவர் ஆலோசிக்க உங்களுக்கு நேரம் அளிக்கமாட்டார் - விளைவுகள் விபரீதமாகி விடும்.

வெற்றிகரமான தீர்வுகளுக்கு என்று பெயர் எடுக்க விரும்பினால், அதனால் பொருள் ஈட்ட விரும்பினால், நீங்கள் தாமதித்து எதிர்கொள்ளுவதில் தயக்கம் காட்டாதீர்கள்.

எதிர்கொள்வதில் பூஜ்யம் இன்னும் சக்தி வாய்ந்தது.

எதிர்கொள்ளல் பூஜ்யம் - ஒன்றுமே செய்யாமலிருப்பது. எப்படி?

அநேக சமயங்களில் மிகுந்த பலனளிக்கும் எதிர் கொள்ளல், வெற்றிகரமான எதிர்கொள்ளல் என்ன தெரியுமா? எந்தவிதமாகவும் **எதிர்கொள்ளாதிருப்பது தான்.**

2. தேவையற்ற எதிர்கொள்ளல் அல்லது இன்னும் மோசமான மிதமிஞ்சிய எதிர்கொள்ளல்.

அப்படியே விட்டு விடும் அரிய கலையைத் தொடர்ந்து அந்த அத்தியாயம் போதிக்கிறது. இந்தக் கலையை நீங்கள் அவசியம் கற்க வேண்டும்.

அதே நூலின் இன்னொரு அத்தியாயத்தின் தலைப்பு 'மழை பெய்யட்டும்' இது அமெரிக்க கவிஞர் லாங்ஃபெல்லோ அவர்களின் எளிய சிறிய உரையை அடிப்படையாகக் கொண்ட ஞான வாக்கியம்.

'மழை பெய்யும் போது ஒருவர் செய்யக் கூடிய மிகச் சிறந்த செயல் என்ன தெரியுமா? மழை பெய்யட்டும் என்று விட்டு விடுவதுதான்.'

நாமும் அப்படியே விட்டுவிட வேண்டும். அதுவே சரி. வாழ்க்கையில் பல சூழ்நிலைகள் மழையைப் போலவே நம்மால் ஒன்றும் செய்ய முடியாதவை. நாம் ஏற்றே தீரவேண்டியவை.

நாம் எரிச்சல் கொள்வதால், உபத்திரவம் கொள்வதால், கவலை அடைவதால் அவை மாறப் போவதில்லை. நம்முடைய எதிர்கொள்ளல் இப்போப்பட்ட சூழ்நிலைகளில் ஒன்றுமில்லாததாக (பூஜ்யமாக) இருப்பதே சாலச் சிறந்தது.

பல சூழ்நிலைகளில் தினந்தோறும் மாற்று வழிமுறைகள் புலனாகும். பல வழிகளில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறை என்ன தெரியுமா? மாற்று வழிகளில் ஒன்றுமே செய்யாமலிருப்பதையும் ஒரு வழியாகக் கருதுங்கள்.

பிறர் உங்களைச் செய்ய சொல்வதால் நீங்கள் ஏதாவது செய்தே தீர வேண்டுமென்பதில்லை.

சும்மா இருப்பதும் ஒரு வழிமுறை என்பதை மனத்தில் கொள்ளுங்கள். தீர்மானமாகச் சும்மா இருக்க முடிவு எடுங்கள். பிரச்சினையை அப்படியே விட்டு விடுங்கள்.

பிறரால் இயக்கப்படும் பொம்மலாட்ட பொம்மைகள் இல்லை நீங்கள். எதிர்கொள்ளல் பூஜ்யம் என்ற வழிமுறை உங்கள் விழிப்புணர்வில் எப்பொழுதும் இடம்பெற்றிருக்க வேண்டும்.

உங்கள் கட்டுப்பாட்டில் அடங்கிய மாற்று வழி முறை என்பதைக் காட்டும் ரீதியாக, நீங்கள் எதிர்கொள்ளல் பூஜ்யம் வழிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மனோதத்துவ வைத்தியர்கள் பாணியில் சொன்னால், தொலைபேசி மணி அடிக்கட்டும், ' தொலைபேசி மணி அடித்தால் உடனே அதைக் காதில் பொருத்திப் பேசத் தொடங்குவது' அநேகமாக எல்லாரும் செய்யக் கூடிய ஒரு நடவடிக்கை.

மணி அடிக்கும் உங்கள் தொலைபேசியை நீங்கள் கையில் எடுத்துப் பேசுவது உங்கள் விருப்பத்திற்கு உட்பட்ட செயல். நீங்கள் அதை லட்சியம் செய்யாமல் கூட இருக்கலாம். நீங்கள் கையில் எடுக்கும் போது சுயமாகச் சிந்தித்து அந்த நடவடிக்கையில் இறங்குவீர்கள்.

உங்கள் தொலைபேசி மணி சமயங்களில் அடித்த வண்ணமிருக்கட்டும்.

நீங்களாகப் பிரக்ஞை பூர்வமாகத் திட்டமிட்ட வகையில் அதை கையில் எடுக்கப் போகிறீர்களா இல்லையா என்பதை நீங்களே தீர்மானம் எடுக்கும் வரையில், அது அடித்துக் கொண்டே இருக்கட்டும்.

இது கொஞ்சம் முரட்டு யோசனையாகத் தோன்றலாம் . ஏனென்றால் எதிர் முனையில் பேசத் தயாராய் இருக்கிற மனிதர்கள் சில விநாடி நேரங்களை நீங்கள் வீணாக்குகிறீர்கள். மணி அடித்ததும் நாக்கில் எச்சில் ஊற சாப்பிட்டுக் கிண்ணத்தை காவிச் செல்லும் பாவ்லோவின் (ரஷ்ய விஞ்ஞானி) நாய்கள் போல நாங்கள் மணி அடித்ததும் தொலைபேசியை நாடி ஓடத் தேவையில்லை.

எதிர்கொள்ளல் பூஜ்யம் என்ற வழிமுறை உங்களை முரண்டு பிடிப்பவராக, முட்டுக்கட்டைப் போடுபவராக, எதிர்ப்பு காட்டுபவராக மாற்றத் தேவையில்லை. **உங்கள் செயல்களை நீங்கள் சிந்தனைப்பூர்வமாகத் திட்டவட்டமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் உணர்வை ஏற்படுத்துவது தான் இந்த வழிமுறையின் நோக்கம்.**

ஒவ்வொரு தகராறிலும் நீங்கள் கலக்கத் தேவையில்லை. விவாதத்திற்குரிய குறிக்கோள்களில் நீங்கள் கட்சி கட்ட வேண்டாம்; அதிகம் பேரை விரோதிகளாக்கிக் கொள்ள வேண்டாம்.

நண்பர்களும், இந்த மார்க்கத்தில் கிட்டலாம்; ஆனால் தகராறில் ஏற்படும் பகைவர்கள் தொடர்ந்து பகைவர்களாகவே இருக்கிறார்கள். நண்பர்கள் எவருமே தெரிந்தவர்களாக மாறி விடுகிறார்கள். நண்பர்களை உருவாக்க வேறு சீக்கிரமான, சுலபமான நல்ல வழிகள் இருக்கின்றன. எதிரிகளை ஏற்படுத்தக் கட்சி கூட்டுதலை விட்டால் வேறு வழியில்லை.

நிறைய விவகாரங்களில், அதிகப்படியான ஈடுபாடு உங்கள் நேரத்தைப் பாழடிக்கும். உங்கள் சக்தியை விரயமாக்கும்; உங்கள் வாழ்க்கையை நிலைகுலையச் செய்யும்.

ஒவ்வொரு பணியையும் நீங்கள் ஏற்கத் தேவையில்லை; ஒவ்வொரு பளுவையும் நீங்களே சுமக்கத் தேவையில்லை. உங்கள் மீது திணிக்கப்படும் அல்லது வருத்தி ஏற்றப்படும் எல்லா பொறுப்புகளுக்கும் நீங்கள் பதில் சொல்லத் தேவையில்லை.

பிரபஞ்சத்தின் பொது மேலாளராக உங்களை யாரும் நியமிக்கவில்லை. பிரபஞ்சத்தின் எண்ணற்ற பிரச்சினைகளை நீங்கள் ஒருவர் மட்டுமே தனிப்பட தீர்க்கத் தேவையில்லை.

பிரச்சினைகளைத் தீர்க்க தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், லாபகரமான உத்தியோகங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் சூழ்நிலைகளை எப்படிச் சமாளிக்கிறார்கள் என்று அது உங்களை பாதிக்காத பட்சத்தில் - நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. அதைப் பற்றி நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாமலிருக்கும் போது.

உங்களை பாதிக்காத பிரச்சினைகளில் நீங்கள் உடல், மனம், உணர்ச்சி இவற்றை செலுத்தி வருத்தமடையத் தேவையில்லை. அந்த பிரச்சினைகளில் நிஜமாகவே ஈடுபட்டிருப்பவர்கள் உங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முன் வரப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் மின்சாரத்தை பாய்ச்சி சாதனை



அமெரிக்காவைச் சேர்ந்த மேஜிக் நிபுணர் ஒருவர் தனது உடலில் 1 மில்லியன் வோல்ட் மின்சாரத்தை பாய்ச்சி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்தவர் டேவிட் பிளேன் (வயது 39). மேஜிக் நிபுணரான இவர், பல்வேறு சாகச நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை வியப்பில் ஆழ்த்தி வருகிறார்.

இந்நிலையில் 10 லட்சம் வோல்ட் மின்சாரத்தை தனது உடலில் பாய்ச்சி சாதனை நிகழ்த்தப் போவதாக அறிவித்திருந்தார்.

இச்சாதனை நிகழ்ச்சி நியூயார்க் நகரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக மிகப் பெரிய கூண்டு அமைக்கப்பட்டது. அதன் நடுவில் 20 அடி உயரத்தில் மேடை உருவாக்கப்பட்டது.

அதில் ஏறியபடி நின்ற டேவிட்பிளேன் உடலில் 10 லட்சம் வோல்ட் மின்சாரம் பாய்ச்சப்பட்டது. அது தனது உடலில் தாக்கி பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்க அவர் விஷேட உடை அணிந்து இருந்தார். அவரது உடலில் 72 மணி நேரம் மின்சாரம் மின்னல் போன்று அலை அலையாக பாய்ந்து தாக்கியது.

சாதாரணமாக வீட்டு உபயோகத்துக்கு பயன்படுத்தப்படும் 240 வோல்ட் மின்சாரம் உடலில் பாய்ந்தாலே உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

ஆனால் 10 லட்சம் வோல்ட் மின்சாரத்தை உடலில் பாய்ச்சி மெய்சிலிர்க்க வைத்த இந்த அரிய காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் பிரமிப்புடன் கண்டு மிரட்சியுடன் ரசித்தனர்.

இவர், இதற்கு முன்பு மண்ணுக்குள் புதைந்தும், ஐஸ்கட்டிக்குள் உறைந்தும் மீண்டும் உயிருடன் வந்து பல்வேறு சாகசங்களை நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

துள்ளாத வயதிலும் உழைக்கும் மூதியவர்

வாஷிங்டனில் 59 வயதுடைய முதியவர் ஒருவர் தனது துள்ளாத வயதிலும் அழகிய வீடு ஒன்றினை தனது சொந்த முயற்சியினால் உருவாக்கியுள்ளார்.

இவர் இந்த வீட்டை தனது பேரக்குழந்தைகளுக்காக செய்துள்ளார்.

மோனாலிசா ஓவியத்தில் இருப்பது பெண் இல்ல..!

உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தின் மாடல் பெண் அல்ல ஒரு ஆண் என்று இத்தாலிய ஆராய்ச்சியாளர் சில்வானோ வின்செடி என்பவர் தெரிவித்துள்ளார்.

கவிஞர்கள் அழகிய பெண்களை வாழும் மோனாலிசா என்று வர்ணிப்பதுண்டு. ஆனால் இனி அவ்வாறு கூற முடியாது. காரணம் லியோ நார்டோ டாவின்சி தனது உதவியாளராக இருந்த காப்ரோட்டி என்பவரை மாடலாக வைத்துத்தான் மோனாலிசாவை வரைந்துள்ளார்.

உலகப் புகழ்பெற்ற ஓவியம் மோனாலிசாவுக்கு போஸ் கொடுத்தவர் கியான் கியாகோமோ காப்ரோட்டி என்னும் ஆண். அவர் சுமார் 20 ஆண்டுகளாக லியோ நார்டோ டாவின்சியிடம் உதவியாளராக இருந்தார். அவரை முன்மாதிரியாக வைத்துத் தான் மோனாலிசா வரையப்பட்டுள்ளது என்றார்.

11 வயது சிறுவனால் கண்டு பிடிக்கப்பட்ட 30,000 வருடங்களுக்கு முற்பட்ட மமத் யானையினம்!

இளம் சிறுவர்கள் குறும்புகள் செய்து எதையாவது அழிக்கத்தான் முற்படுவார்கள், ஆனால் ரஷியாவைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவனொருவன் 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மமத் எனும் அழிவடைந்த யானையினத்தை கண்டு பிடித்து பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளான்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த இவ்விலங்கு உறைபனியினால் மூடப்பட்டு இயற்கையாகவே சிதைவடையாது பாதுகாக்கப்பட்டுள்ளது.

Taymyr, வடக்கு ரஷ்யாவிலுள்ள பகுதியில் பாறைகளில் விளையாட்டுக்காக அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது மமத் யானையின் மேற்புறம் வெளியில் தென்பட்டது.

சைபீரியாவில் கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே மமத் போன்ற யானையினம் வாழ்ந்து வந்தமை ஆய்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருமண ஆடைகள் இப்படியெல்லாமா இருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா விமர்சனம்

கணவர், மகன், மகளுடன் வாழும் ஸ்ரீதேவிக்கு குடும்பத்திலிருந்து அன்பு, பரிவு எல்லாம் கிடைக்கிறது. கிடைக்காத ஒன்று மரியாதை. படிக்காதவள் என்பதை கணவரும், பிள்ளைகளும் மறைமுகமாக குத்திக் காட்டும்போது தன்மானத்தால் கூனிக் குறுகிப்போகிறார். இந்நிலையில் நியூயோர்க்கில் வாழும் அக்கா மகளின் திருமண வேலைகளுக்காக அமெரிக்கா அழைக்கப்படுகிறார் ஸ்ரீதேவி. ஆங்கிலம் தெரியாத ஸ்ரீதேவி, எப்படி சமாளிக்கப்போகிறாரோ என பயந்தே அவரை அமெரிக்கா அனுப்புகிறார்கள். அங்கு செல்லும் ஸ்ரீதேவி இங்கிலீஷ் தெரியாமல் அவமானப்பட, குறுகிய காலத்தில் இங்கிலீஷ் பேசக் கற்றுத் தரும் பள்ளியில் சேர்கிறார். அங்கு அவர் கற்றுக்கொண்டாரா? தன் தன்மானத்தை காத்துக் கொண்டாரா என்பது மீதி கதை.

14 வருட இடைவெளிக்கு பிறகு ஸ்ரீதேவி. மீண்டும் 'கோகிலா'வில் பார்த்த அதே அப்பாவி பெண்ணாக திரும்பி வந்து ஆச்சர்யப்படுத்துகிறார். இங்கிலீஷ் லிட்ரேச்சர் நீ சொல்லித் தருவியா?' என்று மகளும், என் மனைவியின் இங்கிலீஷ் அத்தனை சுத்தமா இருக்காது' என்று கணவனும், அம்மாவின் ஆங்கில உச்சரிப்பை கிண்டல் செய்யும் மகனும் வார்த்தையால் குத்தும் காட்சிகளில் அவமானத்தை விழுங்கி, கண்ணீர் வடித்து, மறுநிமிடமே சகஜ மாகும் சில வினாடி நடிப்பில் தெரிகிறது தேசிய விருதுக்கான அறிகுறி. கிளைமாக்சில் கடைசி எக்ஸாமுக்குப் போக முடியாத சூழ் நிலையில் "பேவரைட் சப்ஜெக்ட்ல தோத்துட்டு மற்ற சப் ஜெக்ட்ல ஜெயிச்சு என்ன பண்ணப்போறேன்" என்று இயலாமையை வெளிப்படுத்தும்போதும், எளிய ஆங்கிலத்தில் மணமக்களுக்கு அறிவுரை சொல்லும் சாக்கில் தன் குமுறலை குடும்பத்துக்கு சொல்லும்போதும் ஸ்ரீதேவி, வன்வுமன் ஆர்மியாக படத்தை தூக்கிச் செல்கிறார்.

மனைவியை தாழ்த்திப் பேசும் கணவன் கேரக்டரை அதில் ஹுசைன் அற்புதமாகச் செய்திருக்கிறார். ஸ்ரீதேவியின் மகளும், மகனும் பிள்ளைகளாக வாழ்ந்திருக்கிறார்கள். அமெரிக்க அக்காவின் நடிப்பிலும், அவரது மகளாக வரும் பிரியா ஆனந்தின் நடிப்பிலும் அப்படியொரு யதார்த்தம். விமானத்தில் சகப் பயணியாக வரும் அஜீத்தின் தன்னம்பிக்கை பேச்சும் நடிப்பும் அற்புதம். அமித் திரிவேதியின் இசை நிறைய இடங்களில் மவுனித்து தேவையான இடங்களில் மென்மையாக இசைத்து தாலாட்டுகிறது. லக்ஷ்மண் உடேகரின் ஒளிப்பதிவு பளிச்சென்று இருக்கிறது.

ஒரு பெண்ணின் மென்மையான தன்மானப் போராட்டத்தை இத்தனை கவித்துவமாக இதுவரை யாரும் சொன்னதில்லை. 40 நாளில் யாரும் ஆங்கிலம் கற்கமுடியாது. ஆனாலும் கொஞ்சம் தெரிந்த ஸ்ரீதேவி அதை மெருகேற்றிக் கொள்வது போல் காட்டி, கிளைமாக்சில் ஆங்கிலத்தில் பொளந்து கட்டுவதாகக் காட்டாமல், தட்டுத்தடுமாறி பேசுவதாக காட்டியிருப்பதில் கவனம் ஈர்க்கிறார் இயக்குநர்.

ஸ்ரீதேவிக்கு உடன் படிக்கும் பிரெஞ்ச் இளைஞருடன் வரும் நட்பு கவிதைதான். ஆனால் அவருக்கு தன் மீது காதல் இருப்பதை உணர்ந்த பிறகு, "இரண்டு குழந்தைக்கு நான் தாய்" என்று ஏன் சொல்லத் தயங்குகிறார்? ஒரு சந்தர்ப்பத்தில் அந்த இளைஞர் மீது ஸ்ரீதேவி சாய, சில நொடி சஞ்சலத்துக்கு ஆளாவதும், அவருடன் ஸ்ரீதேவியை சந்திக்கும் பிரியா ஆனந்த், யார் அவர் பிரெஞ்சுக்காரனா, பிரிட்டிஷ்காரனா? பிடிச்சிருக்கா?' என்று கேட்பதும் நம் கலாசாரத்தோடு ஒட்டவில்லை. கிளைமாக்சில் நடக்கும் வடக்கத்திய திருமண முறையும் படத்தை அந்நியப்படுத்துகிறது. இப்படி சில குறைகள் இருந்தாலும் 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' எல்லோருக்குமானதுதான்.

அம்மா சென்டிமென்ட்

'வாகை சூடவா' இனியா, தற்போது நடித்துள்ள படம், 'அம்மாவின் கைப்பேசி'! ஏற்கனவே, அம்மா மீது அதிக பாசம் கொண்ட அவரை, படத்தின், அம்மா சென்டிமென்ட் கதையை உருக்கமாகச் சொல்லி, கண்கலங்க வைத்துள்ளார் தங்கர்பச்சான். அதனால், அதிக ஈடுபாட்டோடு தான் நடித்ததாக சொல்லும் இனியா, "அம்மா மீது பாசம் இல்லாதவர்களுக்கு கூட, பாசத்தை ஏற்படுத்தும் படம். அதனால், இதில் நடித்தது, மனதளவில் பெரிய சந்தோஷத்தை தந்துள்ளது" என, சொல்லும் இனியா, "படத்தை நான், என் அம்மாவுக்கு சமர்ப்பிக்கிறேன்" என்கிறார்.

டிசம்பர் 14 இல் 'அலெக்ஸ் பாண்டியன்'

கார்த்தி, அனுஷ்கா நடித்துள்ள 'அலெக்ஸ் பாண்டியன்' பட டிரைலர்கள் 'கும்கி' படத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கும்கி' தீபாவளிக்கும் அலெக்ஸ் பாண்டியன்' டிசம்பர் 14ம் தேதியும் வெளியாக உள்ளதாக ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

'வழக்கு என்' ரீமேக்கில் யஷிகா

கன்னடத்தில் ரீமேக்காகும் 'வழக்கு எண் 18/9' மற்றும் 'போராளி' படங்களில் நடிப்பதாக கூறியுள்ளார் யஷிகா. "தமிழில் ரிலீசான 'வாடா போடா நண்பர்கள்', 'முப்பொழுதும் உன் கற்பனைகள்' படங்களில் நடித்தேன். பிறகு வாய்ப்புக்கு காத்திருந்தேன். எதுவும் வரவில்லை. கன்னடத்தில், தமிழில் வெளியான வழக்கு எண் 18/9' படம், கேஸ் 18/9' என்றும் போராளி' படம், யாரே கூகாடலி' என்ற பெயரிலும் ரீமேக் ஆகிறது. இந்தப் படங்களில் நடித்துவருகிறேன். தவிர ஜெய்பதுரங்களி', டிராமா' படங்களிலும் நடிக்கிறேன். கன்னடத்தில் யஷிகா' என்ற பெயரை மாற்றி, சிந்து லோக்நாத் என்ற பெயரில் நடித்து வருகிறேன்" என்கிறார். யஷிகா.

அஞ்சலியின் அவதாரம்

பிரபாமென்ஸ், கிளாமர் என்று தனது தனித்திறமையை காண்பித்து வந்த அஞ்சலி, சமீபகாலமாக ஆர்யா, சந்தானத்துடன் இணைந்து நடித்து வரும் 'சேட்டை' படத்தில் சிரிப்பு வெடிகளை கொளுத்திப்போட்டுள்ளாராம். படம் முழுக்க கலகல கொலைவெறி காட்சிகள் என்பதால், தினமும் முன்னதாகவே ஸ்பாட்டுக்கு வந்து ஆர்யா-சந்தானம் செய்யும் கொலைவெறி ரகளையில் தானும் கலந்து கொண்டு பயிற்சி எடுத்து நடித்திருக்கிறார் அஞ்சலி.

'தலைவன்' ஆகிறார் விஜ

'கிரீடம்', 'தெய்வத்திருமகள்', 'தாண்டவம்' உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் விஜய், அடுத்து, நடிகர் விஜய்யை வைத்து, 'தலைவன்' என்ற படத்தை இயக்குகிறார். இமேஜுக்கு ஏற்ற தலைப்பு என்பதால், ரசிகர்களுக்கு நிச்சயம் பிடிக்கும் என்கிறார், இயக்குனர் விஜய்.

தீபாவளிக்கு வருகிறது 'கும்கி'

'மைனா' ஹிட்டுக்குப் பிறகு பிரபு சாலமன் இயக்கி உள்ள படம் 'கும்கி'. பிரபு மகன் விக்ரம் பிரபு, லட்சுமி மேனன் ஜோடியாக நடித்து உள்ளனர். லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனமும், யுடிவியும் இணைந்து தயாரித்துள்ளன. இமான் இசை. யுகபாரதி பாடல்கள். சுகுமார் ஒளிப்பதிவு. இதன் பாடல் வெளியீட்டு விழாவுக்கு பிறகு படத்திற்கு மிகுந்த எதிர்பார்ப்பு உண்டு. இதனையடுத்து, படம் தீபாவளிக்கு ரிலீஸ் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜினி கோடி 240 ?

ரஜினியை சக்சேனா சந்தித் தார், 240 கோடி சம்பளம் தருகிறேன் முப்பது நாட்கள் கால்ஷீட் தாருங்கள் என்று கேட்டார் என மில்லியன் டாலர் செய்தியொன்று கோடம்பாக் கத்தை சுழற்றி யடிக்கிறது. ஆமாம் ரஜினி யிடம் பேசியது உண்மை தான், ஆனால் சம்பள விஷயம், அது மேட்டரேயில்லை என அந்த செய்திக்கு இறக்கை தந்தார் சக்சேனா. இப்போது அந்த செய்தி உலகம் சுற்றிக் கொண்டிருக்கிறது.

மாந்த்ரிக நடிகை

சமர்த்தாக நடித்து வந்தவருக்கு தோல் அலர்ஜியால் ஏற்பட்ட சறுக்கல்கள் வெயில் கால பனியாக மாறி விட்டன. இருந்தும் கேரளக்கரையிலிருந்து மந்திரவாதியை அழைத்து பரிகார பூஜை நடித்தியி ருக்கிறார். இனி தோலில் மட்டுமல்ல தொழிலிலும் தொந்த ரவு ஏற்படாமல் இருக்கவே இந்தப் பூஜை.

தயாரிப்பாளர் ஆகிறார் ஹன்சிகா?

ஹன்சிகா பற்றி தினமும் ஒரு செய்தி வந்து கொண்டு தான் இருக்கிறது. பாவம் அவர், தினமும் ஒரு வதந்திக்கு பதில் அளித்து வருகிறார். ஹன்சிகா விரைவில் படம் ஒன்றை தயாரிக்கிறார் என்பது தான் லேட்டஸ்ட் வதந்தி. மேலும், அவர் கோலிவுட்டிலுள்ள ஒரு பெரிய நடிகரிடம் பேச்சு நடத்தி வரகவதாகவும், விரைவில் முடிவை அறிவிப்பார் என்றும் கோலிவுட் பக்கம் பேசப்பட்டு வருகிறது.

மீனாளின் அதிர்ஷ்டம்

"தவமாய் தவமிருந்து' படத்தில், இயக்குநர் சேரனால் அறிமுகம் செய்யப்பட்டவர் மீனாள். இப்போது, 'அன்னக்கொடியும் கொடி வீரனும்' படத்தில், மீனாளுக்கு, நார்த்தங்கா என்றொரு கதாபாத்திரத்தைக் கொடுத்து, மீண்டும் அவர் மீது, வெளிச்சம் பாய்ச்சி உள்ளார் பாரதிராஜா. இதையடுத்து, தற்போது யதார்த்தமான வேடங்களுடன், பல இயக்குநர்கள், மீனாளை முற்றுகையிட்டுள்ளனர். அதனால், காலியாகவே இருந்த அவரது, கால்ஷீட் டைரி வேகமாக நிரம்பிக் கொண்டிருக்கிறது.

80களின் ஸ்டைலில் சாந்தினி

"இயக்குநர் பிரவீன் இயக்கும் 'காளிச்சரண்' படம் மூலம் தெலுங்கில் அறிமுகமாகிறேன். 1980களில் நடக்கும் கதை என்பதால், அந்த காலகட்டத்தில் நடித்த சில நடிகைகளின் படங்களைப் பார்த்து, அவர்களின் ஸ்டைல் மற்றும் மேக்கப், காஸ்டியூம், மேனரிசங்களை தெரிந்துகொள்கிறேன் . மற்றவர்களின் நடிப்பைப் பார்த்தாலும், அதைக் கொப்பியடிக்க மாட்டேன்" என்கிறார் நடிகை சாந்தினி.

உலக சினிமா



2006ல் குசாபே இயக்கிய படம். முதல் காட்சியே காந்தாரி மிளகை கடித்த மாதிரி தலைக்குப் பிடிக்கிறது போலவே இருக்கும் இவரது படங்க ளில். இந்தப் படமும் அப்படியே காந்தாரி எபெக்ட். உக்ரைன் இளம் பெண்ணொருத்தி (இளம் பெண் ணுக்கும் பேரிளம் பெண்ணுக்கும் நடுத்தரமாக என்பதுதான் சரி) இத்தா லிக்கு பயணம் செய்கிறாள். நடு நடுவே பேன்டேஜ் டைப் உடலுறவு வன்முறை காட்சிகள் வந்து போகின்றன. ஓகே இப்போது நமது கற்பனைக்கு வீட் கிடைத்துவிட்டது. இந்தப் பெண் யார்? எதற்காக எங்கு பயணம் செய்கிறாள்? தன்னை வன்முறையாக புணர்ந்தவர்களை தேடியா, அவர்களை பழி வாங்கவா? இல்லை தனது அந்த மாதிரி படங்களை கைப்பற்றவா? 8எம்எம் டைப் படங்களை பார்த்தவர்களுக்கு கற்பனை இந்த திசையில்தான் ஓடும்.

இத்தாலியில் அப்பெண் - பெயர் ஜரினா - வேலைக்கு முயற்சிக்கிறாள். அதுவும் குறிப்பிட்ட ஒரு அபார்ட்மெண்டில், குறிப்பிட்ட ஒரு குடும்பத்திடம். நாமிருவர் நமக் கொரு பெண் குழந்தை என்று குடும்பக்கட்டுபாட்டை கடைப்பிடிக்கும் குடும்பம் அது. அவர்களுக்கு ஜினா என்ற வயதான வேலைக்காரி ஏற்கனவே இருக்கிறாள். அத னால் ஜரினாவால் அவர்களை நெருங்க முடிவதில்லை. இந்நிலையில் ஜினா படிக் கட்டில் தவறி விழுந்து மோசமாக அடிபடுகிறாள்.

ஒருவழியாக அந்தக் குடும்பத்திற்குள் நுழையும் ஜரினா அந்த பெண் குழந்தை யின் - இந்த குழந்தைக்கு அடிபாடாத மாதிரி விழத் தெரியாது. அடிக்கடி விழுந்து காயம்படுவது வாடிக்கை. அதனை மாற்ற ஒருபக்கம் ஜரினா கடுமையாக முயற் சித்துக் கொண்டே வீட்டின் சேப்டி லாக்கரை தேடி கண்டு பிடித்து சில டாக்குமெண்ட் களை கண்டடைகிறாள். இது திருட்டு இல்லை. நாம் முதலில் கற்பனை செய்த மாதிரி பழிவாங்குற ஹாலிவுட் டைப்பும் இல்லை.

நடுவில் ஜரினா தனது மொட்டைத் தலை பிம்பை கத்திரிக்கோலால் குத்தி கொலை செய்ததை பிளாஷ்பேக்கில் பார்க்கிறோம். திடீரென அந்த பிம்ப் உயிரோடு வந்து கத்திரிக்கோலுக்கெல்லாம் சாகிறவனா என்று சத்திரியத்தனமாக உறுமுகி றான். அதன் பிறகு.... நாம் எதிர்பார்த்த, பார்க்காத பல விஷயங்கள் நடக்கின்றன. ஆனால் ஜரினா எதற்காக அந்த குறிப்பிட்ட வீட்டைத்தேடி வந்தாள் என்பது. கதையோட்டத்தில் இதை கண்டு பிடிக்க குசாபே போனால் போகிறது என்று சில வசனங்களை வைத்திருக் கிறார். கண்டு பிடிக்க முடிந்தால் படம் கொஞ்சம் போரடிக்கும். சே.. இதுக்குதானா இந்த பில்டப்?

ஜரினாவாக நடித்த (தமிழில் எழுதினால் கண்டிப்பாக பல் சுளுக்கும் அதனால் ஆங்கிலத்தில்..) Ksenia Rappoport ரஷ்யாவைச் சேர்ந்த நாடக நடிகையாம். இவரின் முகம்தான் படத்தின் பெரிய ப்ளஸ். இவர் லேசாக கண்கலங்கினாலே சோக சேற்றில் சமாதியாகிவிடுகிறோம். அந்த பெண் குழந்தை க்யூட்.

ஷார்ப்பான எடிட்டிங், இந்தப் பக்கம் கமராவை வைத்திருக்கலாமே என்றெல்லாம் யோசிக்க வைக்காத ஒளிப்பதிவு, கமரா கோணங்கள். இசை எக்ஸலெண்ட். எனியோ மோரிகோன். ஒலிவர் ஸ்டோனின் யு டர்ன், லோலிட்டா, குசாபே வின் மெலினா படங் களுக்கெல்லாம் இசையமைத்த அதே மாஸ்டர். எடிட்டிங்கும், இசையும் கொஞ்சம் சொதப்பியிருந்தாலும் படம் காலி.

திரைமொழியில் இருக்கும் ஆளுமையை வைத்து குசாபே ஒரு சின்ன விஷி யத்தை எவ்வளவு அற்புதமாக எடுத்திருக்கிறார் என்று படம் பார்த்த பிறகு தோன்றி யது. ஒரு சின்ன விஷயத்தை திரைமொழியில் இருக்கும் ஆளுமையை வைத்து எப்படி சமாளிக்கிறாங்க என்றும் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றுக்குள்ளே பாம்பு!

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். இளைஞனாக இருந்த அந்த இளவரசன் அறிவுக்கூர்மைஉடையவனாக விளங்கினான்.

ஒருநாள் குதிரை மேல் அமர்ந்து காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான் இளவரசன். வழியில் திடுக்கிடும் காட்சி ஒன்றை கண்டான் அவன்.

மரத்தின் நிழலில் வாயைத் திறந்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்த ஒருவனின் வாய்க்குள் பாம்பு ஒன்று நுழைந்து கொண்டிருந்தது. எப்படியும் அவனைக் காப்பாற்ற நினைத்தான் இளவரசன். குதிரையை விட்டு இறங்கி அவன் அருகே வேகமாக ஓடி வந்தான். அதற்குள் பாம்பு முழுவதும் அவன் வயிற்றுக்குள் சென்று விட்டது. நடந்தது எதையும் அறியாமல் தூங்கிக் கொண்டிருந்தான் அவன்.

தன் கையில் இருந்த குதிரைச் சவுக்கால் அவனை ஓங்கி அடித்தான் இளவரசன். சுரீரென்று சவுக்கடி விழவே அலறி அடித்துக்கொண்டு எழுந்தான் அவன்.

கோபத்துடன் இளவரசன் தன் எதிரே நிற்பதைக் கண்டு திகைத்தான்.

டேய்! துரோகி! என் கண் முன் நில்லாதே. ஒரே ஓட்டமாக ஓடு. நான் உன்னைத் துரத்திக் கொண்டு வருவேன். என் அருகில் நீ இருந்தால் போதும் இந்த சவுக்கு உன் முதுகில் பேசும்... ஓடு!" என்று கோபத்துடன் சொன்ன இளவரசன் அவன் முதுகில் மீண்டும் சவுக்கால் அடித்தான்.

வலி பொறுக்க முடியாத அவன் ஓடத் தொடங்கினான். இளவரசன் விடவில்லை. அவனைத் துரத்தித் துரத்தி சவுக்கால் அடித்தான். முனகியபடியே ஓடிக் கொண்டிருந்தான் அவன். சவுக்கடியினால் அவன் முதுகில் ரத்தம் கசியத் தொடங்கியது.

களைப்பு அடைந்த அவன் ஒரு மாமரத்தின் அடியில் நின்றான். அந்த மரத்தின் கீழே அழுகிப்போன மாம்பழங்கள் கிடந்தன. அவனை ஓடி வந்து பிடித்த இளவரசன், என்னிடம் மாட்டிக் கொண்டாயா? இந்த அழுகிய பழங்களை நீ சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் சவுக்கடிதான்!" என்று அவனைச் சவுக்கால் அடித்தான்.

வேதனை தாங்க முடியாத அவன், கொடியவனே! நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன்? ஏன் என்னை இப்படிக் கொடுமைப்படுத்துகிறாய்? இதற்குப் பதில் என்னை ஒரேடியாகக் கொன்றுவிடு. உன்னைச் சந்தித்த இந்த நாளே என் வாழ்நாளில் கொடியநாள். மீண்டும் உன் முகத்தை நான் பார்க்கவே கூடாது..." என்று புலம்பிக் கொண்டே அழுகிய மாம்பழங்களைச் சாப்பிட்டான் அவன்.

ம்ம்ம்... சீக்கிரம் சாப்பிடு!" என்று கோபத்துடன் சொல்லிக்கொண்டே சவுக்கால் அவன் முதுகில் அடித்தான் இளவரசன்.

உண்டதுபோதும் ஓடு. இல்லையேல் சவுக்கடி வாங்கியே இறந்துவிடுவாய்..." என்று கத்தினான் இளவரசன்.

மீண்டும் அவன் ஓடத் தொடங்கினான். கையில் சவுக்குடன் அவனைத் துரத்தத் தொடங்கினான் இளவரசன்.

சிறிது தூரம் ஓடியிருப்பான் அவன். அழுகிய மாம்பழங்கள் அவன் வயிற்றைக் கலக்கத் தொடங்கியது. நின்ற அவன் குமட்டலுடன் வாந்தி எடுக்கத் தொடங்கினான். உண்ட மாம்பழங்களோடு பாம்பும் வந்து வெளியே விழுந்தது.

தன் வயிற்றில் இருந்து பாம்பு வந்து விழுந்ததைக் கண்ட அவன் திகைத்தான்.

மெல்ல மெல்ல அவனுக்கு உண்மைபுரியத் தொடங்கியது.

நன்றியுடன் இளவரசனை வணங்கிய அவன், உங்களால்தான் நான் இன்று உயிருடன் இருக்கிறேன். உங்களைத் தவறாக நினைத்து நான் கொடுஞ்சொற்களால் திட்டிவிட்டேன். என் அறியாமைக்காக என்னை மன்னியுங்கள். என் வயிற்றுக்குள் புகுந்த பாம்பைப்பற்றி நீங்கள் குறிப்புக்காட்டி இருக்கலாமே!" என்றான்.

நான் நடந்த உண்மையைச் சொல்லி இருந்தால் உனக்குத் தண்ணீர் வேட்கை ஏற்பட்டிருக்கும். நீ தண்ணீர் குடித்தால் யாராலும் உன்னைக் காப்பாற்றி இருக்கவே முடியாது. அந்தப் பெரிய பாம்பைப் பற்றி சொல்லியிருந்தால் அச்சத்தால் நீ இறந்திருப்பாய். நான் உன்னை ஓடும்படி விரட்டி இருக்காவிட்டால், உன்னால் இத்தனை அழுகிய பழங்களை உண்டிருக்க முடியாது.

அப்படிச் செய்ததால்தான் உன்னால் வாந்தி எடுக்க முடிந்தது. பாம்பும் வெளியே வந்து, நீயும் உயிர் பிழைத்தாய். வேறு வழி இல்லாமல் இப்படிக் கொடுமையாக நடந்து கொண்டேன். எப்படியோ என் திட்டம் வெற்றி பெற்று நீ உயிர் பிழைத்தாய்..." என்றான் இளவரசன்.

இளவரசே! தாங்கள் செய்த இந்தச் செயலுக்கு என்றும் நன்றி உடையவனாக இருப்பேன். இறைவன் உங்களுக்கு உயர்ந்த பரிசை அளிப்பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் அவன்.

இந்த குட்டிமான் வீட்டிற்குச் செல்ல வேண்டும்... கொஞ்சம் வழி காட்டுங்க.



படத்தைப் பூர்த்தி செய்து வர்ணம் தீட்டுங்கள்.

அபிமன்யு

25

துச்சாதனனின் மகன் அருகில் வந்தான்.

இருவரும் சண்டை போட்டபடி கீழே விழுந்தனர்.

ஆனால் துச்சாதனனின் மகன்தான் முதலில் எழுந்தான்.

26

அம்புகள் பல திசைகளில் இருந்தும் வந்து அவன் மீது தாக்கின.

விரைவில், கையில் இருந்த சக்கரமும் பொடிப் பொடியானது.

கீழே கிடந்த கதையை அபிமன்யு எடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில ரீவி இல்லாதது நல்லதாய்ப் போயிற்று. இல்லாட்டில் பிள்ளையளின்ர படிப்புக் குழப்பிப் போயிருக்கும்... அப்படியிருந்தும் உப்பிடி அப்பிடி ரீ 20 நடக்கிற நேரம் - பக்கத்தில ஆரின்ரை வீட்டிலயாவது போய் மச் பார்ப்பன் 'ரீ 20' பார்க்க ரீயும் தந்து சிலவேளை மிக்ஷர் அப்பிடி இப்பிடியும் தருவார்கள். மச் சைப் பார்த்து இரசித்துவிட்டு வயிறு நிறையச் சாப்பிட்டும் வருவதுண்டு. நல்லவேளை...! ரீவி ஒன்ற வீட்டுக்கு வாங்காதது நல்லதாய்ப் போயிற்று...

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் எண்டு சொல்லுவீனம் என்ரை பாடு, ஒரு கல்லிலை மூன்று நான்கு மாங்காய்கள்.

எங்கடை வீட்டில் ரீவி இல்லாததாலை

ஒன்று - கரண்ட் காசு மிச்சம்

இரண்டு - பேரப் பிள்ளையளின்ரை படிப்பு டிஸ்ரேப் ஆகாது.

மூன்று - இப்பிடி ரீவி பார்க்கப் போகிற சாட்டில பின்னேர ரீ பிரச்சினை தீருதல்.

நான்காவதும் முக்கியமானதும் அந்த வீட்டுப் பிள்ளையளின்ரை படிப்புக் குழம்பிப் போதல்.

இது ஒரு போட்டி உலகுபாருங்கோ. எங்கடை பிள்ளையல் எப்படிப் படிச்சாலும் சிலவேளை முன்னுக்கு வர ஏலாமல் போய்விடும் ஏனெண்டால் மற்றப் பிள்ளையள் விழுந்து விழுந்து படிச்சால் அதுகள் போட்டியில முன்னுக்கு வந்திடும் கண்டியளோ.

அப்ப எங்கடை வீட்டில ரீவி இல்லாமல் மற்றவையவள் வீட்டில ரெண்டு மூன்று ரீவி இருக்கிறது நல்லது பாருங்கோ.... இதை வெளியில சொல்லிக்கில்லிப் போடாதேயுங்கோ... பிறகு அவையும் கரண்ட் காசு மிச்சம் பிடிக்க வெளிக்கிட்டு

அதால என்ரை பின்னேர, ரீக்கு ஆப்பு வைச்சு, பிள்ளையளும் ஒழுங்காகப் படிக்க வெளிக்கிட்டு ஒரே போட்டியாப் போய்விடும்.

சின்னத்திரை பார்க்கவேணும் சின்னத்திரை பார்க்கவேணும்... அப்பதான் சமூகம் முன்னேறும் அதாவது இதுகளில் நேரத்தைச் செலவழிக்காத சமூகம் முன்னேறும்.

இந்தப் போட்டிப் படிப்பு எண்ட உடனைதான் எங்கடை



பிள்ளையள் எவ்வளவு போட்டி பொறாமையோடை வளருதுகள் எண்டது தெரிய வருகுது... போட்டியை விட, பொறாமையே வளருகிற கல்வி முறையாய்ப் போச்சுது.

எனக்குத் தெரிஞ்ச ஒரு நண்பர் - நண்பர் எண்டால் பேந்து என்ன? தெரிஞ்ச நண்பர்...? மனம் விட்டுக் கதைக்கிற ஒரு நண்பர். அவருக்கு ஐந்தாம் தரம் படிக்கிற ஒரு மகன் நல்லாய் படிப்பான். அந்த வகுப்பில இன்னொரு பையன் அவனும் படிப்பில படு சுட்டி. என்ரை நண்பன்ர மகனுக்குப் பேர் பாலமுருகன்; மற்றப் பையனுக்கு பேர் குருபரன் எண்டு வையுங்கோவன்...

பாலமுருகனும் குருபரனும் நல்ல திக் பிறண்ட்ஸ்....

அதேபோல் ரெண்டு பேற்றை தகப்பன்மாரும் உயர்வாண்மைத் தொழில் செய்வதனால் (PROFESSIONAL) தொழில் ரீதியான நண்பர்கள்....

இப்படி இருந்து வருங்காலத்தே... ச்சே..... பிரசங்க ஸ்ரைலர் போகுது.... இதோ மம் ஒகே நடையை மாற்று ஓ.கே. தரம் - 5 புலமைப் பரிசில் தேர்வு நெருங்கிக்கொண்டிருந்த வேளை ஒரு நாள் பாலமுருகன் சைக்கிள் ஓடும்போது ஒரு விபத்து ஏற்பட்டுவிட்டது. அதில் அவனது கை - இடது கை முறிந்துவிட்டது. கடுமையான முறிவு - (complex tractre) பாலமுருகனது இடது கை முறிந்த விடயம் அறிந்து அவனது வகுப்பு நண்பன் குருபரன் குழறி அழுதே விட்டானாம். ஏன் இவ்வளவு கவலைப்பட்டான் என்று விசாரித்தபோது முறிந்த கை இடது கை என்பதனாலேயே கவலையாம்....

இது எப்படி இருக்குது.....? ஆனாலும் அந்தத் தேர்வில் பாலமுருகன் மாவட்டத்திலேயே முதலாம் இடத்தில் தேறினான்... இது உண்மையாக நடந்த சம்பவம். குருபரனுக்கு வந்த கவலை என்ன வென்றால் பாலமுருகனின் வலது கை முறிந்திருந்தால் தான் மாவட்டத்தில் முதலாம் இடத்திற்கு வந்திருக்கலாம், என்பதாகும். அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பெற்றோர்தான் அவனைவிட நீ முன்னுக்கு வர வேண்டும்!... என்பது போன்ற வார்த்தைகளைக் கூறி பொறாமைத் தீயை வளர்ந்து விட்டிருக்கிறார்கள்....

பைற் ஏண்ட் பைற்

உண்மையில ரீ 20 வலு திறிலான போட்டிதான் பைற் எண்ட் பைற் அந்த மாதிரிப் போட்டி.

வழக்கம்போல அயல் வீட்டில ரீவியில மச் பார்க்கப் போனன்.

ஒரு கல்லில் நான்கு மாங்காய்

இடையில திரும்பி வந்திட்டன். என்னப்பா? கரண்ட் கட் ஆகிப் போச்சுதோ? அல்லது மச் இன்றைக்குச் சரி இல்லையோ? என்று கேட்டா பைற் - எண்டாப் பைற்.... அதுதான் விட்டுட்டு வந்தன்.

அந்த வீட்டுக்காரனும் மனுஷியும் பைற் எண்டாப் பைற் - அதுகள் பைற் பண்ணேக்கை - நான் எப்படி இந்தியா இங்கிலன்ட் ருவென்ரி ருவென்ரி பைற் பார்க்கிறதெண்டு விட்டுட்டு வந்திட்டன்...

நான் அடிக்கடி மச் பார்க்கப் போறதால கரண்ட் பில் கூடிப்போகுது எண்டு என்னை வரவிடாமல் செய்யுறதுக்காக இப்படி தங்களுக்குள்ளை சண்டை போடுகினமோ தெரியேல்லை...

எப்படியெண்டாலும் ரீவி பார்க்கிறதைக் குறைச்சு படிக்கிற பிள்ளையளை இடைஞ்சல் இல்லாமல் படிக்கவிட்டால் நல்லது கண்டியளோ...

பரமசிவம் கலகம் நன்மையில முடிஞ்சால் சரிதான் பாருங்கோ....

கும்ப முடியாத கதை

அக்பரின் சபைக்கு ஒருவன் அடிக்கடி வந்து கதை சொல்லுவான். அவன் சொல்லும் கதைகள் யாவும் நம்பமுடியாத, நடக்காத, முரண்பாடான கதைகளாக இருக்கும். ஆனால் அவன் கூறும் கதைகளை அக்பர் ஆவலோடு கேட்டு ரசிப்பார். அவனுக்குப் பரிசுகள் கொடுப்பார்.

இம்மாதிரி வீண் விஷயங்களில் அக்பர் ஈடுபட்டு நேரத்தைக் கழிப்பது அரசுக்கு பெரிய இழப்பாக இருப்பதால் பீர்பால் இதை விரும்பவில்லை ஆனால் அக்பர் அவன்மீது அன்பு வைத்திருந்தார். அதை அறிந்த அவனும், மற்றவர்களையும் அமைச்சர்களையும் மதியாமல், கர்வம் கொண்டவனாக இருந்தான்.

அவனுடைய போக்கைக் கவனித்த பீர்பால் அவனைச் சம்பந்தப்படுத்தி, ஒரு கதையை அக்பரிடம் சொல்லி அவனுக்குப் புத்தி புகட்ட எண்ணியிருந்தார். அதற்கான வாய்ப்பையும் எதிர்பார்த்திருந்தார்.

கதை சொல்பவன் வழக்கம்போல் ஒரு நாள் சபைக்கு வந்தான். அரசர் முன்னிலையில் அமர்ந்து, அரசே, இன்று விநோதமான ஒரு சம்பவத்தைப் பார்த்தேன் அதாவது ஒரு செம்மறியாட்டின் காதைப் பிடித்து புலி ஒன்று இழுத்துக்கொண்டு வந்தது" என்று சொல்லவும். அக்பர் சிரிப்புத் தாங்க முடியாமல் சிரித்துக்கொண்டிருந்தார்.

அங்கே இருந்த பீர்பால் குறுக்கிட்டு, அரசே ஒருநாள் நான் பார்த்ததற்கு இது ஈடே கிடையாது. நீங்கள் அதைக் கேட்கிறீர்களா?" என்றார்.

அதைச் சொல்லும்படி கேட்டார் அக்பர். உடனே பீர்பால், "இடையன் ஒருவன் எருமைமாட்டை ஓட்டிக்கொண்டு ஆற்றங்கரைக்குச்சென்றான். அங்கே ஒரு முதலை வந்து இடையனைக் கவ்விப் பிடித்து இழுத்தது. பயந்து நடுங்கிய இடையன் எருமை மாட்டின் வாலைப் பலமாகப் பிடித்துக்கொண்டு ஆற்றிலிருந்து வெளியேறினான் ஆனால் அவனை முதலை ஒருபக்கமும், இழுத்ததால் அவன் உடல் இரண்டாய்ப் பிய்ந்து அடிப்பாகம் முதலையுடன் போய்விட்டது. இதைப் பார்த்த, அந்த வழியாக வந்த மருந்துவர் எங்கிருந்தோ செம்மறியாட்டின் அரைப் பூதியைக்கொண்டு வந்து இடையன் உடலை அதில் பொருத்திவிட்டார். அதற்குப் பிறகு என்ன, அவன் இன்னும் உயிரோடு இருந்து கதை சொல்லிக்கொண்டிருக்கிறான்" என்று முடித்தார்.

இதைக்கேட்ட அக்பரும் கதையின் காரணத்தைப் புரிந்துகொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்.

ஆனால், இந்தக் கதையைக்கேட்ட பின்னர் கதை சொல்பவன் அரண்மனைப் பக்கமே தலை காட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிக்கு பயனுள்ள ஆலோசனைகள்

தம்பதியரிடையே சின்னச்சின்ன ஊடல்கள் ஏற்படுவது வழக்கம். அதனையே ஊதிப்பெரிதாக்கி விரிசல் ஏற்படுத்தாமல் அன்பால் அதை சரியாக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகவும், கணவரின் மனம் கவரவும் சில வழிமுறைகளை தெரிவிக்கின்றனர் குடும்ப நல ஆலோசகர்கள்.

அன்பால் அரவணைப்பு

குடும்பத்தில் முதல் பிரச்சினையே பெற்றோர்களை கவனிப்பதில்தான் ஏற்படுகிறது. நம்முடைய பெற்றோர்களை எப்படி கவனிக்கிறோமோ அதேபோல கணவரின் பெற்றோர் களையும், கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும். அன்பால் அரவணைத்து அவர்களுக்கு மரியாதை அளித்தால் கணவரின் அன்பையும் மதிப்பையும் பெறமுடியும்.

கணவருக்காக சமையுங்கள்

கணவரின் மனம் கவர முதலில் அவரது வயிற்றுக்கு சரியான விருந்தளிக்க வேண்டும் என்று முன்னோர் தெரிவிப்பர். எனவே சுவையாக சமைத்து சூடாக பரிமாறுங்கள். வார இறுதிநாட்களில் ஸ்பெசல் சமையலாக இருக்கட்டும். பிறகு நீங்களும் அவருக்கு ஸ்பெசல்தான் .

மனதிற்குள் மத்தாப்பு

கணவரின் துணிகளை துவைத்துப் போடுவது ஒரு கலை. திருமணத்திற்கு முன் யார் வேண்டுமானாலும் துணிகளை துவைத்திருக்கலாம். ஆனால் திருமணத்திற்குப் பின்னர் தன்னுடைய துணிகளை மனைவி துவைத்துப் போடுவது கண வரின் மனதிற்குள் மத்தாப்பு பூக்கும். (மனைவிக்கு முடியாத வேளைகளில் கணவன் மனைவியின் உடைகளைத் துவைப் பதும் நல்ல விடயமே)

இனிமையான இரவு விருந்து

இரவு நேரத்தில் கணவரின் வருகைக்காக காத்திருந்து உண்பது உங்கள் மீதான அபிப்பிராயத்தை அதிகரிக்கும். தனக்காக தன் மனைவி பசியுடன் காத்திருப்பாள் என்ற எண்ணமே கணவரின் மனதில் காதல் உணர்வுகளை அதிகரிக்கும். அப்புறம் சண்டையாவது ஒன்றாவது.

அழகாய் அசத்தலாம்

கணவருக்கு பிடித்தமான உடை அணிவது அவரது கண்ணை மட்டுமல்ல காதலையும் அதிகரிக்கச் செய்யும். அதுதான் திருமணமாகி விட்டதே, இனி என்ன என்று உடலை கண்டு கொள்ளாமல் விடுவது குடும்ப வாழ்க்கையில் விரிசலை ஏற்படுத்தும். எனவே உடலை கச்சித மாய் வைத்திருங்கள். அதற்கேற்ப உடையணிந்தால் கணவர் உங்கள் கைகளில் என்பதை நீங்களே உணர்வீர்கள்.

கொஞ்சமாய் பேசுங்கள் நிறைய கேளுங்கள்

எப்பவுமே நீங்கள் பேசிக்கொண்டிருப்பதை விட கணவரை பேசவிட்டு நீங்கள் கேளுங்கள். இது உங்கள் மீதான பாசத்தை அதிகரிக்கும். நம் பேச்சை கேட்க ஆள் வந்துவிட்டாள் என்று அவரை அதீத உற்சாகத்தில் ஆழ்த்தும்.

கை கோரக்கும் காதல்

இறுதியான, முக்கியமானது படுக்கையறையில் வெற்றிகளை விட தோல்விகள் தான் அதிகம் விரும்பத் தக்கதாக உள்ளது. எனவே விட்டுக்கொடுங்கள். அவர் தடுமாறி னாலும் நம்பிக்கையூட்டுங்கள். நீங்கள் தோற்பது அவரது மனதில் இடம் பெறுவதற்கான வெற்றிக்கு வழி வகுக்கும்.

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுப்பதால் ஒருவருக்கு மற்றவர் தாழ்ந்தவர் என்று அர்த்தப்படாது.

அழகான புருவங்கள்

புருவங்கள் முகத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்று. புருவங்கள் அழகாக இருந்தால் உங்கள் கண்களில் அழகு கூடும், முகமே புதுப் பொலிவு பெறும். ஆனால் புருவங்களை சரியாக வடிவமைப்பதே பலருக்கு பெரும் பிரச்சனையாக உள்ளது!

புருவங்களை உங்கள் முகத்துக்கு ஏற்ற விதத்தில் வடிவமைக்க சில குறிப்புகள்:

தேவையான பொருள்கள்:

டுவீஜர் (புருவத்தில் உள்ள தேவை இல்லாத முடிகளை அகற்ற)

புருவத்திற்கான பிரஷ் (பல் தேய்க்கும் பிரஷ் கூட உபயோகிக்கலாம்)

ஆஸ்ட்ரின்ஜெண்ட் (சருமத்தை மிருதுவாக்கி, வலியை குறைக்க)

கண்ணாடி (அவசியம் தேவை)

சிறிய கத்தரிக்கோல் (புருவத்தின் முடியை சரி செய்ய)

ஐப்ரோ பென்சில்.

முதலில் புருவத்தை மேல் நோக்கி பிரஷ் செய்து விடவும். புருவத்தின் வளைவை விட நீளமாக உள்ள முடிகளை கத்தரியால் வெட்டி விடவும்.

புருவங்கள் கண்களின் ஒரு முனையில் ஆரம்பித்து மறுமுனையில் முடிய வேண்டும் என்பதை மறக்காதீர்கள்.

நீங்கள் எந்த வடிவத்தில் உங்கள் புருவத்தை வடிவமைக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்து கொள்ளுங்கள்.

ஆஸ்ட்ரிங்ஜென்ட்டை புருவத்தின் மேல் தடவவும்.

புருவத்தின் மேல் பக்கத்திலிருந்து முடியை எடுப்பதை தவிர்க்க வேண்டும். புருவத்தின் கீழ் உள்ள முடிகளை ஒவ்வொன்றாக டுவீஜரால் எடுக்கவும்.

ஒரு பக்கம் புருவத்தை சரி செய்த பிறகு மறுபக்கமும் அதே வடிவத்தில் அமைய வேண்டும் என்பதை கவனத்தில் வைக்கவும்.

அடிக்கடி கண்ணாடியில் சரி பார்க்கவும்.

ஐபுரோ பென்சிலால் புருவத்தில் உள்ள காலியான இடங்களை நிரப்பவும்.

கவனம்: மிக மெல்லியதாக புருவத்தை அமைப்பதை தவிர்க்கவும்

மீரட் அல்வா

தேவையான பொருட்கள் :

நெய் - 1 கப்
பிரெட் (பாண்)- 1 பக்கெட்
ஏலக்காய் - 6
பாதாம் - 2 மேசைக்கரண்டி
முந்திரி - 2 மேசைக்கரண்டி
பால் - 1 லீட்டர்
சர்க்கரை - தேவையான அளவு.

செய்முறை :

பிரெட்டின் நான்கு ஓரங்களை வெட்டி எடுத்துவிட்டு மீதி இருக்கும் பகுதியை சிறிய சிறிய துண்டுகளாக வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்..

முக்கால் கப் நெய்யை எடுத்து வாணலியில் சூடுசெய்யவும். அதில் நறுக்கி வைத்திருக்கும் பிரெட்டை பொன்னிறமாக வரும் வரை வறுக்கவும்.

ஏலக்காய் எடுத்து ஒன்று இரண்டாக உடைத்து எடுத்துக்கொள்ளுங்கள்.



பாலை சூடுசெய்து அதனுடன் சர்க்கரை நன்கு கலக்குங்கள். பால் நன்கு கொதித்து பாகு நிலை வரும் வரை சூடு செய்யுங்கள்.

அதனுடன் சர்க்கரையைச் சேர்த்து கலக்குங்கள். மிதமான சூட்டில் இதனை செய்யவேண்டும்.

இந்த பால் பாகுடன் கொஞ்சம் பாதாம் முந்திரி சேர்த்து வறுத்து வைத்து பிரெட்டை கலந்து கிளறுங்கள்.

மீதம் இருக்கும் நெய்யை இதனுடன் சேர்த்து கிளறுங்கள். மிதமான சூட்டில் இந்த கலவையை நன்கு அல்வா பதம் வரும் வரை கிளறுங்கள்.

அல்வா பதம் வந்தவுடன் அதனை இறக்கி வைத்து, அதன் மேல் பாதாம், முந்திரி கொண்டு அலங்காரம் செய்யவும். இதனை உடனேவும் பரிமாறலாம் அல்லது பிரிஜில் வைத்தும் பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். தேவிகா-கொட்டாஞ்சேனை

கேள்வி :- பெண் வயது 18 எனது முகத்தில் ஆண்கள் போன்று உரோமம் வளர்தல் பெரும் தொல்லையாக உள்ளது. இதற்குப் பரிகாரம் உண்டா? மாதவிடாய் ஏற்படுவதும் மிகப் பிந்திப் பிந்தியே உண்டாகிறது.

பதில் :- தற்போது பல பெண்களில் இந்தப் பிரச்சினை உள்ளது. ஆண் - பெண் ஹோர்மோன்களில் ஏற்படும் சமமின்மையே பெரும்பாலும் இதற்கு காரணமாகும். POLYCYSTIC OVARIAN DISEASE எனும் PCOD வியாதி என்ற ஒன்றைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். பெண்களிலும் கூட ஆண் ஹோர்மோன் சிறிதளவு உடலில் இருக்கவே செய்கிறது. எனினும் சில பெண்களில் இது அளவுக்கு அதிகமாக உயர்வதால் ஆண் இயல்புகள் அதிகமாக வெளிக்காட்டப்படுகின்றன. மீசை, தாடி முதலிய பெண்களுக்கு சாதாரணமாக உரோமம் வளராத உடல் பகுதிகளில் இவை வளரலாம். அவ்வாறே மாதவிடாய் ஏற்படுவது பெண் ஹோர்மோன்களின் செயற்பாட்டினால் தான் என்பது உங்களுக்குத் தெரியும். இதற்கு எதிரான நிலை ஆண் ஹோர்மோன் அதிகரிப்பால் ஏற்படும் என்பதும் எதிர்பார்க்கத்தக்கதே. இதனால் மாதவிடாய் எப்போது ஏற்படுமோ என்ற ஒழுங்கீனத்தவிப்பு மிகவும் மோசமான ஒரு நிலையாகும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தயாராகும் வயதுடைய பெண்பிள்ளைகளுக்கு இது மிக முக்கிய பிரச்சினை. வெளியே சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது தவிக்கும் அறியா வயதில் அவர்களது கல்வி நடவடிக்கைகளை இது பெரிதும் பாதிக்கிறது. ஆனால் இதற்கு மருத்துவ விஞ்ஞானத்தில் இப்போது சிறந்த தீர்வுகள் உள்ளன. மாதவிடாயை ஒழுங்காக்க மாத்திரைகள் பாவிக்கப்பட்டு இவை ஆபத்தற்றவை என மேற்குநாடுகளில் சான்றிதழ் வழங்கப்பட்ட மருந்துகளே தான்.

ஏனெனில் க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவிகளின் கல்வி நடவடிக்கை சற்றேனும் பாதிக்காது காக்கவேண்டியது நமது கடமையாகும். பெண் கல்வி ஒன்றின் மூலமே சமூகத்தில் முன்னேற்றம் உண்டாகும். அவ்வாறு அவர்கள் கற்று பல்கலைக்கழக நுழைவாயிலில் உள்ள பரீட்சை தருணத்தில் இந்த PCOD போன்ற மாதவிடாய் சம்பந்தப்பட்ட வியாதிகள் அவர்களது கல்விப் பெறுபேறுகளை பாதிக்கவிடவே கூடாது.

அடுத்து நீங்கள் முதலில் கூறிய உரோமம் வளர்தல் பிரச்சினைக்குக் கூட முன்பு மாத்திரைகள் பாவிக்கப்பட்டு வந்தன. இப்போது இதன் பக்கவிளைவுகளை மேலும் குறைக்கும் விதமாக பூச்சு மருந்துகள் கண்டுபிக்கப்பட்டுள்ளன. Efltornithine 13.9 வீதம் என்ற பூச்சு மருந்து இன்று சட்டப்படி மேற்கு நாடுகளில் பெண்களில் தேவையற்ற ரோமவளர்ச்சியை தடுக்க பயன்படுத்தமுடியும் என அனுமதிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இது இன்னும் பாவனைக்கு வரவில்லை. இந்தியாவில் கூட ஒரே ஒரு கம்பனியின் மூலம் இம்மருந்து இந்த வருடத்தில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. ரோமவளர்ச்சியை தடுக்க மிகச் சிறந்த தீர்வாக இது அமையும். பலர் விலையுயர்ந்த waxing முதலிய ஊர் பெயர் தெரியாத முறைகளில் இதை அகற்றுகிறோம் என மக்களை ஏமாற்றுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

PCOD நோயில் உடல் பருமன் அதிகரித்தல், தலைமுடி உதிர்தல் பிற்காலத்தில் நீரிழிவு ஏற்படல் ஆண்கள் போல குறட்டை விடல், திருமணம் முடிந்த பின் குழந்தைப்பேறு இன்மை,முதலிய பல பிரச்சினைகள் ஏற்படலாம். பிள்ளைப் பேறின்மைபிற்காலத்தில் ஏற்படலாம் என்பதால் பதின்மவயதுகளிலேயே இது தொடர்பாக அக்கறை செலுத்தி சிகிச்சைபெறத் தொடங்கி விடவேண்டும். குறிப்பாக உடல் பருமன் அதிகரிக்காது பார்த்துக் கொள்வது அவசியம். உங்களுக்கு இருப்பது PCOD நோய் தானா என்பதை உறுதிப்படுத்த இரத்தப் பரிசோதனை, ஸ்கான் பரிசோதனை என்பவை மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். பெண்நோயில் நிபுணர் ஒருவரே இதற்கான சரியான நோய் நிர்ணயத்தைச் செய்வார்.

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

ஆண்மைகுறைபாடு நீக்கும் தொட்டாற்சுருங்கி!

காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் காணப்படும் தொட்டாற்சுருங்கி செடி காந்த சக்தி உடையது என்று சித்தர்கள் தெரிவித்துள்ளனர். 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிரேக்க மருத்துவத்தில் தொட்டாற்சுருங்கி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது ஆயுர்வேத மருத்துவத்திலும் யுனானி மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது. தோல் வியாதிகள், குழந்தைப்பேறு பிரச்சினை, ஆண்மைக் குறைபாடு போன்ற நோய்களுக்கு இன்றைக்கு மிகச்சிறந்த மருத்துவ மூலிகையாக உள்ளது தொட்டாற்சுருங்கி.

தெய்வீக மூலிகை

நமஸ்காரி என்று அழைக்கப்படும் இந்த மூலிகை காந்தசக்தி உடையது. தெய்வ சக்தி உடைய மூலிகை என்பதால் துளசிபோல வீட்டில் வைக்கலாம். மனதில் உணர்ச்சி ஊட்டி சிற்றின்பத்தை அதிகரிக்கும் எனவும் அதனால் இதற்கு காமவர்த்தினி என்ற பெயரும் உண்டு என்றும் கூறுவர்.

ஆண்மைக் குறைபாடு உள்ளவர்கள் இதன் இலையை அரைத்து பாலில் 15 கிராம் கலந்து சாப்பிடவேண்டும். தொடர்ந்து 15 நாட்களுக்கு சாப்பிட்டு வர ஆண்மை பெருகும்.

சூடு பிடித்து சிறுநீர் எரிச்சல் உள்ளவர்கள் இதன் இலையை அரைத்து 5-6 நாள் 10 கிராம் காலை தயிரில் சாப்பிட வேண்டும் இதனால் சூடு குறைந்து சிறுநீர் எரிச்சல் குணமாகும். இதன் இலை ஒரு பிடி அரைத்து எலுமிச்சையளவு மோரில் கலந்து மூன்று நாள் சாப்பிட வயிற்றுக் கடுப்பு குணமாகும். உடல் குளிர்ச்சியடையும், வயிற்றுப்புண்ணும் ஆறும். மூலநோய் நீங்கும்.

இதன் இலையையும் வேரையும் உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு பசுவின் பாலில் போட்டுக் கொடுத்துக் கொண்டு வர மூலம், பவுத்திரம் போம். இதன் இலைச் சாற்றைப் பவுத்திர மூல ரணங்களுக்கு ஆசனத்தில் தடவி வர ஆறும். இதன் இலையை மெழுகு போல அரைத்து விரை வாதம், கை,கால் மூட்டுக்களின் வீக்கம் இவைகளுக்கு வைத்துக் கட்ட குணமாகும். இதன் இலைச் சாற்றைப் பஞ்சில் தோய்த்து ஆறாத ரணங்களுக்கு வைக்க ஆறிவரும். இதன் இலையை ஒரு பெரிய மண்கலயத்தில் போட்டு தண்ணீர் விட்டு வேக வைத்து இடுப்பிற்குத் தாங்கும் படியான சூட்டில் தாரையாக விட இடுப்பு வலி குணமாகும்.

உடல் நலம்

இளம் வயதில் வழுக்கையா? புரஸ்டேட் புற்றுநோய் வருமாம்!

மரபியல் காரணங்களினால் மட்டுமல்லாது மாறிவரும் உணவுப்பழக்கம், பணிச்சூழலினால் ஏற்படும் மன அழுத்தம் போன்றவைகளினால் இருபது வயதிலேயே ஆண்களுக்கு முடி கொட்டி வழுக்கை விழுகிறது. இளவயதில் வழுக்கை ஏற்படும் ஆண்களுக்கு புரஸ்டேட் புற்றுநோய் ஏற்படலாம் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் கண்டறிந்துள்ளனர் ஆய்வாளர்கள்.

பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற ஆய்வு ஒன்றில் புரஸ்டேட் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வரும் 388 ஆண்களிடமும், புற்றுநோய் இல்லாத 281 ஆண்களிடமும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் குறைந்த வயதில் வழுக்கை விழுந்த ஆண்களுக்குத்தான் புற்றுநோய் பாதிப்பு இருந்தது தெரியவந்தது.

டெஸ்ட்டோட்ரோன் சுரப்பி குறைவதாலேயே புரஸ்டேட் புற்றுநோய் ஏற்படுகிறது. இதனால் ஆண்கள் குறைந்த வயதிலேயே முதுமைத்தோற்றத்திற்குத் தள்ளப்படுகின்றனர் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அதற்காக வழுக்கை விழுந்த எல்லோருக்குமே இந்த புற்றுநோய் தாக்குவதில்லை. அவர்களின் வாழ்க்கை முறை, குடும்ப சூழல், மரபியல்ரீதியான காரணங்கள் போன்றவையும் புற்றுநோயை உண்டாக்கும் என்கின்றனர் நிபுணர்கள்.

வழுக்கை மற்றும் புற்று நோய் ஆகிய இரண்டிலும் ஆண்களைப் பொறுத்தமட்டில் ஹோர்மோன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. 30 அல்லது 40 வயதாகும் போது வழுக்கை விழுவது எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் இந்த ஆய்வின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த புற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்கும் ஒரு வழிமுறையாக வழுக்கையை எதிர்த்துப் போராடக் கூடிய மருந்துகளைப் உட்கொள்வது நலம் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌன மனவெளிகள்

43

நேரம் மாலை ஐந்து மணியைத் தாண்டி விட்டபோதிலும் கனகரத்தினம் வீடு வந்து சேராத நிலையில் பொன்னம்மாவின் மனம் தவிக்க ஆரம்பித்துவிட்டது. அந்த நேரத்தில் தான் படலையைத் திறந்துகொண்டு நல்லையா உள்ளே வந்தான். அவன் கனகரத்தினத்தைப்பற்றி அவனிடம் கேட்பதற்கு நினைத்தபோது அவன், "எணேய்... கனகண்ணை எங்கை போட்டார்?" 'இண்டைக்குப் பந்தடிக்கவும் வரயில்லை?' எனக் கேட்டான். பொன்னம்மாவுக்கு நெஞ்சு ஒருமுறை 'திக்' என்றது. எனினும் அவள் "சிவஞானம் வந்தவனே?" எனக்கேட்டாள்.

"இல்லையெணை... இரண்டு பேரும்தான் எங்கையோ போட்டினம் போலை?" என்றான் அவன்.

"இல்லையடா... பொன்னுக்குட்டியின்ரை பெட்டைக்கு கல்லெறி விழுந்ததைப்பற்றி ஏதோ சாட்சி சொல்ல வேணுமெண்டு விடிய வெள்ளணை வந்து பொலிஸ்காரர் கூட்டிக்கொண்டு போனவங்களடா இவ்வளவு நேரமாய் காணேல்லை" என்றான் பொன்னம்மா மிகுந்த பதட்டத்துடன்.

பொலிஸ் என்றதுமே நல்லையா திகைத்துவிட்டான். பொலிஸ் பிழைவிட்டாலென்ன விடாவிட்டாலென்ன அடிப்பார்கள் என்பதுதான் அவனின் அனுபவம். அவன் பயத்துடன் "இவ்வளவு நேரமாய் சாட்சி சொல்லுறாங்களே..." கோடும் இரண்டு மணிக்கு முடிஞ்சுபோம்" என்றாள்.

"ஐயோ பிள்ளையாரே... நான் என்னடா செய்வன். எங்கையடா போவன்" என அலறத் தொடங்கினாள் பொன்னம்மா. அவளின் சத்தம்கேட்டு அயல் வீட்டுக் கந்தவனக் குஞ்சியும் வந்துவிட்டார். ஒரு சில நிமிடங்களில் பொன்னம்மா வீட்டு முற்றத்தில் அந்த அயலைச் சேர்ந்த பெரும் கூட்டமே கூடிவிட்டது. எல்லோருமே அப்படியிருக்கும், இப்படியிருக்கும் என ஊகங்களை வெளியிட்டனரே அடுத்து என்ன செய்யவேண்டும் என ஆலோசனை சொல்லவில்லை.

கனகரத்தினத்தின் தந்தை இறந்த பின்பு அவரின் நண்பரான கந்தவனமே அந்தக் குடும்பத்தைப் பராமரித்து வந்தார். அவனின் படிப்புக்கான செலவையும் கஷ்டத்தின் மத்தியிலும் அவரே பார்த்து வந்தார். அவரால் கனகரத்தினத்துக்கு பிரச்சினை என்ற போது தாங்க முடியவில்லை.

அவர் "மச்சான் அழுது பிரயோசனமில்லை. வா... விதானையாரட்டைப் போய்ச் சொல்லுவம்" என்றார்.

அவரின் ஆலோசனை நல்லதாகப்படவே சிவஞானத்தின் பெற்றோர் உட்பட அனைவரும் விதானையார் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். அதற்குள்ளாகவே சிவஞானத்தையும் கனகரத்தினத்தையும் பொலிஸ் கூட்டிக்கொண்டு போனதும் இன்னும் திரும்பி வராததும் ஊர்முழுவதும் பரவிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

சின்னன் ஊற்றிக் கொடுத்த கள்ளில் ஒரு பகுதியைக் குடித்துவிட்டு சாய்மனைக் கதிரையில் சாய்ந்து அமர்ந்து கொண்டார். விதானையார் தலையைக் குனிந்தவாறே ஓலை கிழித்துக்கொண்டிருந்த சின்னனின் பொன் மஞ்சள் நிறத் தோள்களும் முதுகும் குறுக்கிக் கட்டுக்கு மேலே தெரிந்து கொண்டிருந்தன. அவருக்கு அவளிடம் ஏதாவது பேச வேண்டும்போல் தோன்றியது.

அவர் ஒரு மெல்லிய செருமலுடன் "சின்னன்" கூட்டங்களிலை என்ரை பிள்ளையின்ரை பேச்சு எப்படி?" எனக் கேட்டார். அவள் மெல்லத் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்துவிட்டு, "அது உங்களைப் போலை கெட்டிக்காரிதானே" என்றாள். அதை அவள் சொன்னபோது மெல்லிய நாணம் பரவி அவளின் முகத்தைச் சிவக்க வைக்கவே மீண்டும் தலையைக் குனிந்து ஓலையைக் கிழிக்க ஆரம்பித்துவிட்டாள். விதானையார் அவளின் முகமாற்றத்தை அவதானித்துவிட்டு ஒரு மெல்லிய புன்னகையுடன் மிகுதிக் கள்ளை எடுத்துக் குடித்தார்.

அவள் தலையை நிமிர்த்தாமலே மெல்லிய குரலில் "அண்டைக்கு கமலிக்குக் கல்லெறிஞ்ச மாதிரி பிள்ளைக்கும் ஏதும் நடந்திருமோ எண்டுதான் பயமாய்க் கிடக்குது" என்றாள்.

சில வினாடிகள் மௌனத்தின் பின் அவர் "அப்படி நடவாது! நடந்தால் செய்தவனுக்கு மற்ற நாள் கை இருக்காது" என்றார். இறுக்கமாக சின்னன் ஒரு பெருமூச்சு விட்டாள். உண்மையாகவே அப்படி எதுவும் நடந்து விடக்கூடாது என அவள் மனசுக்குள் சன்னதியானை வேண்டிக்கொண்டாள்.

அந்த நேரத்தில் நாய் பெரிதாகக் குலைக்கவே எட்டிப்பார்த்த சொர்ணம் சங்கக்கடைப் படலைக்குள் ஒரு பெரிய கூட்டமே நிற்பதைக் கண்டு வெளியே வந்தாள்.

கந்தவனம் "பிள்ளை ஐயா நிக்குதே?" எனக்கேட்டார்.

வெட்டையிலையிருந்து ஆக்கள் வந்திருக்கினம்" என்றாள்.

"இஞ்சை வரச் சொல்லு?" என்று விதானையார் பதிலுக்குக் குரல் கொடுத்தார். சொர்ணமும் அவர்களின் பின்னால் போனாள்.

அவர்களைக்கண்ட விதானையார் ஆச்சரியத்துடன் என்ன இப்பிடிப் படையெடுத்துக்கொண்டு வந்திருக்கிறியள்?" எனக் கேட்டார்.

பொன்னம்மா அழுதழுது சொல்லி முடிக்கும் வரை விதானையார் நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். முதலில் கமலியிடம் முறைப்பாடு எடுக்காமல் சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிய முடியாது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே அவர்களைப் பொய் சொல்லி வேறு ஏதோ காரணத்திற்காகப் பிடித்துக்கொண்டு போயுள்ளனர் என்பதை அவர் உடனடியாகப் புரிந்துகொண்டாலும் அதை வெளியே சொல்லவில்லை.

சுண்டுக் கோப்பையை எடுத்துச் சின்னனிடம் நீட்டியவாறு, அவர் இதுக்கை கொஞ்சம் எடு!"

சின்னன் கொடுத்ததை ஒரே மூச்சில் இழுத்து முடித்து விட்டு, "கந்தவனம்! போய் மணியத்தின்ரை காரை வரச் சொல்லு பொலிஸ் ஸ்ரேசன் மட்டும் போட்டு வருவம்" என்றார். பொன்னம்மா அழுதவாறே ஐயா நானும் வாறன்" என்றாள். விதானையார் அவளைப் பார்த்துவிட்டு, "நீ.. நில்! நான் கந்தவனத்தைக் கூட்டிக்கொண்டு போறன்" என்றார். விதானையார் பொலிஸ் நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்த போது சார்ஜண்ட் சின்னத்தம்பி கடமை முடித்து வீட்டுக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தார்.

விதானையார், கனகரத்தினம், சிவஞானம் ஆகியோர் பற்றிச் சின்னதம்பியிடம் விசாரித்தபோது "அடே அந்த ஆலடி வெட்டைப் பொடியனே.. அவங்களுகு நீதவான் 14 நாள் விளக்க மறியல் போட்டிட்டார்" என்றார் அவர்.

விதானையார் சற்றுக் கடுமையாகவே கேட்டார். "நான் இல்லாமல் என்னண்டு என்ரை ஏரியாவிலை வந்து அறெஸ்ற் பண்ணுவியள்?"

சின்னதம்பி அப்பாவி போலவே பதிலளித்தார். "நான் என்ன விதானையார் செய்யலாம். அவங்கள் நீதவானட்டைப் போய் அறெஸ்ற் வாறன்ற் எடுத்துக்கொண்டு வந்திட்டாங்கள்".

"எப்பிடியெண்டாலும் என்னட்டை வந்திருக்கலாமெல்லே?"

"ஏன் உங்களுக்கு கரைச்சலை எண்டிட்டு" என இழுத்தார் சின்னத்தம்பி

"அவங்கள் என்ன பிழை செய்தவங்கள்?"

"இராத்திரி காசிப்பிள்ளை முதலாளியின்ரை காரை அடிச்சு நொருக்கிப் போட்டாங்கள். அவர் உயிர் தப்பினதே அருந்தப்பு."

விதானையாருக்கு விஷயங்கள் ஓடி வெளிக்க ஆரம்பித்துவிட்டது. தான் எலெக்சன் முடியுமட்டும் காசி கார் ஓடக்கூடாது எண்டு சொன்னதும், ஒடினால் ஆலடி வெட்டைப் பெடியளைக்கொண்டு காரை உடைப்பிக்கப்போவதாகவும் கூறியது, அவரின் நினைவுக்கு வந்துபோனது. தான் அப்படிச் சொல்லும்போது காசியும் வடிவேலனும் மட்டும் இருந்த காரணத்தால் அது வேறு எவருக்கும் தெரிந்திருக்க வழியில்லை என்பதையும் அதை வைத்து காசி ஒரு வலை பின்னிவிட்டார் என்பதையும் அவர் புரிந்துகொண்டார். எப்படியும் கோபப்பட்டுப் பிரயோசனம் இல்லை என்பதையும் முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்துகொண்டார்.

"அப்ப... இப்ப... என்ன செய்யலாம்?" எனச் சின்னத்தம்பியிடம் கேட்டார் விதானையார்.

சின்னத்தம்பி சற்று யோசித்துவிட்டு நாளைக்கு சனி, இனி திங்கள்தான் கோட்டிலை மோசன் போடலாம். செவ்வாய் தான் ஏதாவது செய்யலாம் என்றார் அவர்.

"சரி பாப்பம்..." என்று விட்டு காரை நோக்கிப் போனார் விதானையார்.

கந்தவனம் மெல்லக் கேட்டார். "ஐயா! இனி என்ன செய்யிறது?"

விதானையார் எதுவுமே பதில் பேசாமல் "மணியம்! காரை குடியரசார் வீட்டை விடு" என்றார்.

கொழும்பிலிருந்து ஜெயசிங்கம் என்ற பிரபல சட்டத்தரணி பொன். கந்தையாவின் தேர்தல் வேலைகளுக்காக வந்திருந்தார். விதானையார் குடியரசாரும் விசயங்களை விளக்கமாகச் சொன்னபோது அவர் உடனடியாகவே விதானையாரையும் அழைத்துக்கொண்டு ஜெயசிங்கம் தங்கியிருந்த இடத்துக்குப் போனார்.

ஜெயசிங்கம் முழுமையாகவே விஷயங்களைக்கேட்டுவிட்டுப் பின் சில கேள்விகளையும் கேட்டு முழுமையான தெளிவைப் பெற்றுக்கொண்டார்.

பின்பு அவர் "இனிக் கோடு திங்கட்கிழமை தான். எண்டாலும் நீதவானின் வீட்டிலை சந்திச்சு மோசன் குடுக்கலாம். அதுக்கு அவர் அனுமதி தந்தால்தான் அது சாத்தியம்" என்று விட்டு, "இஞ்சை பக்கத்திலை எங்கையும் ரெலிபோன் இருக்கே?" என்று கேட்டார்.

"இஞ்சை போஸ்ற் ஒப்பிசிலதான் இருக்குது. இப்ப போனால் கதைக்கலாம்" என்றார் குடியரசார்.

"அப்ப வெளிக்கிடுவம் நீதவான் சந்திக்க. நாளைக்கு மோசன் தாறதும் விடுறதும் உங்கடை அதிஷ்டத்தைப் பொறுத்தது" என்று விட்டு எழுந்தார் ஜெயசிங்கம்.

(தொடரும்)

நா.யோகேந்திரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதலாளி யார்?

நாட்டில் மதிப்பு மிகுந்ததும், ஜனநாயக ஆட்சியின் உயிர் நாடியாகவும், அரசாங்கத்தின் பிரதான பண்புக்கூறாகவும் விளங்கும் நீதித் துறை பல்வேறு வகையில் பல்வேறு அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள், சவால்கள், தேவையற்ற அரசியல் தலையீடுகள் என்பவற்றிற்கு உட்பட்டே இயங்கவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை அத்துறை சார்ந்தவர்களிடம் இன்று திணிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டில் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயற்படவேண்டிய நீதித்துறை இலங்கையில் தேவையற்ற தலையீடுகளுக்கு முகங்கொடுக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் உயரியதும் கௌரவமானதுமான இலங்கை அரசியல் அமைப்பையும் இலங்கை அரசியல் யாப்பினையும் சட்டத்தையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் தனிமனித உரிமைகளையும் நிலைநாட்டி அவற்றை அமுல்படுத்தி நிர்வகிக்க வேண்டிய பாரிய பொறுப்பில் இருக்கும் நீதித்துறை சார்ந்தவர்கள் இன்றைய யதார்த்த போக்கில் தம்மைத்தானே பாதுகாக்கவே நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டு அன்றைய நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்குவிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசியலமைப்பு திருத்தமும் ஆட்சியாளர்களிடம் அளவுக்குமீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட வாய்ப்பேற்படுத்திக் கொடுத்துள்ளது. நீதித்துறைசார்ந்த பிரதம நீதியரசர் மேல் நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதியரசர்கள், நீதிபதிகள், சட்டமா அதிபர், நீதிச்சேவை ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோரை நியமிக்கக்கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருப்பதும் விடுபாட்டுரிமையை காலவரையின்றி நீடிக்கும் தன்மை கொண்டதான 18 ஆவது திருத்தமும் நீதித்துறையில் ஜனாதிபதியானவர் அளவுக்கதிகமான தலையிடக்கூடிய சூழலை இலங்கை தேசத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள் சிறந்த ஆதாரமாக காணப்படுகிறது.

ஆனால் நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறைக்கும் இடையில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதில் சர்வதேச சூழ்ச்சியாளர்கள் மும்முரமாக இறங்கியிருப்பதாகவும் கூறி அதிகாரபீடம் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முயல்கிறது.

இந்த முரண்பாடான சூழ்நிலைகளுக்கு மத்தியில் கடந்த காலத்தில் நீதித்துறை மீது அரங்கேறிய பல்வேறு சம்பவங்கள் அரசின் மீதான குற்றச்சாட்டுகளுக்கு மேலும் வலுச்சேர்ந்திருக்கிறது. அந்தவகையில் கடந்த வாரம் இடம்பெற்ற நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரும் முன்னாள் நீதிபதியுமான மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதலும், அதற்கு முன்னர் நடைபெற்ற மன்னார் நீதிமன்றம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், மன்னார் நீதிபதி யூட்சனின் வீடு மீது நடாத்தப்பட்ட கல்வீச்சுத் தாக்குதல், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தியோகபூர்வ வாகனம் மீதான தாக்குதல் என்பன இதற்கு சான்றாதாரமாக உள்ளது. இதில் மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் பற்றிய விசாரணைகள் மற்றும் மன்னார் நீதிபதி யூட்சனுக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அச்சுறுத்தல் சம்பந்தமான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றபோதும் ஏனைய சம்பவங்கள் பற்றிய விசாரணைகளோ சந்தேக நபர்கள் கைதுபற்றிய விபரங்களோ அல்லது அது தொடர்பாக பொலிஸ்தரப்பின் கருத்துக்களோ இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இந்த சூழ்நிலையிலேயே நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சன நாட்டமுள்ள பகுதியில் தலைநகரில் வைத்து காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் அரங்கேறியிருக்கிறது.

இதேவேளை ஏற்கனவே போர்க்காலத்திலும் இதுபோன்ற பாரதூரமான சம்பவம் யாழ்நகரப்பகுதியில் இடம்பெற்றது. அப்போதைய யாழ் மேலதிக நீதிவானும் தற்போதைய பருத்தித்துறை மாவட்ட நீதிபதியுமான திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தியோகபூர்வவாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் பொதுமக்களின் அக்கறையான செயற்பாடு காரணமாக சாரதி மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். இதன் பின் இதனுடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய்கள் இடம்மாற்றப்பட்டும் சட்டத்தால் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டனர். இவ்வாறு நீதித்துறை மீது தொடர்ந்த அச்சுறுத்தல் இன்று நடு வீதியில் நீதித்துறை சார்ந்தவர்கள் தாக்கப்படுவதற்கான நிலையை ஏற்படுத்தியுள்ளது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதல் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண கடந்த ஏழாம் திகதி காலை 8.30 மணியளவில் கொழும்பு கல்கிஸை பிரதான வீதியூடாக தனது காரில் பயணித்திருக்கிறார். பின் கல்கிஸை சென்தோமஸ் வித்தியாலத்திற்கு அருகில் இவரது மனைவியையும் மகனையும் இறக்கிவிட்டு கல்கிஸை ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் காரை நிறுத்திவிட்டு காருக்குள் இருந்தபடியே பத்திரிகை வாசித்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அப்போது இவரை நெருங்கிய நால்வர் கைத்துப்பாக்கியைக் காட்டி காரை விட்டு கீழே இறங்குமாறு அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. காரை விட்டு இறங்கிய இவரிடம் 'நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் நீயா?' என கேட்டபடி சரமாரியாக தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலில் நிலைகுலைந்த மஞ்சுள திலகரட்ணவை அப்படியே விட்டுவிட்டு அந்த இனந்தெரியாதவர்கள் தலைமறைவானதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்திருந்தன. சம்பவம் பற்றி தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த கல்கிஸை பொலிஸார் முகத்திலும் கையிலும் காயமடைந்திருந்த மஞ்சுள திலகரட்ணவை அவரின் வாகனத்திலேயே ஏற்றி வைத்திய சாலையில் சேர்ந்ததாக பொலிஸ் பேச்சாளராக கடமையாற்றிய அஜித் ரோகண தெரிவித்திருந்தார். இதேவேளை இவர் தாக்குதலுக்கு உள்ளாகும் முன்பு தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோனிடம் முறைப்பாடு செய்ததாகவும், ஆனால் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் இத்தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படும் கருத்துக்களை அரசு உடனடியாக நிராகரித்திருக்கிறது. இவர் மீதான தாக்குதலால் தாம் கவலையடைவதாகவும் இது தொடர்பான உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோவனுக்கு உத்தரவிட விட்டிருப்பதாக அரச தரப்பு உடனடியாகவே தெரிவித்திருந்தது.

இதேவேளை இது தொடர்பான சர்ச்சைக்குரிய அறிக்கையொன்றை விடுத்திருக்கும் இளம் சட்டத்தரணிகள் சங்கம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் கும்பல் ஒன்றே இத்தாக்குதலை நடாத்தியதாகவும் அரசின் கடந்த கால நடவடிக்கைகளிலிருந்து இதனை ஊகிக்க முடிவதாகவும் இலங்கையின் நிர்வாகத்துறையில் இருப்பவர்கள் நீதித்துறை மீது அநாகரிகமான முறையில் செல்வாக்கு செலுத்துவதை தாம் ஏற்கனவே அறிவோம் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்திருக்கும் சர்வதேச நீதித்துறை வல்லுநர்களுக்கான அமைப்பின் ஆசியப் பணிப்பாளர் சாம்ஹரிபியின் குற்றச்சாட்டில் நீதித்துறை மீது அதிகார பீடம் தேவையற்ற ரீதியில் செல்வாக்கு செலுத்துவதாகவே குறிப்பிட்டுள்ளார். அவரின் அறிக்கையின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச செப்டெம்பர் மாதம் முற்பகுதியில் பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள் இருவரையும் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் குறித்த சந்திப்பில் ஈடுபடுவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழுவினர் உடனடியாகவே மறுப்பை வெளியிட்டனர். இதனையடுத்து பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோர் மீது அரச கட்டுப்பாட்டில் இருக்கும் சில ஊடகங்கள் மூலம் அவதூறு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது நீதிக்கும் நீதியின் சுயாதீனத்திற்கும் எதிரான தாக்குதல் எனவும் தெரிவித்திருந்தார். நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதலை கண்டித்திருக்கும் அவர் இலங்கையில் நீதிவான்கள் அவர்கள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படவேண்டுமெனவும் அரசை வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அறிக்கையிட்டிருக்கும் மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நீதித்துறையில் அதிகாரபீடம் தலையிட வேண்டாம் எனக் கோரி, தாக்கப்பட்ட நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து கடந்த 18 ம் திகதி காட்டமான அறிக்கையொன்றை விடுத்திருந்தார் எனவும் அதன் பின்னணியிலேயே அவர் தாக்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இது தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி சதிமுயற்சிகளை மேற்கொள்ளும் அரசுக்கு இப்போது தடையாக இருப்பது சுயாதீன நீதித்துறையே. எனவே அதன்மீது அரசு பனிப்போரை தொடுத்துள்ளது. நீதிச்சேவை ஆணைக்குழலின் செயலாளர் தாக்கப்படும்போது சத்தமிடாமல் இருந்திருந்தால் அவர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம். எனவே அரசு இது தொடர்பான விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என அரசை வலியுறுத்தியுள்ளர்.

இத்தகைய காரசாரமான வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் அமைச்சர் விமல் வீரவன்ச வித்தியாசமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் போன்றவற்றிற்கு இடையில் பிரச்சினையை உருவாக்கி நாட்டின் ஸ்திரத் தன்மையை சீர்குலைக்க வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ள புலிகள் முயல்வதாகவும் இதற்குரிய சூழலை ஏற்படுத்த இங்குள்ள எதிர்க் கட்சிகள் துணைபுரிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் அத்துடன் குறித்த தாக்குதலுக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு பொலிசாரும் கல்கிஸை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த மூன்று பொலிஸ் குழுக்களும் மேற்கொண்டுவருகின்றன. இதுவரை ஆறுபேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பயணித்த ஜகுவார் ரக காரிலிருந்து இருவரின் கைரேகை அடையாளங்களை சேகரித்திருப்பதாக தற்போதைய புதிய பொலிஸ் பேச்சாளர் பிரஷாந்த ஜெயக்கொடி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாட்சிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவரின் முகத்தோற்றம் இனங்காணப்பட்டதாகவும் அந்த தோற்றப்படத்தை ஊடகங்கள் வாயிலாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவு தெரிவித்தபோது சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சம்பவம் பற்றிய தகவல்கள் தெரிந்தவர்கள் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் தொலைபேசி இலக்கமான 0112662322 என்ற இலக்கத்தோடும் அதன் தலைவரின் இலக்கமான 07117774400 என்ற இலக்கதோடும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளது. அத்துடன் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் கைத்தொலைபேசிக்கு வந்தஅழைப்புக்கள் தொடர்பாகவும் சம்பவ நேரம் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் தொடர்பாகவும் முழு அளவிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் கடைசியாக அவரிற்கு அழைப்பை ஏற்படுத்திய நீதிவான் ஒருவரிடமும் மஞ்சுள திலகரட்ணவின் மனைவியிடமும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டிருப்பதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவு மேலும் தெரிவிக்கிறது.

இதேவேளை கொழும்பில் சன நடமாட்டமுள்ள பகுதியில் கைத்துப்பாக்கியுடன் வந்து துணிகரத் தாக்குதலை நடாத்திவிட்டு தப்பிச்செல்லக்கூடிய துணிவு யாருக்கு வந்திருக்கிறது என்பது பிரதான கேள்வியாகும். 'திவிநெகும' தொடர்பாக பிரதம நீதியரசர் மீது குற்றப் பிரேரணையை அரசு தாக்கல் செய்யாது என அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்திருக்கும் நிலையில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தாக்கப்பட்டமை பல்வேறு சந்தேகங்களை பொதுமக்கள் மத்தியில் எழும்பியுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச கூறுவதைபோல புலிகள் இத்தாக்குதலை நடாத்தியிருந்தால் கொழும்பில் கல்கிஸை பகுதிக்கு கைத்துப்பாக்கியுடன் வந்து தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் செல்லக்கூடிய அளவில் அவர்களின் பலம் இருக்கிறதா என்ற கேள்வியும் பொதுமக்கள் மத்தியில் எழுகிறது. இதேவேளை கடந்த மாதம் நீதிச்சேவைக் குழுவின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை தொடர்பிலும் அரச மட்டம் கொதிப்படைந்திருந்தது. இவர் தாக்கப்பட்ட பின் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல இது தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்தொன்றையும் வெளியிட்டிருந்தார் இவரிற்கு முன் நீதிச்சேவை ஆணைக்குழுவில் செயலாளராக கடமையாற்றிய அதிகாரி நீதிச்சேவை ஆணைக்குழுவினை சார்ந்த எவரும் ஊடகங்களிடம் கருத்து எதையும் தெரிவிக்கக்கூடாது என சுற்று நிருபம் மூலம் அறிவித்திருந்தார். இந்நிலையில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிக்கை வெளியிட்டது சரியா தவறா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஏற்கனவே மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டதன் பின்னர் மன்னார் நீதிபதி யூட்சனுக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி அச்சுறுத்தல் தொடர்பான சந்தேக நபராக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் நீதிமன்றம் தாக்கப்பட்ட தினம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரை அணுகி நீதிபதி யூட்சனின் இடம்மாற்றக் கோரிக்கையை வலியுறுத்தியதாகவும். ஆனால் நீதிச் சேவை ஆணைக்குழு விடயம் என்பதால் செயலாளர் மஞ்சுள திலகரட்ண அதனை மறுதலித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவை இச்சம்பவம் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் அரசின் மீது நீளக் காரணமாகின. எனவே ஒரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றால் விழுந்தடித்து மறுப்பு தெரிவித்தும், சர்வதேசத்தின் மீதும் புலிகள் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அரசு, நீதிச்சேவை ஆணைக்குழு செயலாளரை தாக்கிய குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும். இது நிறைவேற்றப்படாவிட்டால் அரசு மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது தவிர்க்கமுடியாதது.

வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.புத்திரசிகாமணி

மீண்டும் முருங்கை மரத்திலா?

மலையகத் தலைவர்களும் துரோகிகள் பட்டியலில் இடம்பிடிக்க போட்டியிட்டுக்கொண்டு வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். இவர்களுடைய அர்த்தமற்ற பேச்சுக்களினால் இந்த தலைவர்கள் மீது மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் சிறிது நம்பிக்கையும் இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

நமது மலையகத் தலைவர்களின் கருத்தொற்றுமை புரிந்துணர்வு பொது நோக்கம் தொடர்பாக புதிதாக சொல்ல வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை.

ஒருவரை ஒருவர் மட்டம் தட்டுவதும் ஒருவருக்கு ஒருவர் குழிபறிப்பதும் ஒருவரை மற்றவர் காட்டிக்கொடுப்பதும், தான் தான் பெரியவன் என்ற நிலையில் ஏனைய தலைவர்கள் மீது விரோத உணர்வுடன் வியாக்கியானம் செய்வதிலும் விமர்சிப்பதிலும் கை தேர்ந்தவர்கள் மலையகத் தலைவர்கள். இதில் இவர்களை மிஞ்ச எவரும் இல்லை.

இதனாலேயே மலையக இளைஞர் சமுதாயமும் புத்திஜீவிகளும் இந்த மலையகத் தலைவர்களைப் பெரிதாக மதிப்பதில்லை. அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

காலம் காலமாக கல்வி கற்றலில் பின் தள்ளப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை ஏய்த்தும் பிழைப்பவர்கள். தமக்கும், தமது குடும்பத்திற்கும் காலம் காலமாக சந்தா செலுத்தி வாழவைக்கும் தொழிலாளர்களை இவர்கள் மக்களாகவே மதிப்பதில்லை. வா, போ, நீ என்று ஏளன வசனத்தில்தான் பேசுகின்றனர். 'வாங்க போங்க நீங்கள்' என்று பண்பான முறையில் அங்கத்தினர்களிடம் பேசுவது மிகவும் அபூர்வம்.

நாய்வாலை நிமிர்த்த முடியாது என்பது போல் இவர்களைத் திருத்தவே முடியாது. தலைவர் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்பதற்கமைய தமது தலைவர்களைப் போன்று தொழிற்சங்க உத்தியோகத்தர்களும் பிரதி நிதிகளும் தமது சமூகத்தினர்களை மதிப்பதே இல்லை. இதேபோன்றுதான் தொழிற்சங்கக் கிளை அலுவலகங்களுக்கு செல்லும் வெளி ஆட்களுக்கும் மரியாதை கிடைக்கின்றது.

இதனால் சுய கௌரவத்துடன் வாழ விரும்பும் புத்திஜீவிகளும், இளைஞர்களும் தொழிற்சங்க அலுவலகங்களின் பக்கம் செல்வதையே தவிர்த்து வந்தனர்.

ஆனால், சப்பிரகமுவ மாகாணத்துக்கான தேர்தலின் போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என்பனவற்றின் தலைவர்கள் ஒன்றிணைத்து தமிழ் தேசியம், தமிழ் உணர்வு, தமிழர் பிரதிநிதித்துவம் என்று கூறிக் கொண்டு ஒரே அணியில் வந்ததால் மலையகப் புத்திஜீவிகளும், இளைஞர்களும் எந்தவிதமான சுய இலாபங்களையும் எதிர்பாராமல் தமிழ் பிரதிநிதித்துவம் என்ற ஒரேநோக்குடன் அதிதீவிரமாக செயல்பட்டனர்.

தொழிலாளர்கள், வர்த்தகர்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் ஏன் பாடசாலை மாணவர்களும் கூட காட்டிய ஆர்வம்தான் சம்பிரகமுவாவில் வளர்ந்து சாதனை படைத்தது. இதனை இந்த மலையகத் தலைமைகள் மறந்துவிடக் கூடாது.

ஆனால் தேர்தல் முடிந்து பதவிகளை ஏற்றுக்கொண்ட பின் நம் தலைமைகள் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்ட வேதாளங்கள் ஆகிவிட்டனவோ என்ற சந்தேகமும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் மத்திய மாகாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறிய விடயங்களை இங்கு தொட்டுக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

"அதாவது இப்பிரதேசத்தில் வாழும் புத்தி ஜீவிகளும் இளைஞர்களும் சம்பிரகமுவ மாகாண இளைஞர்களை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். சமுதாய உணர்வுடன் அவர்கள் ஆற்றிய சேவைதான் அங்கு சாதனை படைக்க முடிந்தது" என்று கூறினார்.

பிரதி அமைச்சரின் கூற்று உண்மையானதும், வரவேற்கத் தக்கதுமாகும்.

சப்பிரகமுவாவைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில தொழிற் சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன. குறைந்த அளவிலானவர்களை ஒன்றிணைப்பது சுலபம். ஆனால் மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஹட்டன் நகரை எடுத்துக்கொண்டால் நகரத்தின் ஆரம்ப முனையில் இருந்து எல்லை வரை எடுத்துக்கொண்டால் புதிதாக வருபவர்களுக்கு இது என்ன ஒரு தொழிற்சங்கப் பேட்டைக்கு வந்துவிட்டோமோ என்று யோசிக்க வைக்கின்றது. கடைகளில் பெயர் பலகைகளைவிட தொழிற்சங்கங்களின் பெயர்ப் பலகைகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஹட்டனில் இருக்கின்றன.

அரச ஆதரவு, அரச எதிர் மற்றும் தனிக் கட்சி இதைவிட சமய அடிப்படையில் என்றும் இடது சாரி, வலது சாரி என்றும் பல பிரிவுகள்.

தொழிற்சங்க வசதிகள் தமது சுய நன்மைக்காக அம்மாநிலத் தோட்டத் தொழிலாளர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துவைத்து குளிர் காய்கின்றனர். இப்படியான ஒரு நிலையில் இவர்களை ஒன்றிணைப்பது எப்படி?

ஆறுமுகன் மனோகணே, சாந்தினிதேவி சந்திர சேகரன் ஆகியோர் நேர் எதிரான முரண்பட்ட கொள்கைகளை உடையவர்கள். சப்பிரகமுவ தேர்தலின்போது ஒரே முட்டைக்குள் இருக்கும் வெள்ளைக்கரு மஞ்சள்கரு போன்று சுவையூட்டி சரக்குத் தூளையும் கலந்து ருசியான ஒம்லெட்டை உருவாக்கிவிட்டனர்.

இந்த முயற்சி மலையகத்தின் ஏனைய பாகங்களிலும் முன்னெடுக்கப்படவேண்டும். அதுதான் புத்திசாலிகளின் கடமை.

ஆனால் இன்று நடப்பது என்ன! சப்பிரகமுவ தேர்தலை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு அவசர அவசரமாக ஏமாற்றப்பட்ட ஒரு மலையகக் கூட்டணி அதாவது நீங்கள் ஒன்றுபட்டால் நாங்கள் உங்களுடன் வருவமே என்று அடித்துக் கூறி உள்ளனர். இப்பொழுது ஒன்றுபட்டுள்ள இம் மூன்று தலைவர்களுடன் மலையகத்தில் குறிப்பாக திகாம்பரம், சதாசிவம், புத்திரசிகாமணி, இராமையா, வேலாயுதம், சந்திரசேகரன், இராமநாதர், முருகையா என்பவர்களுடன் இன்னும் பல தமிழ் தலைவர்கள் தத்தமக்கென பல தொழிற்சங்கங்களை வைத்துக்கொண்டு செயல்படுகின்றனர்.

இவர்களை எல்லாம் ஒன்றிணைப்பது எப்படி, பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த யதார்த்த நிலையை எல்லாத் தலைவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக பெரும் தலைவர்கள் என்று கருதப்படுபவர்கள் சிறிது விட்டுக் கொடுப்புடன் செயல்பட முன்வரவேண்டும்.

அதாவது நான் தான் பெரியவன் எல்லோரும் என்னிடம் தான் வரவேண்டும் என்ற ஈகோவை விட்டுத்தள்ளிவிடவேண்டும். ஆனால் இந்த மூவர் கூட்டணியில் இல்லாத மலையகத் தலைவர்கள் இக்கூட்டணியைப்பற்றி விமர்சிக்க ஆரம்பித்துவிட்டனர்.

கொள்கை இல்லாதது, குறிக்கோள் இல்லாதது பொது நோக்கம் இல்லாதது பதவிக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டது என்று விமர்ச்சிக்கின்றனர்.

இப்படி ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதை வரவேற்க வேண்டும். இதே போன்று மேலும் எஞ்சி உள்ள மலையக அமைப்புக்களையும் இணைத்துக்கொண்டு செயல்படுவது எப்படி என்று திறந்த மனதுடன் தமது ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும்.

இந்தத் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் ஊடகங்கள் வாயிலாகவும் மேடைகளிலும் விமர்சனம் செய்வதை கைவிடவேண்டும்.

அதேபோன்று பெரும் தலைவர்களும் தமது பந்தாவைவிட்டு அனைத்து மலையகத் தலைமைகளுக்கும் பகிரங்கமாக அழைப்புவிடவேண்டும். தனித்தனியாக வெற்றிலை வைத்து அழைக்க வேண்டிய அவசியம் இல்லை.

பொதுவாக ஊடகங்களின் மூலம் பொதுவான நடு இடத்தில் கூடப் பேச அழைக்கலாம். மலையகத் தமிழர்கள் மீது ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்கள் சுயமாக வந்து கலந்துகொண்டு தமது கருத்துக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த மலையகக் கூட்டணி தனிப்பட்ட முறையில் தேர்தல் கூட்டாக மட்டும் இல்லாமல் மலையக மக்களின் அடிப்படை வாழ்வாதாரம், அரசியல் உரிமைகள் தொடர்பான உறுதியான ஒரு கூட்டமைப்பை நிரந்தரமாக உருவாக்கவேண்டும். எவரும் எந்த தொழிற்சங்கத்திலும் இருக்கலாம். ஆனால், பொதுப் பிரச்சினை வேறு கோரிக்கை என்று வரும்போது சமுதாய மற்றும் இன உணர்வுடன் ஒன்றுபட்டு செயல்படும் ஒரணியில் செயல்பட முன்வரவேண்டும். இதைவிட்டு வியாக்கியானம் செய்தும் சேற்றை வாரி வீசியும் நீங்களும் துரோகிகளின் பட்டியலில் இடம் பெற முயற்சிக்கக்கூடாது.

> *சப்பிரகமுவாவைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில தொழிற்சங்கம் மட்டுமே செயல்படுகின்றன. குறைந்த அளவிலானவர்களை ஒன்றிணைப்பது சுலபம். ஆனால் மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஹட்டன் நகரை எடுத்துக்கொண்டால் நகரத்தின் ஆரம்ப முனையில் இருந்து எல்லை வரை எடுத்துக்கொண்டால் புதிதாக வருபவர்களுக்கு இது என்ன ஒரு தொழிற்சங்கப் பேட்டைக்கு வந்துவிட்டோமோ என்று யோசிக்க வைக்கின்றது. கடைகளில் பெயர் பலகைகளைவிட தொழிற்சங்கங்களின் பெயர் பலகைகளே அதிகமாகக் காணப்படுகின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலங்களில் அரசைத் தாக்கி, அரசின் கொடுமை ஆட்சியையும் விமர்சித்து வாக்கு வேட்டை நடாத்தினார் ஹக்கீம். தேர்தல் நெருங்கி வரும் போது கூட்டமைப்பு மீது விசமத்தனமான வார்த்தைகளைப் பாவித்து ஹக்கீம் விசம் கக்கினார். தேர்தல் முடிந்ததும் தன்னிச்சையாக முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீடத்தைக் கூட்டாமல், உயர் பீட முடிவு எட்டப்படாமல் சர்வாதிகாரமாக மு.கா.வை அரசிடம் மத்தியிலும் மாகாணத்திலும் அமைச்சு கேட்டு ஹக்கீம் முஸ்லிம்களை அடகு வைத்து விட்டார். அதன் பின்பு மாகாண மூலத்திற்கு ஆதரவு தொவித்தது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பா தெரிவிக்கையில், கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு மாற்றமான சட்ட மூலத்திற்கு மு.கா. இன் 7 உறுப்பினர்களும் வாக்களித்திருப்பதை நினைக்கும் போது வெட்கமாகவும், கேவலமாகவும் இருக்கின்றதாக தெரிவித்துள்ளார். இவர் கல்முனை மாநகர சபையின் பிரதி மேயராகவும் இருந்து வருகின்றார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) இருந்த போது சட்ட மூலத்தை ஆதரித்து நிறைவேற்றி அனுப்புமாறு மத்திய அரசு கோரி மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர்தான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக உருவாக வேண்டும் என்ற ஆதங்கம் நிறைந்து காணப்படுகின்றது. இந்த ஆதங்கத்தை ஒரு பிரதேசவாதமாக யாரும் பார்க்கக் கூடாது. மறைந்த அஷ்ரப் கூட கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்புடன் இணைந்துதான் ஆட்சி அமைத்திருப்பார் என்று ஏராளமான மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். அஷ்ரப் இருந்திருப்பாரானால் தமிழ் மக்களுக்கு எதிரான தீர்மானங்களோ, தமிழ் மக்களை மிதித்து, புறக்கணித்து விட்டு தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தீர்மானங்களும் எடுத்திருக்கமாட்டார் என்று

'திவிநெகும' சட்ட மூலத்திற்கு ஆதரவு தொவித்தது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிசாம் காரியப்பா தெரிவிக்கையில் கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு மாற்றமான சட்ட மூலத்திற்கு மு.கா. இன் 7 உறுப்பினர்களும் வாக்களித்திருப்பதை நினைக்கும் போது வெட்கமாகவும், கேவலமாகவும் இருக்கின்றதாக தெரிவித்துள்ளார். இவர் கல்முனை மாநகர சபையின் பிரதி மேயராகவும் இருந்து வருகின்றார்.

தனியொருவரின் சர்வாதிகாரப் போக்கில் முஸ்லிம் காங்கிரஸ்

அதிகாரங்களை பிடுங்கியெடுக்கும் 'திவிநெகும' சட்ட மூலத்திற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் தான் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஏற்கனவே 'திவிநெகும' சட்டமூலத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று ஹக்கீமிடம் கேட்கப்பட்டுள்ளது. அதற்கு ஹக்கீமும் சம்மதித்து விட்டாராம். அதயனால் தான் அமொக்காவில் இருக்கும் போது குறித்த சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றும்படி அரசுக்கு ஹக்கீம் ஆலோசனை வழங்கியிருந்தாராம். அந்த வகையில்தான் கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்விலேயே பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அரசு வெற்றியும் கண்டுள்ளது.

ஹக்கீம் கடந்த வாரம் அரசுப் பிரதிநிதியாக அமெரிக்கா சென்றிருந்தார். குறித்த சட்டமூலம் கிழக்கு மாகாண சபைக்கு வந்த போது ஹக்கீம் அமெரிக்காவில் இருந்து கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் அணித் தலைவருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு குறித்த சட்ட மூலத்தை ஆதரிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இப்போது முஸ்லிம் காங்கிரஸ் ஹக்கீமின் சர்வதிகாரமாகவும் தன்னிச்சையாகவும் இயங்கும் குட்டு அம்பலமாகி உள்ளது. அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை மற்றும் 'திவிநெகும' சட்டமூலத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதன் மூலம் ரவூப் ஹக்கீமின் உண்மைத் தன்மையும், சிங்களத்திற்கு முட்டுக் கொடுத்து வருவதன் இரகசியமும் முஸ்லிம் சமுதாயத்திற்கு தெரிய வந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் நாயகம், சட்டத்தரணி பாயிஸ் ஆகிய இருவரும் தங்களது ஆதங்கத்தை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்கள். இந்த இருவரும் முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள். உயர்பீடத்தைக் கூட்டாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து அரசுக்கு முட்டுக் கொடுத்துள்ளதும் 'திவிநெகும' சட்ட

யிருந்த போதும், பிள்ளையான் மூன்று மாதங்களாக சட்ட மூலத்தை நிறைவேற்றாது சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்து வந்தார். இதனால் பிள்ளையானுக்கும் அரச தரப்புக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. இந்தக் காரணத்திற்காகவும் பிள்ளையானுக்கு அரசு முதலமைச்சர் பதவி வழங்குவதில் விருப்பம் இல்லாமீல் போய் விட்டதாக ஒரு தகவல் உள்ளது. ஆனால் பிள்ளையானுக்கு தவறாக, தமிழ் பேசும் சமூகத்திற்கு பிழையாகத் தெரிந்த 'திவிநெகும' சட்டமூலம் சட்டத்தரணிகள் நிறைந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குத் தெரியாமல் போய் விட்டதா? சட்ட வல்லுநரான ஹக்கீமுக்கு தெரியாமல் போய் விட்டதா? என்பது முஸ்லிம் சமூகத்தில் பெருங் கேள்வியாக எழுந்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மீது ஐ.தே.க உட்பட சகல எதிர்கட்சிகளும் கண்டனங்கள் தெரிவித்து வருகின்றன. நீண்ட இடைவெளிக்குப் பின்பு தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமைப்படக் கூடிய நல்லதொரு வாய்ப்பு ஹக்கீம் என்ற தனிமனிதனாலும், பௌத்த ஆதிக்கத்தினாலும் தடுக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவோ நன்மைக்காகவோ ரவூப் ஹக்கீமினால் எந்தவொரு விமோசனமும் கிடைக்கமாட்டாது என்பது நிருபணமாகியுள்ளது. காரணம் கிழக்கு வீதிகளில் மக்கள் பேசுவதைக் கேட்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் ரவூப் ஹக்கீம் இரண்டு சிறுபான்மை இனங்களையும் புறந்தள்ளிவிட்டு தனது அமைச்சு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே அரசுடன் இணைந்து முட்டுக் கொடுப்பதை இறைவனும் மன்னிக்க மாட்டான்.

மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக சிங்களப் பேரினவாத அரசுகளாலும், சிங்கள இராணுவத்தாலும் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு எமது சகோதர இனத்துக்காக மற்றுமொரு சகோதர இனமான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியால் ஹக்கீம் அன்ட் கம்பனி தவிர்ந்த வேறு யாருக்காவது ஏதாவது நன்மை கிடைத்துள்ளதா என்றால் பூச்சியம்தான்.

கடந்த 12 வருடங்களாக கிழக்கு மாகாண முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களித்து ரவூப் ஹக்கீமை மட்டுமே வளர்த்திருக்கின்றார்கள் என்றால் மிகையாகாது. அஷ்ரப் அவர்களின் அகால மரணத்தின் பின்பு மு.கா.வின் தலைவராகப் பொறுப்பேற்ற ஹக்கீம் தனது தலைமைப் பதவியைத் தக்க வைப்பதிலும், பாதுகாப்பதிலும்தான் அதிக நாட்களைக் கடத்தி விட்டார். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் ஹக்கீமின் அரசியல் எதிரிகளான அமைச்சர் அதாவுல்லா அமைச்சர் ரிஷாட் பதியுத்தீன் ஆகிய இருவரையும் தோற்கடிப்பதில் தான் மிகவும் குறியாக செயல்பட்டு வருகின்றார். ஆனால் ரிஷாட் பதியுத்தீனின் கட்சி தொடர்ந்து முன்னேற்றமடைந்துதான் வருகின்றது. இம்முறை கிழக்கு மாகாணத் தேர்தலில் ரிஷாட் பதியுத்தீன் 3 மாகாண உறுப்பினர்களை மட்டக்களப்பு மாவட்டத்தில் வென்றெடுத்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போதைய நிலையில் முஸ்லிம்களுக்கு ஹக்கீம் தலைமை கொண்ட மு.கா. கட்சி அவசியமே இல்லை. கிழக்கு மக்களின் ஒட்டு மொத்த வாக்குகளையும் பெற்று ஒரு தனிமனிதனின் சுய இலாபத்திற்காக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி செயற்படுவது வேதனைக்குரியதாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்களின் வற்புறுத்தலின் பேரில் இவ்வாரம் உயர் பீடம் கூடுகின்றது. பல காரசார விவாதங்கள் நடந்தாலும் இறுதியில் அமர்ந்து விடும். காரணம் தேர்தலில் தோற்றவர்கள் மற்றும் முஸ்லிம் காங்கிரசின் முக்கியமானவர்களுக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் பதவிகள் வழங்கப்படவுள்ளதாம். முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தின் வாகனத்தில் பவனி வருபவர்கள். அந்தப் பவனியுடன் முஸ்லிம்களின் உரிமைகளும், அரசியல் அபிலாஷைகளும் புதைந்து கிடைக்கும்.

முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடத்தை அலங்கரிக்கும் வடகிழக்கு மாகாண உறுப்பினர்கள் பதவி, பணம், பட்டங்களுக்கு அப்பால் தங்களது மனதைத் தொட்டு இதய சுத்தியுடன் மக்களுக்காக, மக்களின் நன்மைக்காக, மக்களின் நலனுக்காக மனதார இயங்குகின்ற போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் மக்களின் கட்சியாகும். ஆனால், தற்போது மு.கா. தொடர்ந்து சோரம் போவதால் மாற்று அணியொன்றின் அவசிய முஸ்லிம்கள் மத்தியில் நிறைந்து காணப்படுகின்றது.

எம்.எம்.நிலாம்டீன்
அட்டாளைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோனியாகாந்தி மருமகன் மீது ஊழல் குற்றச்சாட்டு!

— அபிஜித் —

ரொபட் வடேரா மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரை குடும்பத்திலிருந்து தள்ளிவைப்பதை விட சோனியா குடும்பத்துக்கு வேறு வழி இராது. பிரியங்கா காந்தி தன் கணவரை கைவிடுவாரா என்பது தான் கேள்வி. கடைசியில் கணவன் இல்லாது பிரதமரான இந்திரா போலவே பிரியங்கா பிரதமராகவும் கூடும்.

கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு முன் 1987 இல் போபர்ஸ் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான பிறகு, நேரு - காந்தி குடும்பம் மீது முதல் முறையாக ஊழல் குற்றச்சாட்டு கடந்த மாத இறுதியில் சுமத்தப்பட்டுள்ளது. தி.மு.கவின் ராசாவும் கனிமொழியும் அகப்பட்டுக்கொண்டது போன்று கிட்டத்தட்ட அதையே ஒத்த குற்றச்சாட்டு இதுவென்றாலும் தொலைத்தொடர்பு தொலைபேசி உரிமம் தொடர்பில் தேசிய ரீதியிலான பேரம் பேசலில் துணிந்து இறங்கி மாட்டிக் கொண்ட தி.மு.க. தரப்பு போல சோனியா காந்தியின் மருமகன் மீது இப்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பாரதூரமானது அல்ல. என்றாலும் நாட்டின் அரச குடும்பமாக கருதப்படுவதால் சிறு குற்றச்சாட்டும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. வர்த்தகரான ரொபட் வடேரா அரச அமைச்சுகளின் சலுகைகளை சில நிறுவனங்களுக்குப் பெற்றுக்கொடுத்து கைமாற்றாக தனது சொந்த வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்ய அந்நிறுவனங்களைத் தூண்டினார் என்பதே குற்றச்சாட்டாகும். ஊழலுக்கு எதிராக போராடிய அன்னா ஹசாரேயின் இயக்கத்தில் முக்கிய உறுப்பினராக இருந்த அர்விந் கேஜ்ரிவாலே இந்த ஊழல் குற்றச்சாட்டு பற்றி பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் அன்னா ஹஸாரேயுடன் மிக நெருக்கமானவராக இருந்த அர்விந் கேஜ்ரிவால் அன்னா அரசியல் கட்சி துவக்க மறுத்ததால் அன்னாவுடன் கருத்து வேறுபாடு கொண்டவராக இன்று உள்ளார். அன்னா ஹசாரேயும் அர்விந் கேஜ்ரிவாலும் ஒரே இயக்கத்தில் இருந்தாலும் இந்த வெகுஜன இயக்கத்திலிருந்து அரசியல் செல்வாக்குத் தேட அன்னா ஹசாரே விரும்பவில்லை என்பதும் ஆனால் அர்விந் கேஜ்ரிவால் அரசியல் கட்சி தொடங்குவதில் ஆர்வமாக இருந்துள்ளார். என்பதும் தெளிவாகத் தெரியும் வேறுபாடுகளாகும். உண்மையான காந்திய இயக்கத்தை நடத்திய அன்னா அரசியல் கட்சி நடத்த வோ ஆட்சியைப் பிடிக்கவோ முயலவில்லை. இதனால் அவர் மீதான மக்களின் மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ளது. வயோதிபம் காரணமாக நாடுமுழுவதும் பயணித்து மக்கள் இயக்கத்தை இன்னும் திறம்பட நடத்த ஹசாரேக்கு இயலவில்லை.

மற்றம்படி அவர் எந்த மாநிலத்தில் போராட்டம் நடத்தினாலும் மக்கள் அவர் பின் அணிதிரள தயாராகவே உள்ளனர். மேலும் அவர் காங்கிரஸ், பிஜேபி இருதரப்பையும் கிட்டத்தட்ட சரிசமனாகவே கண்டித்து வந்தார். பிரதான எதிர்க்கட்சியின் ஊதுகுழலாக தாம் தோற்றம் பெறக்கூடாது என்பதில் ஹசாரே மிக்க அவதானம் செலுத்துவதும் குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் கட்சியை மட்டுமன்றி பல்வேறு மாநிலங்களில் ஆளும் அரசியல் வாதிகளுக்கும் அன்னாவின் அஹிம்சாவாத சாட்டை அடி விழவே செய்தது. ஆனால் அரவிந் கெஜ்ரிவால் அரசியல்கட்சி ஒன்று தொடக்கும் நோக்கத்திலுள்ளார் என்பது தெரிந்ததும் அன்னா ஹசாரே புத்திசாலித்தனமாக அவரிடமிருந்து கழன்று கொண்டார். இது கேஜ்ரிவாலுக்கு பெரும் ஏமாற்றம் தரும் விடயமாக இருந்தது. அன்னா வயதானவர் என்பதாலும் அவருக்கு அரசியல் ரீதியான வாரிசு அவரது குடும்பத்திலிருந்து வரமாட்டாது என்பதாலும் அன்னாவை முன்னிறுத்தி அரசியல் கட்சி தொடங்கினால் அதன் தலைமைப் பதவி கடைசியில் அர்விந் கேஜ்ரிவாலை சென்றடைய நிறையவே வாய்ப்புண்டு. இந்த ஆசையில் மண் விழுந்ததால்தான் சோனியா காந்தியின் மருமகன் மீது ஊழல் குற்றச்சாட்டை பொய்யாக கேஜ்ரிவால் அவிழ்த்து விட்டுள்ளார் என காங்கிரஸ் கட்சி வட்டாரம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

எனினும், இது தொடர்பில் ரொபட் வடேராவுக்கு எதிராக பொது நலன் வழக்கு ஒன்று அல்ஹபாத் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு 3 வாரங்களினுள் பதிலளிக்கும்படி மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகர் என்பதால் அரசின் செல்வாக்கான காங்கிரஸ் அமைச்சர்கள், அதிகாரிகளை வளைத்து ஊழல் புரிய பிரியங்காவின் கணவருக்கு இலகுவாகவே இருக்கும். அதை அவர் செய்தாரா என்பதே இன்றைய கேள்வி. பிரியங்காவின் முகவசீகரம் கிட்டத்தட்ட இளவரசி டயானாவின் வசீகரத்தை ஒத்தது என்பதும், எப்படி டயானாவின் வசீகரத்துக்கு இளவரசர் சார்ள்ஸின் கம்பீரம் போதாது என்று கருதப்பட்டது போலவே பிரியங்காவின் அழகு, இளமை, வசீகரம், குடும்பப் பின்னணி என்பவற்றுடன் பார்க்கையில் அவரது கணவர் பொருத்தமானவராக இல்லாவிடினும் பிரியங்கா வடேரா மற்றொரு மேனகா காந்தியாக மாற வாய்ப்புள்ளது. அப்படி மாறினால், நேரு-குடும்ப ஒரே வாரிசுகளான அவரது மகளையும் மகனையும் ரொபட் வடேரா தனது பாதுகாப்பில் எடுத்தால் வாரிசே இல்லாத நிலையும் வரலாம். ஏனெனில் 42 வயதான ராகுல் காந்தி இன்னும் திருமணமே செய்யாதது பெரிய பிரச்சினையாகும்.

எவ்வாறாயினும் ரொபட் வடேரா மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவரை குடும்பத்திலிருந்து தள்ளி வைப்பதை விட சோனியா குடும்பத்துக்கு வேறு வழி இராது. பிரியங்கா காந்தி தன் கணவரை கைவிடுவாரா என்பது தான் கேள்வி. கடைசியில் கணவன் இல்லாது பிரதமரான இந்திரா போலவே பிரியங்கா பிரதமராகவும் கூடும்.

தற்போது காங்கிரஸ் இறங்குமுகத்தில் இருப்பதால்



கணவரை விட்டுக்கொடுக்காத அடக்கமான, சாதாரண இந்திய மனைவியாக குடித்தனம் நடத்தி வருகிறார். ரேஹான், மியாரா என்ற ஆண் மற்றும் பெண் குழந்தைகளின் தாயாக கடமைகளை செய்வதுடன், அவ்வப்போது அண்ணன் ராகுலுடன் அவரது அரசியல் பயணத்தில் உதவியும் வருகிறார். அண்ணன் விரும்பினால் மட்டுமே அரசியலுக்கு வருவேன் என்று உறுதியாக கூறியும் உள்ளார். ஆனால் வர்த்தகரான வதேராவோ அரசியல் அபிலாசைகளைக் கொண்ட ஒருவர் என்பதை பல தடவை வெளிப்படுத்தி, சர்ச்சைகளும் பல சமயங்களில் வெளிக்கிளம்பியுள்ளன. உதாரணமாக கடந்த வருடம் நேரு குடும்பத்தின் அரசியல் தளமான உத்தர பிரதேச சட்டசபைத் தேர்தலில் பிரசாரம் செய்ய தடல்புடலாக தயாரிப்பு செய்து, கடைசி நேரத்தில் சோனியா உத்தரவால் வடேரா பின்வாங்க நேரிட்டது. உள்வீட்டு சண்டை உள்ளதோ என கருதுமளவுக்கு விவகாரம் வெளியுலகிற்கு தெரிந்தது. எனினும் பிரியங்கா 12ம் திகதி பிறந்தவர் எண்கணிதப்படி 12 ம் திகதி பிறந்த பெண்கள் என்ன நடந்தாலும் தமது கணவருடன் சண்டையிடமாட்டார்கள். அதை மெய்ப்பிக்கும் விதமாக என் கணவர் அப்படிக் கூறவில்லை ஊடகங்கள் திரித்துக் கூறிவிட்டன என்று போட்டாரே ஒரு போடு. இவ்வாறு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தாலும் ரொபட் எந்தத் தேர்தல் தோல்வியும் ரொபட் வடேராவின் ஊழலால் வந்ததாகவே சொல்லப்படும் ஆபத்தும் உண்டு. ஆனால், உண்மையில் அவர் மீதான குற்றச்சாட்டு வரமுன்பே மன்மோகன் அரசு தள்ளாடத் தொடங்கிவிட்டது என்பது கவனிக்கத்தக்கது. வடேராவின் ஊழல் போபர்ஸ் - 2 என்று பிரபலமாக பேசப்படும் நிலைகூட வரலாம். போபர்ஸ் பீரங்கி பேர ஊழல்தான் ராஜிவை 1989 தேர்தலில் வீழ்த்தியது என கூறப்படுகிறது. ஆனால், உண்மையில் அதற்கு முன்பே ஜனாதிபதி ஸெயில் சிங்குடன் முறுகல், இலங்கை விடயத்தில் கையை சுட்டுக் கொண்டதால் தமிழகத்தில் ஏற்பட்ட எதிர்மறையான உணர்வலைகள், மூத்த தலைவர்களும் நண்பர்களுமான அமிதாப் பச்சன், ஆரிப் முஹமட்கான் முதலானோர் விலகியது, வங்காளத்தில் பிரணாப் முகர்கியை ஒதுக்கி வைத்தது என பல காரணிகளின் சேர்க்கையோடு உச்சகட்டமாக போபர்ஸ் ஊழலும் சேர்ந்து ராஜிவை அதல பாதாளத்தில் வீழ்த்தியது என்பதே உண்மையாகும். அவ்வகையில் 2014 தேர்தலில் காங்கிரஸ் தோற்று ஆட்சியிழந்தால் பழியை வடேரா மீது போட்டு தப்பித்துக் கொள்ளவும் முடியும். இன்னொரு சசிகலாவாக வடேரா உருவெடுக்கவும் கூடும்.

***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பித்தன் பதில்கள்

குடும்ப வாழ்க்கை சொர்க்கமா? நரகமா?

ம. மதுசூதனன், மன்னார்.

கே:– பித்தரே, குடும்ப வாழ்க்கை என்பது சொர்க்கமா? நரகமா?

ப:– அது அவரவர் மனநிலையையும், அமையும் வாழ்க்கைத் துணையையும் பொறுத்தது. இவை எல்லாவற்றையும்விட அவரவருக்கென்று தலைவிதி என்று ஒன்று இருக்கிறதே.

ப. பரிந்தன், மட்டக்களப்பு.

கே:– உன்னை விடச் சிறியவர்களானாலும் அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க வேண்டும் என்று போதிக்கும் அப்பா, கோபம் வந்தால் என்னை அடி அடியென்று அடிக்கிறாரே? தன்னை விடச் சிறியவனான எனக்கு மதிப்பு மரியாதை கிடையாதா?

ப:– இப்படி இடக்கு மிடக்காக கேள்வி கேட்கிற உமக்கு உமது அப்பா அடிமட்டும் போடுவது போதாது. மாறாக உதைஉதையென்று உதைக்க வேண்டும்.

க. அருணாசலம், கொழும்பு – 06.

கே:– நேர்மையான வழியில் உழைத்து பணக்காரனாவது என்ற எனது குறிக்கோள் நிறைவேற வழி சொல்லுமென்?

ப:– எனக்கும் அப்படி ஒரு நப்பாசை உண்டுதான், அதற்கு வழி தெரிந்திருந்தால் நான் எப்போதோ பணக்காரனாகியிருப்பேனே. வழி தான் இன்னமும் தெரியமாட்டேன் என்கிறதே.

உ. திலானி, வவுனியா.

கே:– கல்வியா, செல்வமா உயர்ந்தது பித்தரே?

ப:– நிச்சயமாக கல்வி தான் உயர்ந்தது. காரணம் கல்வி அறிவு இருப்பின் செல்வத்தைச் சேர்ப்பது இலகு. எவ்வளவுதான் பணமிருந்தாலும், கல்வி எல்லாரது மண்டையிலும் ஏறாது; ஏற்றவும் இயலாது.

பொ. கிருஷாந்தி, திருகோணமலை.

கே:– பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும் என்ற முதுமொழி பெண்கள் இரக்கத்துக்கு உரியவர்கள் என்று அர்த்தப்படுகிறதா?

ப:– பெண்கள் இரக்கத்துக்கு உரியவர்கள் என்பதை ஏற்க உமது தன்மானம் இடம் கொடுக்குதில்லைப்போலும்; இது விடயமே வேறு. இனம் தன் இனத்தின் மீது இரக்கம் கொள்வது நியாயம் தானே என்கிறது எனது அனுபவம்.

ஐ. சதாசிவம், உடுவில்.

கே:– எடுத்ததற்கெல்லாம் மற்றவர்களை மட்டம் தட்டி நக்கலாகப் பேசும் நண்பரொருவரின் அந்தப் பழக்கம் குறித்து என்ன நினைக்கிறீர்?

ப:– சிலரிடம் இயற்கையாகவே உள்ள பழக்கம் அது. ஆனால் ஒன்று அத்தகையவர்களுக்கு நண்பர்கள் என்று சொல்லிக்கொள்ள எவரும் இருக்க மாட்டார்கள். தூரத்தில் கண்டாலே 'வருகிறான் பார் கழுத்தறுப்பதற்கு' என்று தூர விலகிப்போய் விடுவார்கள்.

பா. தேவகி, கொடிகாமம்.

கே:– தமக்கும் சிங்களம் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்ள இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் ஒரு சிலர் எம்மவர்களுடன் கதைக்கும்போதே ஒரு சில சிங்கள வாக்கியங்களையும் எடுத்து விடுகிறார்களே?

ப:– தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம் என்றொரு தொடர் எம் மத்தியில் வழக்கில் இருக்கிறது. சில வேளைகளில் தவறான அர்த்தமுள்ள வார்த்தைகளை தவறென்று தெரியாமல் பேசி அதனால் சங்கடத்துக்கு உள்ளாகவும் நேரிட்டு விடும்.

சொற்சிலம்பம் போட்டி இல: 542



மேலிருந்து கீழ்

01. இடைய சாதிப் பெண்
02. உயர்வடைதல்
03. செல்வ
04. மகாகவி
05. முதுகுப்புறப் பகுதி
06. மட்பாண்டம் செய்பவன்
08. மனைவி
12. வலிமை - திறமை மிகுந்தவர்
14. நெஞ்சுப்பகுதி
15. எதிர்பாராமல் சடுதியாக நிகழ்வது
16. பரிணாம விருத்தி
19. நோவு
20. மாத்திரை
22. நெருப்பில்லாமல் இது வராதாமே.

இடமிருந்து வலம்

01. நவமணிகளுள் ஒன்று
05. சில விலங்குகளின் பெண் இனம்
07. முழுமையாகப் பிரிபடாத எண்களின் மடங்கு
08. சிறிய அல்ல
09. விதவை நிலை
10. உயரத்தில் இருப்பது
11. இளைஞன்
13. பொருள்
15. வலிமை
16. ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் வரும் பருவம்
17. சேரர், சோழர் போன்று ஓர் இராச்சிய வகையினர்
18. பூமி
21. திடீரென வந்து தாக்கும் ஒரு நோய்
23. கவலை
24. சிகரெட்டு, சுருட்டு ஆகியவற்றின் மூலப்பொருள்.

அனுப்புபவர் பெயர் :.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

சொற்சிலம்பம் போட்டி இல. 543

சொற்சிலம்பம் 543 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 07 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல: 540 விடைகள்

மேலிருந்து கீழ்

01. ஆசீர்வாதம், 02.சிதை. 03. ஜோதிடம், 04.தினம், 05.வீரன். 06.தின். 09.கபடம், 10.அகவுதல். 12.சக, 13. இல்லம், 15. கழி, 16.மகரம், 18.கவிதை, 20.கறி, 21.சய

இடமிருந்து வலம்

01. ஆசியஜோதி, 05. வீதி, 07. சீதை, 08. தினகரன், 10. அடம்பன், 11. வாசகம், 14. தகவு, 15. கம்மல், 17.தகழி, 19.கல, 20. கல்வி, 21. சரம், 22. மறி 23. தைரியம்

போட்டி இல. 540 இல் பரிசு பெற்றோர்

1ஆம் பரிசு எம்.ஏ.எஸ். தஸ்வீனா, இல.24 ஏ-ரேஸ்கோஸ் வீதி, பதுளை.

2ஆம் பரிசு ச.சரவணமுத்து, கிறீன்வூட் கல்லூரி, அம்பத்தன்னை, அக்குறணை.

3ஆம் பரிசு எ.ஒ.அஸ்கி அஹமட், இல. 179, கே.கே.பி.வீதி, கல்முனை-03.

பாராட்டுப் பெறுவோர்

(1) சூ.வேலேந்திரன், இல - 11-5/4 கல்லூரி லேன், திருகோணமலை.

(2) ஜோதிலஷ்மி கனகசபை, இல. 3, மொல்லிகொட லேன், கம்பளை.

(3) ர.அபிஷன், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

(4) திருமதி. எஸ்.சந்திரிகா, இல.27, தாமரைக்கேணி, வீதி, மட்டக்களப்பு.

(5) செல்வி.கௌ.கந்தஞானி, பிரதேச செயலகம், சங்கானை.

(6) திருமதி. ஜீ. சரோஜினிதேவி, இல-11A, மொஸ்க்லேன், மோதரை, கொழும்பு - 15.

(7) அ. கலிஸ்ரா, இல-15 நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(8) இ.வீரசிங்கம், இல.9/2, இராசதுரை வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.

(9) திருமதி. சீதாபாலன், வேகம, இல-14, பிபிலை.

(10) ஜே.அருளப்பு, ஓய்வூதியர் பணிமனை, இல-130 மெனிங்டிறைவ், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு

சம்பியன் பட்டத்தை வென்றார் அசரென்கா

சீன ஓபன் டென்னிஸ் தொடரில் பெலாரசின் விக்டோரியா அசரென்கா சாம்பியன் கிண்ணத்தை வென்றார்.

சீனத் தலைநகர் பிஜீங்கில் சீன ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்றது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கனையான பெலாரசின் விக்டோரியா அசரென்காவும், இரண்டாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் மோதினர்.

இதில் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய அசரென்கா 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

பிரிமியர் லீக் கால்பந்து மான்செஸ்டர் யுனைடெட் வெற்றி

நியூகேசில் அணிக்கு எதிரான பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. மான்செஸ்டர் நகரில் நடந்த லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட், நியூகேசில் அணிகள் மோதின. இதில் அபாரமாக ஆடிய மான்செஸ்டர் யுனைடெட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் டாட்டன்ஹாம் அணி 2-0 என்ற கோல் கணக்கில் அஸ்டன் வில்லா அணியை தோற்கடித்தது. லிவர்பூல்-ஸ்டோக் (0-0), சவுத்தாம்டன்-புல்ஹாம் (2-2) அணிகள் மோதிய போட்டிகள் டிரா'வில் முடிந்தன.

இதுவரை விளையாடிய 7 லீக் போட்டிகளில் 5 வெற்றி, 2 தோல்வி உட்பட 15 புள்ளிகள் பெற்ற மான்செஸ்டர் யுனைடெட் அணி 2வது இடத்துக்கு முன்னேறியது. முதலிடத்தில் 19 புள்ளிகளுடன் செல்சியா அணி உள்ளது. மான்செஸ்டர் சிட்டி (15 புள்ளி), எவர்டன் (14) அணிகள் 3, 4வது இடங்களில் உள்ளன.

வயது ஒரு தடையில்லை என்கிறார் சீனாவின் லீ நா

டென்னிஸில் தனிநபர் போட்டிகளில் ஆசியாவின் சார்பில் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் வீராங்கனையான சீனாவின் லீ நா, அடுத்த பருவகாலம் தொடர்பாக நம்பிக்கையுடன் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளதோடு, வயது ஒரு தடையல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

லீ நா, தற்போது உலகத் தரவரிசைப் பட்டியலில் 7 ஆம் இடத்தில் காணப்படுகிறார். 31 வயதை எட்டவுள்ள லீ நா, வயது என்பது ஒன்றுமில்லை எனத் தெரிவித்ததோடு, தான் மிகுந்த உடற் தகுதியுடன் இருப்பதாக உணர்வதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் தன்னால் டென்னிஸ் ஆடுகளங்களில் ஓட முடிகிறது எனவும், இப்பொழுதும் உலகின் உச்சத்தில் காணப்படுவதாகவும் தெரிவித்த அவர், தான் ஏன் டென்னிஸ் விளையாடுவதை நிறுத்த வேண்டும் எனவும் கேள்வியெழுப்பினார்.

டென்னிஸ் விளையாடுவதை நிறுத்துவதைப் பற்றிய யோசிப்பதை விடுத்துத் தான் தொடர்ந்தும் டென்னிஸ் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் எனத் தெரிவித்த அவர், தனது கனவுகளைத் தொடர்ந்தும் துரத்திக் கொண்டு வெற்றி காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கங்களை ஓட ஓட விரட்டியடித்த சாமுவேல்ஸ்

T20 உலகக்கோப்பை கிரிக்கட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 36 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள். இதில் சாமுவேல்ஸின் பங்கு அளப்பரியது. இவர் வெறும் 56 பந்துகளில் 78 ரன்களை குவித்தார். முதலில் பாட் செய்த மேற்கிந்திய தீவுகள் 20 சவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 137 ரன்கள் குவிந்தது. பின்னர் ஆடிய இலங்கை 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ரன்களுக்கு சுருண்டது.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே தடுமாறிய மேற்கிந்திய தீவுகள் அணி முதல் 10 ஓவர்களில் 32 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் பின்னர் சாமுவேல்ஸ் தனது ஓட்ட வேட்டையை ஆரம்பித்தார். இலங்கையின் அனைத்து பத்துவீச்சாளர்களின் பந்துவீச்சையும் துவம்சம் செய்தார். குறிப்பாக இலங்கை அணியின் நம்பிக்கை பந்து வீச்சாளராகக் கருதப்படும் மலிங்கலின் 13 வது ஓவருக்கு 3 சிக்ஸர்கள் விளாசினார். இதனால் அந்த ஓவருக்கு 21 ரன்கள் கிடைத்தன. தொடர்ந்து அதிரடியாக விளையாடிய சாமுவேல்ஸ் மென்டிஸ் வீசிய 15வது ஓவரில் சிக்ஸர் அடித்து 46 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். அத்துடன் மலிங்கா வீசிய 17வது ஓவரை எதிர்கொண்ட சாமுவேல்ஸ், 2 சிக்ஸர்களையும், ஒரு பவுண்டரியையும் விளாசினார்.

அவர் 56 பந்துகளில் 6 சிக்ஸர் 3 பவுண்டரிகளுடன் 78 ரன்கள் குவித்தார். இதில் 5 சிக்ஸர் மலிங்கா ஓவரில் அடிக்கப்பட்டதாகும். அதுமட்டுமல்லாது பந்துவீச்சிலும் தொடர்ந்து அசத்தினார் சாமுவேல்ஸ். இலங்கை அணியின் துடுப்பாட்ட வேகத்தைக் கட்டுப்படுத்தி 4 ஓவர்களில் 15 ரன்கள் மட்டுமேகொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். இதன்மூலம் இலங்கை அணி 4 உலகக் கோப்பை இறுதி ஆட்டங்களில் தோல்வியை பதிவு செய்ய காரணமாக விளங்கியதோடு சொந்த மண்ணில் எளிதாக வெற்றி பெறலாம் எனக் காத்திருந்த இலங்கை அணியின் எண்ணத்தையும் தவிடுபொடியாக்கினார்.

இறுதிப் போட்டியில் திறம்படச் செயற்பட்டதற்காக ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச்சென்றார். மேற்கிந்தியத் தீவுகளின் 33 ஆண்டுகால கனவை நனவாக்கியதில் சாமுவேல்ஸின் பங்கே அதிகம் எனக் கூறலாம்.

விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QWERTY KEYBORD உடன் அறிமுகமாகும் LG MACH கைப்பேசிகள்

நவீன அம்சங்களுடன் கூடிய கைப்பேசிகளை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்திவரும் LG நிறுவனமானது தற்போது QWERTY Keybordகள் மற்றும் 4G வலையமைப்பு தொழில்நுட்பத்துடன் கூடிய Smart Phoneகளை அறிமுகப்படுத்துகின்றது.

கூகுளின் Android 4.0 Icecream Sandwich இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக்கைப்பேசிகள் 4 அங்குல அளவுடைய தொடுதிரையினையும் கொண்டுள்ளதாக காணப்படுகின்றன. அத்துடன் இதன் திரைகள் 540 X 960 Pixels உடையனவாகும்.

மேலும் Qualcomm S3 தொழில்நுட்பத்தில் அமைந்த 1.2GHz வேகத்தில் செயலாற்றக் கூடிய Processorனையும், முதன்மை நினைவகமாக 1GB RAM இனையும் கொண்டுள்ளன.

இவற்றுடன் 5 Mexapixels கொண்ட துல்லியமான புகைப்படங்கள், வீடியோக்களை பதிவு செய்யக்கூடிய கமெராவினையும் உள்ளடக்கியுள்ளது.

சந்தைக்கு வருகிறது Bluetooth உடன் கூடிய Tooth Brush

Bluetooth உதவியுடன் செயல்படும் Tooth Brush அமெரிக்க நிறுவனம் உருவாக்கியுள்ளது.

குழந்தைகளை பல் தேய்க்க வைப்பது, ஒழுங்காக பல் தேய்க்க வைப்பது தாய்மார்கள் அனுபவிக்கும் அன்றாட கொடுமைகளில் ஒன்று.

சில சோம்பேறி பெரியவர்களும் இந்த ரகத்தினர் தான். ஒப்புக்கு பல் தேய்த்துவிட்டு வந்துவிடுவார்கள்.

இதுபோன்ற அவதிகளை தடுக்கும் வகையில் அமெரிக்காவை சேர்ந்த பீம் டெக்னாலஜீஸ் நிறுவனம் Digital Brushயை அறிமுகப்படுத்தியுள்ளது.

Smartphoneஇன் Bluetooth உதவியுடன் இது செயல்படும். Smartphoneல் அலாரம் செட் செய்தால், பல் துலக்க தினமும் நினைவூட்டும்.

அது மட்டுமின்றி Biod Electric முறையில் பற்களுடன் பிரஷ் நன்றாக, போதிய அளவில் உராய்ந்ததா அதாவது, நீங்கள் ஒழுங்காக பல் தேய்த்தீர்களா என்பது கண்காணிக்கப்பட்டு, அந்த தகவலும் Smartphoneக்கு அனுப்பப்படும்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் அளவுடன் இது ஒத்துப்போனால், Well done Boss' என்று Message வரும். இந்த Brush அடுத்த மாதம் சந்தைக்கு வரவிருக்கிறது.

குழந்தைகளுக்கான email அப்ளிகேஷன்

இன்றைய நவீன உலகில் மின்னஞ்சல் தொடர்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஊடகமாக காணப்படுகின்றது.

இதன் பயன் கருதி பல்வேறு நிறுவனங்கள் இந்த மின்னஞ்சல் சேவையினை வழங்கி வருகின்றன.

எனினும் இச்சேவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனின் குறிப்பிட்ட வயதெல்லையை கடந்திருக்க வேண்டிய அவசியம் காணப்படுவதுடன் குழந்தைகள் எவரும் பயன்படுத்தப்பட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வாக தற்போது Maily எனும் குழந்தைகளுக்கான மின்னஞ்சல் சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கென Tom றூழியியிள மற்றும் Raphael Halberthal ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ள விசேட அப்பிளிக்கேஷனை iOS சாதனங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் இந்த அப்பிளிக்கேஷன் ஆனது குழந்தைகளைக் கவரக்கூடிய வகையில் வண்ணமயமானதாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Android சாதனங்களுக்கான Wild Blood RPG Game அறிமுகம்

iOS சாதனங்களில் பயன்படுத்தக்கூடியவாறு Gameloft நிறுவனம் அறிமுகப்படுத்திய புத்தம் புதிய Game ஆன Wild Blood hackdndslash RPG ஆனது தற்போது Android சாதனங்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய Mechanical, Graphics மற்றும் முப்பரிமாண உணர்வுகளைத் தரக்கூடிய போர்க்களத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அத்துடன் 6.99 அமெரிக்க டொலர்களைச் செலுத்தி Google Play தளத்திலிருந்து இந்தக் Gameனைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

மேலும் இதனை அன்ரோயிட் சாதனங்களில் நிறுவிக் கொள்வதற்கு 2GB வரையான சேமிப்பு வசதி அவசியம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விண்டோஸ் 8 இயங்குதளத்திற்கான உத்தியோபூர்வ விளம்பரத்தை வெளியிட்டது மைக்ரோசொப்ட்





கணனி உலகில் கொடிகட்டிப் பறக்கும் நிறுவனங்களுள் ஒன்று மைக்ரோசொப்ட்.

இந்நிறுவனத்தினால் உருவாக்கப்படும் விண்டோஸ் இயங்குதளத்தின் புதிய பதிப்பான விண்டோஸ் 8 ஆனது ஒக்டோபர் 26ஆம் திகதி உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட இருக்கின்றது.

இதனை அடிப்படையாக வைத்து அவ் இயங்குதளத்திற்கான விளம்பரங்களையும் மைக்ரோசொப்ட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக யூடியூப் தளத்தில் வெளியிட்டுள்ளது.

கணனிப் பாவனையாளர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள இந்த இயங்குதளமானது முன்னைய பதிப்புக்களை விடவும் மெட்ரோ பயனர் இடைமுகம் உட்பட பல புதிய அம்சங்களுடன் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Key Boardஆல் உருவான குதிரை

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Babis Pangiotidis என்ற கலைஞர் பழைய கணனி தட்டச்சு பலகையில் காணப்படும் கீ-யைப் பயன்படுத்தி குதிரையாக வடிவமைத்துள்ளார்.

மேலும் இந்தக் குதிரையை வடிவமைப்பதற்கு 18,000 கீ-களைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



உலகின் முதல் குளோனிங் உயிரினமான 'டோலி'யை உருவாக்கிய விஞ்ஞானி மரணம்

உலகின் முதல் குளோனிங் உயிரினமான 'டோலி'யை (செம்மறியாடு) உருவாக்கியவர்களில் ஒருவரான பேராசிரியர் கீத் கேம்பல் தனது 58ஆவது வயதில் மரணமடைந்துள்ளார்.

எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் ரோஸ்லின் ஆராய்ச்சிக் கூடத்தில் கடந்த 1996ஆம் ஆண்டு குளோனிங் முறை மூலம் முதன் முதலில் டோலி என்ற செம்மறியாடு உருவாக்கப்பட்டது.

முதலில் சோதனைக்குழாய் மூலம் வளர்க்கப்பட்ட டோலி, எம்பிரியோ வளர்ச்சிக்குப் பின்னர் வாடகைத்தாய்க்கு மாற்றப்பட்டு, 1996ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி பிறந்தது.

டோலியின் உருவாக்கத்தில் தலைமை வகித்த லான் வில்மட் என்பவர்தான் இந்த செம்மறியாட்டின் படைப்பாளி என அழைக்கப்பட்டு வருகிறார்.

இந்நிலையில், கீத் இறந்த தகவலை எடின்பர்க் பல்கலைக்கழக தகவல்கள் உறுதி செய்துள்ளன. தனது சோதனையில் 66 சதவீத பங்களிப்பை அளித்தவர் பேராசிரியர் கீத் கேம்பல் என, கீத் பற்றி வில்மட் குறிப்பிட்டுள்ளார்.

1991 முதல் 1999ஆம் ஆண்டு வரை கீத் அந்த சோதனைக்கூடத்தில் பணியாற்றியுள்ளார். அதன்பின்னர் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் விலங்குகள் மேம்பாட்டுத் துறையின் பேராசிரியராக கீத் பணிபுரிந்துள்ளார்.

டோலியின் உருவாக்கத்திற்குப் பின்னர் வெகு விரைவிலேயே பன்றி, ஆடு, குதிரை, நாய் மற்றும் பூனை போன்ற உயிரினங்கள் குளோனிங் மூலம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

டோலியை உருவாக்கிய விஞ்ஞானிகளுக்கான மறுசந்திப்பு நிகழ்ச்சி ஒன்று கடந்த மாதம் நடத்தப்பட்டது. இதில் கீத் கேம்பல் உள்ளிட்ட அனைத்து விஞ்ஞானிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு

2012ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் சமாதானம், நல்லிணக்கம், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் மேம்பாட்டுக்கான ஆறு தசாப்தங்களுக்கு மேலாக பங்களித்தமைக்காக ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைரக்கல் கிரகம் கண்டுபிடிப்பு

ஒருபகுதி வைரத்திலான பூமியைப் போல 2 மடங்கு அளவுள்ள கிரகமொன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

55 கான்கிரியெனப் பெயரிடப்பட்ட இக்கிரகத்தை பிரெஞ்சு - அமெரிக்க ஆராய்ச்சிக்குழு கண்டுபிடித்ததென றியூட்டர் அறிக்கை தெரிவித்துள்ளது.

இக்கிரகத்தின் மேற்பரப்பு நீர் மற்றும் கருங்கல்லினால் மூடப்படவில்லையெனவும் இது காரீயம் மற்றும் வைரத்தினால் மூடப்பட்டுள்ளதாகவும் ரியூட்டர் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இக்கிரகத்தின் மேற்பரப்பின் வெப்பநிலை செல்ஸியஸிலும் கூடுதலானதென ஆய்வுகள் காட்டியுள்ளன. இக்கிரகத்தின் ஆரை பூமியின் ஆரையின் 2 மடங்காகவும் திணிவு 8 மடங்காகவும் உள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் முன்னரும் வைரக் கிரகங்களை கண்டுபிடித்துள்ளனர். ஆயினும் கான்கிரி கிரகம்தான் இவ்வளவு தூரம் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளதென பிரெஞ்சு - அமெரிக்க ஆராய்ச்சிக்குழு கூறியுள்ளது.

வைக்கோல் கொண்டு உருவாக்கிய ஆலயம்

இங்கிலாந்து நாட்டிலுள்ள ஒயிட்டிங்டான் என்ற கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் அந்த பகுதியில் நடக்கும் தேசிய கண்காட்சி போட்டிக்காக புதுமையான காட்சி பொருளை உருவாக்க நினைத்தனர்.

அதன்படி ரோப் கிராய்(50) என்ற விவசாயியின் தலைமையில் கூடி வைக்கோல் கொண்டு கிறிஸ்தவ தேவாலயம் போன்ற ஒரு பிரமாண்ட அமைப்பை ஏற்படுத்தினார்கள்.

இந்த வைக்கோல் தேவாலயம் 50 அடி உயரமும், 74 அடி நீளமும், 14 அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி ரோப் கிராய் கூறும்போது, வித்தியாசமாக இருக்க நினைத்து 12ம் நூற்றாண்டு தேவாலயத்தை மாதிரியாக வைத்து இதை அமைத்தோம். வரும் வாரத்தில் நடக்கும் தேசிய கண்காட்சியில் இதை வைப்போம் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள ஸாண்டமார்க் என்.ர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2012 ஒக்ரோபர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.